Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

விஷானி நகை மாளிகை


மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு



இல. 187, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
0212219510 (C/1675)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 17 ஞாயிற்றுக்கிழமை (02.09.2012) பக்கங்கள் 20 ஓசை – 336













## யாழ்., வன்னி மாவட்டங்களில்

# வாக்காளர் தொகை மேலும் குறைந்தது

(கொழும்பு)

நாடு முழுவதும் மொத்தமாக ஒரு கோடியே 42 இலட்சத்து 68 ஆயிரத்து 64 பேர் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்ட நிலையில் யாழ். மற்றும் வன்னி மாவட்டங்களில் மேலும் 17 ஆயிரத்து 489 வாக்காளர்கள் குறைவடைந்துள்ளதாகத் தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

தேர்தல் திணைக்களத்தின் தகவல்களின் படி கொழும்பு மாவட்டத்தில் 15 இலட்சத்து 12 ஆயிரத்து 670 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 15 இலட்சத்து 38 ஆயிரத்து 368 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 8 இலட்சத்து 53 ஆயிரத்து 609 பேரும், கண்டி மாவட்டத்தில் 10 இலட்சத்து 2 ஆயிரத்து 493 பேரும், மாத்தளை மாவட்டத்தில் 3 இலட்சத்து 59 ஆயிரத்து 796 பேரும், நுவரெலியா மாவட்டத்தில் 4 இலட்சத்து 88 ஆயிரத்து 133 பேரும், காலி மாவட்டத்தில் 7 இலட்சத்து 90 ஆயிரத்து 207 பேரும், மாத்தறை மாவட்டத்தில் 5 இலட்சத்து 95 ஆயிரத்து 868 பேரும், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 4 இலட்சத்து 42 ஆயிரத்து 60 பேரும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 4 இலட்சத்து 82 ஆயிரத்து 342 பேரும், வன்னி மாவட்டத்தில் 2 இலட்சத்து 21 ஆயிரத்து 409 பேரும்

மட்டக்களப்பு மாவட்டத்தில் 3 இலட்சத்து 47 ஆயிரத்து 99 பேரும், திகாமடுல்ல (அம்பாறை) மாவட்டத்தில் 4 இலட்சத்து 41 ஆயிரத்து 287 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் 2 இலட்சத்து 45 ஆயிரத்து 363 பேரும்,

19 ஆம் பக்கம் பார்க்க

## நாடு திரும்பினார் ஜனாதிபதி

(கொழும்பு)

அணிசேரா நாடுகளின் 16 ஆவது உச்சிமாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஈரான் சென்றிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினர் நேற்று நாடு திரும்பினர்.

இந்த விஜயத்தின் போது, பாகிஸ்தான் ஜனாதிபதி ஆஸிப் அலி சர்தாரி, பங்களாதேஷ் பிரதமர் திருமதி ஷேக் ஹஸீனா, ஈரானின் பிரதம தலைவர் ஆயதுல்லா அலி கொமேனி, ஈரான் ஜனாதிபதி மொஹமட் அஹமதி நிஜாத் மற்றும் லெபனான் ஜனாதிபதி ஜெனரல் மிசெல் சுலைமான் ஆகியோருடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பேச்சுவார்த்தைகளை நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

# இராணுவ உதவிகள் தொடரும் சீனப் பாதுகாப்பு அமைச்சர் உறுதி



(கொழும்பு)

இலங்கைப் படையினருக்கான உதவிகள் தொடர்ந்து வழங்கப்படும் எனவும் இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகள் தொடர வேண்டும் எனவும் சீன பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் லியாங் குவாங்லீ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவுடன் நேற்று முன்தினம் நடத்திய சந்திப்பின்போது, கூறியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சில் நடந்த சீன பாதுகாப்பு அமைச்சர் தலைமையிலான குழுவினருடனான இந்தச் சந்திப்பில், கோத்தாபய ராஜபக்ஷ தலைமையிலான இலங்கைப் பாதுகாப்பு அதிகாரிகளைக் கொண்ட குழு பங்கேற்றது.

குறைந்த செலவிலான இராணுவ உதவித் திட்டங்கள், ஆளணி பயிற்சிகளை விஸ்தரித்தல், கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்புகளை விஸ்தரித்தல், பயங்கரவாத ஒழிப்பு நிபுணத்துவத்தை பகிர்ந்துகொள்ளல் போன்ற துறைகளில் இரு நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பை அதிகரிக்கவும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க

# சுன்னாகம் மாணவன் பண்டாரவளையில் மாயம்

(கொழும்பு)

பண்டாரவளை பகுதியில் 15 வயதான மாணவரொருவர் காணாமற்போனமை தொடர்பில் பொலிஸாரால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பண்டாரவளை கோவிலொன்றுக்கு அண்மையில் குறித்த மாணவர் நேற்று முன்தினம் பிற்பகல் காணாமற்போனதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டது.

சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த மாணவரொருவரே இவ்வாறு காணாமற்போயுள்ளார். கல்விச் சுற்றுலாவுக்காக பண்டாரவளை சென்றிருந்த சந்தர்ப்பத்தில் குறித்த மாணவர் காணாமற்போனதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# பூட்டியிருந்த வீடு உடைத்து பணம், பொருள் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி, இராசவீதி தோப்புப் பகுதியில் நேற்று முன்தினம் வீடு ஒன்றுக்குள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்து 2 இலட்சத்து 65 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் மற்றும் 75 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

குறித்த தினம் காலை வீட்டைப் பூட்டிவிட்டு வீட்டிலிருந்தவர்கள் வெளியே சென்ற சமயமே இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். எனினும் சந்தேகநபர் எவரும் கைதுசெய்யப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(பா,02)

## ஜனாதிபதி மகிந்த இந்தியா விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 21 ஆம் திகதி இந்தியாவிற்கு செல்லவுள்ளார்.

இந்தத் தகவலை இந்திய நாடாளுமன்றின் எதிர்க் கட்சித் தலைவி சுஷ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார். புதுடில்லியில் நடைபெற்ற நிகழ்வொன்றிலேயே அவர் இவ்வாறு

19 ஆம் பக்கம் பார்க்க

# 80 ஆயிரம் ரூபா பணத்திற்காக தாயும் குழந்தையும் கடத்தல்

(யாழ்ப்பாணம்)

பணத்திற்காக 2 வயதுப் பெண் குழந்தையையும் தாயையும் கடத்தி அச்சுறுத்திய இருவர் யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதுடன், குறித்த பெண் குழந்தையும் தாயும் மீட்கப்பட்டதாக யாழ். பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

கடந்த 30 ஆம் திகதி யாழ்ப்பாணம் பற்றிக்ஸ் வீதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

80 ஆயிரம் ரூபா பணத்திற்காக குறித்த குழந்தையையும் தாயையும் கடத்திய ஒரு ஆணும் ஒரு பெண்ணும் உட்பட்ட இருவர் யாழ். நீதிமன்றத்தில் பொலிஸாரால் முற்படுத்தப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(பா,02)

# கூட்டமைப்பின் நகர சபையில் சுமந்திரன் உரைக்கு கண்டனம்



(மன்னார்)

இலங்கை தமிழரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் நாடாளுமன்றத்தில் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் கிறிஸ்தவர்களை அடையாளப்படுத்தி ஆற்றிய உரைக்கு மன்னார் நகர சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் மெரினஸ் பெரேரா கண்டனத் தீர்மானம் ஒன்றை கொண்டு வந்து நிறைவேற்றியுள்ளார்.

மன்னார் நகர சபையின் மாதாந்தக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற போது குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கடந்த 11 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இலங்கை தமிழரசுக்கட்சியின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் உரையாற்றினார். அவரது உரையில் அனைத்து மதத்தலைவர்களும் பாலியல் செயற்பாட்டில் ஈடுபட்டு வருவதாகவும் குறிப்பாக தான் ஒரு கிறிஸ்தவன் என்ற வகையில் கிறிஸ்தவர்களும் அதிகளவில் பாலியல் செயற்பாட்டில் ஈடுபட்டு வருவதாகவும் உரையாற்றியிருந்தார்.

அவரது

19 ஆம் பக்கம் பார்க்க

# 'வாத்து வாளி'யில் தவறிவீழ்ந்து 2 வயதுக் குழந்தை உயிரிழப்பு

(பொலிகண்டி)

கிணற்றடியில் தண்ணீர் நிரம்பியிருந்த 'வாத்து வாளிக்குள்' தவறுதலாக வீழ்ந்த 2 வயதுக் குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்தது.

வல்வெட்டித்துறை பள்ளம் தோட்டம் கொற்றாவத்தையைச் சேர்ந்த அ.அகிம்சயன் (வயது-2) என்ற, குழந்தையே இவ்வாறு தவறிவீழ்ந்து உயிரிழந்ததாகும். இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்று மாலை குழந்தையை வைத்துக்கொண்டு தாயார் உறங்கியுள்ளார். பின்னர் உறக்கம்

19 ஆம் பக்கம் பார்க்க

# பொலிஸ் தினத்தை முன்னிட்டு யாழ். நகரில் பேரணி





(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பொலிஸாரின் 146 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். சிவில் பாதுகாப்புக் குழுக்களும் யாழ். பொலிஸாரும் இணைந்து யாழ். நகரில் மாபெரும் பேரணி ஒன்றை நேற்று சனிக்கிழமை நடத்தியிருந்தனர்.

யாழ். தலைமைப் பொலிஸ் நிலையத்தில் இருந்து காலை 9.30 மணியளவில் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தலைமையில் இவ் ஊர்வலம் ஆஸ்பத்திரி வீதி ஊடாக கஸ்தூரியார் வீதியைச் சென்றடைந்து அங்கிருந்து பஸ் நிலையத்தின் ஊடாக யாழ். பொலிஸ் நிலையத்தினை வந்தடைந்தது.

பொது மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் உள்ள ஐக்கியத்தை வெளிக்காட்டும் முகமாக இந்தப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தப் பேரணியில் யாழ்ப்பாணம், மானிப்பாய், கோப்பாய், சாவகச்சேரி, போன்ற பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டதுடன் சூழலைப் பாதுகாப்போம், குற்றங்களைத் தடுப்போம், டெங்கு நோயை ஒழிப்போம், சிறுவர்களைப் பாதுகாப்போம், துஷ்பிரயோகங்களை ஒழிப்போம் போன்ற வாசகங்களைத் தாங்கியவாறு பேரணியில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர்.

அத்துடன் நாளை நாடுபூராகவும் பொலிஸாரின் 146 ஆவது ஆண்டு நிறைவு தினம் அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில் அன்றைய தினம் யாழ். மாவட்டத்தில் பொலிஸ் சேவையில் இருந்து ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகஸ்தர்களை கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளதுடன் அன்றைய தினம் ஆலயங்கள், விகாரைகள், பள்ளிவாசல்கள் மற்றும் தேவாலங்களில் விசேட பூசைகள் இடம்பெறவுள்ளதாக பொலிஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (02,பா)

# நயினாதீவு மக்களுக்கு போக்குவரத்து சிக்கல் தீருமா?

(நயினாதீவு)

அதிகரித்த சுற்றுலாப் பயணிகளால் தமது அன்றாட போக்குவரத்துக்களை மேற்கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்குவதாக நயினாதீவு மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். நயினாதீவில் இருந்து அன்றாடம் தமது தேவைகளுக்கு யாழ். வரும் பயணிகளும், நேர்த்திக்கடன் நிறைவேற்றுவதற்காக நயினாதீவிற்குச் செல்லும் அம்மன் அடியார்களும், சுற்றுலாப் பயணிகளின் அதிகரித்த வருகையால் பயணத்தில் கால தாமதம் ஏற்படுவதாகச் சுட்டிக்காட்டுகின்றனர்.

தமது அன்றாட கடமைகளைச் செய்வதற்கு போக்குவரத்திற்கு உரிய ஏற்பாடுகளை ஏற்படுத்தித் தருமாறு அம் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (175)

# புதிய மின்பிறப்பாக்கி யாழ்ப்பாணம் வந்தது



கொழும்பிலுள்ள லக்தனவி கம்பனி (Lakdhanavi Limited) என்ற நிறுவனத்தினால் தலா ஒவ்வொன்றும் 8 மெகாவோற் அலகுடைய பின்லாந்து நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட 03 இயந்திரங்கள் (24 மெகாவோற்) யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டன. நேற்று காங்கேசன்துறையிலிருந்து பலாலி வீதிவழியாக சுன்னாகம் மின்சார சபைக்கு புதிய இயந்திரம் மதியம் 1.00 மணிக்கு கொண்டுவரப்பட்டது.

யாழ். குடாநாட்டு மக்களின் மின் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கில் 24 மெகாவோற் கொள்ளவுடைய மின்பிறப்பாக்கிகள் லக்தனவி என்ற கம்பனியால் அரசாங்கத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் நேற்று ஒரு இயந்திரம் கொண்டுவரப்பட்டது. மற்றைய 02 இயந்திரங்களும் இன்று கொண்டுவரப்படும் என மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. இதனைக் கொண்டுவருவதற்கு சிங்கப்பூரைச் சேர்ந்த யோசூன் ராண்ஸ்போட் (Yew Choon Transport) என்ற கம்பனியின் வாகன ஒழுங்குடன் இயந்திரம் சுன்னாகத்திற்கு வந்து சேர்ந்தது. (02)

# கழிவுப் பொருட்களால் சீர்கெடும் சூழல்; நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை



சுன்னாகம் புத்தூர் வீதியில் உள்ள கிந்துசிட்டி மயானத்திற்கு அருகில் கழிவுப்பொருட்கள் கொட்டப்படுவதால் குறித்த சூழல் சீர்கெடுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்தக் கழிவுப் பொருட்கள் அகற்றப்படாமையால் அப்பகுதியால் பயணிப்போர் துர்நாற்றம் காரணமாகப் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பருத்தித்துறை வீதியையும் சுன்னாகத்தையும் இணைக்கும் பிரதான வீதியாக இந்தப் புத்தூர் வீதியுள்ளது, குறித்த வீதியில் நாள்தோறும் பெரும் எண்ணிக்கான பயணிகள் பயணம் செய்து வருகின்றனர்.

இந்தக் கழிவுப் பொருட்களை போடுவதற்கு அப்பகுதியில் ஒரு தொட்டி ஒன்று அமைக்குமாறு வலிகாமம் கிழக்கு பிரதேச சபையிடம் கோரிக்கை விடுக்கப்பட்ட போதும் இதுவரை எந்த நடவடிக்கையும் பிரதேச சபையினால் எடுக்கப்படவில்லை. இதனால் குறித்த பகுதியில் கழிவுப் பொருட்கள் தேங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

கிந்துசிட்டி மயானத்திற்கு அருகில் பெருமளவு கழிவுப் பொருட்களும் போத்தல்களும் குவிக்கப்பட்டிருக்கின்றது. (02)

# அத்துமீறல்

பொலிகண்டி கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த இந்திய மீனவர்களின் படகினால் பொலிகண்டி மீனவர்கள் கரைதிரும்பிய சம்பவம் வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. இவ்வாறு தொடர்ச்சியாக நிகழும் சம்பவங்களால் மீனவர்களின் ஜீவனோபாயம் பாதிப்படைவதாகப் பொலிகண்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ரி.கந்தசாமி தெரிவித்தார். (116)

MBT

சஞ்சிவ் குசன் வேக் சொப்



வாகனங்களிற்கான குசன் வேலைகள் மற்றும் வீட்டுத் தளபாடங்களிற்கான குசன் வேலைகளினை குறைந்த விலையில் மனம் நிறைவாகச் செய்து பெற்றிட நாடுங்கள்

கந்தசாமி கோவிலடி
கிளிநொச்சி
தொ.பே. 0777216124 (C/1923)

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணகத்தில் 02 . 07 . 1995



விண்ணகத்தில் 02 . 09 . 2010

செல்வி ஸ்ரீஸ்கந்தராஜா மதுஷா

அன்புள்ளம் கொண்ட மதுஷாவே
வண்ணப் பூ ஒன்று மண்ணில்
மலர்ந்து மறைந்து போனதுவோ
உன் நினைவுகளில்
ஏங்கித் தவிக்கின்றோம்
எழுந்தோடி வாறாயோ!

கச்சேரியடி,
நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்
தகப்பன் - ஸ்ரீஸ்கந்தராசா,
தாய் -செல்வராணி, தங்கை - துளசி

(C/1514)

UNIVERSITY OF JAFFNA, SRILANKA.
SERVICES OF WORKS SUPERVISOR (CIVIL) ON ASSIGNMENT BASIS AT ARIVIYALNAGAR, KILINOCHCHI

WALK IN INTERVIEW

Applications are invited from suitably qualified persons for the above post in order to carry out the following tasks:

- Supervison of Labourers
- Supervision of all Maintenance works
- Assist to Dean / Agriculture and Works Engineer on day activities.

**NOTE : Selected candidate Should reside in the working place at Ariviyal nagar, Kilinochchi. Accommodation facilities will be provided.**

Candidates, who are interested in the above, are requested to present themselves for an interview with their CV and relevant documents on 05.09.2012 at 10.00 a.m in the Board Room of this University.

**Qualifications :**

a. National Certificate in Technology (nct) or equivalent qualifications with 3 years experience may obtained while following the NCT Course.

OR

b. G.C.E. (Ordinary Level) Examination in 06 subjects at not more than 2 sittings with at least 5 years experince as a Supervisor, in the relevant filed in a Government, Local Government or State Corporation or a recognized Engineering Establishment.

**Remuneration : Rs. 22,500/= (fixed) per month.**

Registrar
30.08.2012 (C/1846)

# குற்றச் செயல்களைத் தடுக்க விழிப்புணர்வு யாத்திரை



(யாழ்ப்பாணம்)

இலங்கையின் 146 ஆவது பொலிஸ் சேவையின் பூர்த்தியாண்டை முன்னிட்டு குற்றச் செயல்களைக் குறைப்பதற்கான விழிப்புணர்வு யாத்திரை நேற்று வடமராட்சிப் பகுதியில் நடைபெற்றது.

காங்கேசன்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி காமினி பெரேரா தலைமையில் நடைபெற்ற இவ் யாத்திரை, கரவெட்டிப் பிரதேச செயலகத்திற்கு முன்பாக காலை 8.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு நெல்லியடி பேருந்து நிலையத்தைச் சுற்றி வந்து நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் 10.30 மணிக்கு முடிவடைந்தது.

சுமார் இரண்டு மணிநேரம் நடைபெற்ற இந்த யாத்திரையில் நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, பலாலி, இளவாலை, அச்சுவேலி, தெல்லிப்பழை, காகேசன்துறை போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த 8 பொலிஸ் நிலைய பொலிஸ் அதிகாரிகள், சிவில் பாதுகாப்பு உறுப்பினர்கள், கரவெட்டி பிரதேச சபைத் தலைவர் வியாகேசு, ஈ.பி.டி.பி உறுப்பினர் சி.கணபதிப்பிள்ளை, ஆட்டோ சங்கத் தலைவர் ரி.குணராஜசிங்கம் ஆகியோரும் மற்றும் பாடசாலை மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மத குருமார்கள், கிராம உத்தியோகத்தர்கள், பிரதேச சபை செயலக உறுப்பினர்கள், பொது மக்கள் என சுமார் இரண்டாயிரத்துக்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர்.

இதில் முக்கிய பதாகையாக புகைப்பிடித்தலை தடுப்போம், மதுப்பிரியர்களை இல்லாது ஒழிப்போம், குற்றச் செயல்களைத் தடுப்போம், பெண்களுக்கான துஷ்பிரயோகங்கள், சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுப்போம், வீதி விபத்துக்களைத் · தடுப்போம் போன்ற வகையிலான பதாகைகளை ஏந்தியவாறு பெருந்திரளான மக்கள் சென்றுள்ளனர். (12)

# பாடசாலைக்கு நிதி உதவி

(வரணி)

வடக்கு வரணி அ.த.க பாடசாலை புனரமைப்பு வேலைகள் இடம்பெற்று வருகிறன. இதற்கான நிதியை யுனிசெப் ஊடாக தென்மராட்சி கல்விவலயம் வழங்கியுள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

இந்த நிதியைக் கொண்டு தற்போது பாடசாலைக்கு வர்ணப் பூச்சு வேலைகள் நடைபெற்று வருகிறது. மேலும் தண்ணீர் விநியோகம் குழாய் மூலம் செய்ய இருப்பதாகவும் மற்றும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் கொள்வனவு செய்ய உள்ளதாகவும் பாடசாலை அதிபர் மேலும் தெரிவித்தார்.

இப்பாடசாலைக்கு சமையல் கூடம் இல்லாதிருந்த நிலையில் அண்மையில் புதிதாக சமையல் கூடம் அமைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (150)

# நெல்லியடியில் திருட்டு; கோப்பாயில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி மாலிசந்திப் பகுதியில் இருந்து திருடப்பட்ட ஹொண்டா ரக மோட்டார்சைக்கிள் கோப்பாய்ப் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து ஒருவரை கோப்பாய் பொலிஸார் கைது செய்திருப்பதாகவும் பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன. கடந்தவாரம் நடைபெற்ற இந்தச் சம்பவம் குறித்து நேற்று யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியலயத்தில் நடைபெற்ற வராந்த செய்தியாளர் சந்திப்பில் இந்ததகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# வல்லிபுர ஆழ்வார் வருடாந்த மகோற்சவம்

(வடமராட்சி)

சரித்திரப்பிரசித்தி பெற்ற ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மகோற்சவம் இம் மாதம் 14ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

14ஆம் திகதி பகல் 10.00 மணியளவில் கொடியேற்றம் நடை பெறும். 15ஆம், 16ஆம், 17ஆம், 18ஆம், 19ஆம் திகதிகளில் உள் வீதித்திருவிழா இடம்பெறும்.

20ஆம் திகதி வெளிவீதித் திருவிழா, 21ஆம் திகதி குருக்கட்டு விநாயகர் தரிசனத் திருவிழா, 22ஆம் திகதி வெண்ணெய்த்திரு விழா, 23ஆம் திகதி துகில் திருவிழா, 24ஆம் திகதி பாம்புத்திரு விழா, 25ஆம் திகதி கம்சன் போர்த்திருவிழா, 26ஆம் திகதி வேட்டைத் திருவிழா, 27ஆம் திகதி சப்பரத்திருவிழா மாலை 6.00 மணி, 28ஆம் திகதி தேர்த்திருவிழா காலை 8.00 மணி வசந்த மண்டப பூசை, 29ஆம் திகதி சமுத்திர தீர்த்தத் திருவிழா மாலை 5.00 மணி, 30ஆம் திகதி கோயில் தீர்த்தம் பி.ப.6.00 மணிக்கு கொடியிறக்கம்.

01ஆம் திகதி பிராயச்சித்தம், ஆஞ்சநேயர் உற்சவம், பகல் உற்சவங்கள் காலை 8.00 மணிக்கும் இரவு உற்சவங்கள் பிற்பகல் 4.30 மணிக்கும் ஆரம்பமாகுமென்றும் ஆலய அறங்காவலர் சபை அறிவித்துள்ளது. (01)

# அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

அராலி கிழக்கு மெய்ஞான வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்திருவிழா ஆரம்பமாகியுள்ளது. கடந்த 26ஆம் திகதி ஆரம்பமாகியுள்ள திருவிழா வரும் 5ஆம் திகதி வரை இடம்பெறும்.

அதிகாலை 5.30 மணியளவில் தீபாராதனைப் பூசைகளும், 9.30 மணி தொடக்கம் கும்ப பூசை, அபிஷேகபூசை 11.30 மணியளவில் யாவும் பூர்தியாகி யாழ்.போதனா வைத்தியசாலை முன்னாள் பிரதம மேற்பார்வையாளர் கு.கைலாசபிள்ளை அவர்களின் சொற்பொழிவு தொடர்ந்து நடைபெற்று வருகின்றது மாலை 5.30 மணிக்கு தீப பூசை இடம்பெறுகிறது.

# அதிசிறப்பு வகுப்பிற்கு தரமுயர்த்தப்பட்டுள்ளார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபைச் செயலாளர் திருமதி ருக்மணி சத்தியானந்தன் வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் மாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதிசிறப்பு வகுப்பிற்குப்பதவி உயர்த்தப்பட்டுள்ளதாக வடமாகாண பொதுச் சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது. திறமை வழிப்பரீட்சையின் அடிப்படையிலேயே இவர் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

1977ஆம் ஆண்டு கொழும்பு கல்வித் திணைக்களத்தில் நியமனம் பெற்று அரசாங்க சேவையில் புகுந்த இவர் கல்வியமைச்சு கல்விச்சேவை ஆணைக் குழு, யாழ் கல்வித்திணைக்களங்களில் பணியாற்றி வடமராட்சி வலயக்கல்வி அலுவலகத்திற்கு இடமாற்றம் பெற்று அங்கு நிதி உதவியாளராக நியமிக்கப்பட்டு இடமாற்றம் பெற்று பருத்தித்துறை நகரசபையில் நிர்வாக உத்தியோகத்தராகப் பணியாற்றினார். அங்கிருந்து யாழ்ப்பாண மாநகரசபைக்கு மாற்றம் பெற்று அங்கு செயலாளராகப் பணியாற்றி வருகிறார். இவர் வடக்கு மாகாண மொழி அபிவிருத்தி நிறுவனத்தினதும் வடமராட்சி வலய முறைசாராக் கல்விப் பிரிவினதும் சிங்களப் போதனாசிரியராகவும் பணியாற்றியவர். 2010 ஜனவரி மாதம் முதல் இவருக்கு முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதிசிறப்புப் பதவி வழங் கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது. (01)

# பாதுகாப்பு நிலையத்தில் விடப்பட்ட மோட்டார் சைக்கிளைக் காணவில்லை

(தொண்டைமானாறு)

தொண்டைமானாறு செல்வசந்நிதியில் தீர்த்தத் திருவிழாவின் போது சைக்கிள் பாதுகாப்பில் நிறுத்தி வைக்கப்பட்ட ஒரு மோட்டார் சைக்கிளும், துவிச்சக்கர வண்டி ஒன்றும் காணாமல் போனதாக அதன் உரிமையாளர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர்.

சுதுமலைப் பகுதியைச் சேர்ந்த சிவலிங்கம் றஜித்குமார் என்பவருடைய TVS XL ரக மோட்டார் சைக்கிளே காணமற்போயிருந்தது. குறித்த சயிக்கிளுக்குரிய பணம் பாதுகாப்பு நடத்துநர் கொடுப்பதாக உறுதியளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (116)

# கைப்பிடிகழன்ற பேருந்து; அசௌகரியத்தில் பயணிகள்

(புதுக்குடியிருப்பு)

கைப்பிடிக்கம்பி கழன்ற நிலையில் பயணிகளை ஏற்றி இறக்கும் பணியில் பேருந்து ஒன்று சேவையில் ஈடுபடுவதனைக் காணக் கூடியதாக இருக்கிறது.

கடந்த புதன்கிழமை காலை யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவுக்கு புறப்பட்ட அரச பேருந்து ஒன்று சாவகச்சேரி பேருந்து தரிப்பிடத்தில் பழுதடைந்து நின்றசமயம், அப்பேருந்தில் பணயம் செய்த பயணிகளுக்கு மாற்றீடாக வேறு ஒரு பேருந்து ஒழுங்கு செய்து விடப்பட்டிருந்தது.

இவ்வாறு ஒழுங்கு செய்து விடப்பட்டிருந்த 63-3090 என்ற இலக்க முடைய அரச பேருந்தினுள், பயணிகள் நின்ற நிலையில் பயணம் செய்யும் போது தங்கள் பாதுகாப்புக்காக மேலே பிடித்துக்கொள்ளும் கைப்பிடிக் கம்பியின் பெரும் பகுதி கழன்ற நிலையில் பயணிகள் மிகுந்த அசௌகரியப்பட்டதைக் காணக்கூயதாக இருந்தது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனமெடுத்து மேற்குறிப்பிட்ட இலக்கமுடைய பேருந்தின் கைப்பிடிக்கம்பியைச் சீர்செய்து அப்பேருந்தை சேவையில் ஈடுபடுத்துமாறு பயணிகள் கேட்டுக் கொள்கின்றனர். (138)

# உழைப்பே எங்கள் மூலதனம் உயர்வே எம்வாழ்வின் பிரதானம்

## கூறுகிறார் மீள்குடியேறிய அந்தோனி

(புதுக்குடியிருப்பு)

மூன்று வருடங்கள் செட்டிகுளம் - ஆனந்த குமாரசுவாமி முகாமில் இருந்து விட்டு இப்பொழுது சொந்த ஊருக்கு அதுவும் எங்களுடைய வீட்டுக்கு வந்து சேர்ந்ததைப் போன்ற சந்தோஷம், மகிழ்ச்சி வேறொன்றுமில்லை.

இவ்வாறு புதுக்குடியிருப்பு 10ஆம் வட்டாரம் சூசையப்பர் கோவிலடியைச் சேர்ந்த செபமாலை அந்தோனிமுத்து (வயது-53) என்பவர் மீள்குடி யேற்றம் செய்யப்பட்ட விடயம் தொடர்பாக தனது கருத்தைத் தெரிவித்தார்.

தொடர்ந்து இவர் மேலும் கூறியதாவது; நடந்து போன சம்பவங்களை நினைத்துக் கவலைப்படுவதை விட இனி நடக்கப்போற சம்பவங்கள் நல்லதாக நடக்கட்டுமெனக் கடவுளைப் பிரார்த்திப்போம். இழப்பு என் பது ஒருவர் இருவருக்கல்ல. ஊரோடு சேர்ந்த இழப்புத்தான். ஆகையினால் மனதில் சோகத் தைச் சுமந்து கொண்டு எஞ்சி யுள்ள காலத்தை துன்பமயமாகக் கழிப்பதை விட, உடலில் வலு இருக்கும் வரைக்கும் உழைத்து முன்னேற முயற்சிப் போம்.

கடந்த கால அனர்த்தங்கள் போன்று இனி எம்வாழ்க்கை யில் வராதபடி சூழ்நிலைகள் அமையுமானால், நாடு மட்டு மல்ல, நம்மைப் போன்ற போரால் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரும் ஒரு முன்னேற்ற கரமான நிலைக்கு வருவார்கள் என்றே நம்புகின்றேன்.

ஏனெனில், நாங்கள் உழைப்பை நம்பி வாழ்ந்தவர்கள். முன்பு தேடிய இருப்புகள் அனைத்தும் இழந்தும், தொலைந்தும் போன நிலையில், இனி எங்களுடைய உழைப்பாலும் விடாமுயற்சியாலும் பழைய நிலைக்கு வருவோம் என்ற நம்பிக்கை எனக்குண்டு என அவர் மேலும் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார். (138)

நீ நடந்து போக பாதை இல்லையே என்று கவலைப்படாதே, நீ நடந்தால் அதுவே ஒரு பாதை. - அடோல்ப் ஹிட்லர்

தினப்பத்திரிகை
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## மடியிலிருக்கும் வாய்ப்பாட்டு மட்டை!

ஆனையிறவில் கடற்படை முகாம், கரைச்சியில் நிரந்தரப் படைமுகாம், நிலம் பறிபோகிறது என்றெல்லாம் இப்போது உணர்ச்சிகர நாடகமாய்ப் புலம்பி என்ன? இந்த நிலைமைக்கு கொண்டுவந்து விட்ட தலைமைகளும் ஆய்வாளர்களும் ஊடகங்களும் தங்களது தவறுகளைச் சுயவிமர்சனம் செய்து, யதார்த்தத்தை எதிர்கொண்டு மேல்நகர இப்போதும் தயாரில்லை. தவிர்க்க முடியாதவற்றைப் புரிந்துகொண்டு, தவிர்க்கக் கூடியவற்றைத் தடுப்பதற்கான குறைந்தபட்ச விவேகத்தையும் காண்பிப்பதாயில்லை.

சவால் விட்டுச் சவால் விட்டு மேலும் மேலும் அழிவோம் பந்தயம் பிடி என்பதையே தமிழ்ரோசமாய்க் கடைவிரிக்கிறார்கள். வெறும் வீரம் பேசி எதிர்ப்பைக் காட்டுவதோடு சரி, எதையும் தடுத்து நிறுத்திய வரலாறு இவர்களிடமில்லை. இவர்களது உளுத்த சவால்களுக்குப் பதிலடியாகவே மேலும் மேலும் பாதகமான நிலைமைகள் உருவாகும்போதெல்லாம், பள்ளிச் சிறார்களைப் போல ஆற்றாக்கொடுமையில் "சர்வதேசத்திடம் சொல்கிறோம் பார்" என்பதே இவர்களது அதிகபட்ச 'அரசியல் சாமர்த்தியமாக' இருக்கிறது.

மக்களையோ சமூகத்தையோ காப்பாற்றும் நடைமுறைச் சாமர்த்தியத்தை இவர்கள் எந்தக் காலத்திலும் காண்பித்ததில்லை. பேசிப் பேசியே நம்மை இக்கதிக்குக் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறார்கள். மகா துயரம் என்னவென்றால், நம்மில் பலர், நாம் இன்று சரிந்து வீழ்ந்து கிடக்கும் பள்ளத்தையே விளங்கிக் கொள்ளாமல், இவர்களது வீரவசனங்களில் திருப்தியடைந்து சிலிர்த்துக் கொண்டிருப்பதுதான்!

இது ஒருபக்கமென்றால், மறுபக்கம் வாக்காளர் கணக்கெடுப்பில் விழுந்திருக்கும் அடியும் இவர்களுக்கு உறைப்பதாயில்லை. அதுபற்றி மக்களுக்கு உணர்ச்சிகரப் பூச்சாண்டி காட்ட ஏதுமில்லை என்பதால், 'படையினர் இங்கிருந்து விலகிவிட்டால் எல்லாப் பிரச்சினையும் தீர்த்துவிடுவோம்' என்று பேச்சுப் பாவலா பண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

போருக்கு முன் 8 இலட்சத்து 40 ஆயிரத்துக்கு மேலிருந்த யாழ் மாவட்ட வாக்காளர் எண்ணிக்கை இப்போதைய கணக்கெடுப்பில் 4 இலட்சத்து 82 ஆயிரமாகியிருக்கிறது. 4 இலட்சத்துக்கு மேலிருந்த வன்னி மாவட்ட வாக்காளர் எண்ணிக்கை 2 இலட்சத்து 21 ஆயிரமாகக் குறைவடைந்திருக்கிறது. இதனால் அடுத்த தேர்தலில் யாழ் மாவட்டத்திலும் வன்னியிலும் சேர்த்து 5 நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் குறையப் போகிறது. இவர்களது பூச்சாண்டி அரசியலால் இப்போது இந்த நிலைமையும் வந்துவிட்டிருக்கிறது.

கல்வியில் பின்னடைந்து, பொருளாதாரத்தில் பின்னடைந்து, வாழ்க்கை வசதிகளில் பின்னடைந்து, இன்று பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்திலும் பின்னடைந்திருக்கிறோம். இதுவெல்லாம் சிங்கள அரசின் சதி என்று சொல்லிக் கொண்டிருப்பதொன்றே நமக்குத் தெரிந்த அரசியல் சாணக்கியமாக இருக்கிறது! ஐயன்மீர் கொஞ்சம் ஆவேசத்தை நிறுத்தி, அப்பால் செய்யக்கூடியதை யோசியுங்கள் என்று கேட்டுக்கொண்டால், உடனே "நிலம் பறிபோகிறது, இராணுவம் உலவுகிறது, சர்வதேசம் பொங்கியெழுந்து விட்டது..." என்று தயாராய் மடியில் வைத்திருக்கும் வாய்பாட்டை எடுத்துப் பாடமாக்கத் தொடங்கிவிடுகிறார்கள்.

எவ்வளவு காலத்துக்குத்தான், இவர்கள் பாடமாக்குவதைப் பாடமாக்கி முடித்துக் கணக்குச் செய்யத் தொடங்குவார்கள் என்று மக்கள் காத்திருப்பது? இந்தத் தலைமைகளுக்குக் கணக்குச் செய்யத் தெரியாது என்பதையே கடந்த அறுபதாண்டு காலமாகக் காட்டிவருகிறார்கள். ம்... அவர்களையே குறை சொல்லியும் தான் என்ன?

- ஆசிரியர்

# முதியோர் உரிமைகள் பாதுகாப்பு ஐ.நா.சாசனத்துக்கு ஆலோசனை

## — இலங்கை மனித உரிமை ஆணைக்குழு தயாராகிறது —

(கொழும்பு)

வயோதிபர் உரிமைகளுக்கான சர்வதேச சாசனமொன்றை வகுப்பதற்காக ஐக்கிய நாடுகள் சபை மேற்கொண்டுள்ள முனைப்புக்களுக்கு சார்க் வலய நாடுகள் சார்பாக யோசனைகளை முன்வைப்பதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

உலக நாடுகளில் வயோதிபர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வது குறித்து ஐக்கிய நாடுகள் சபை தற்போது கவனம் செலுத்தியுள்ளதுடன், அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துவருவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் கலாநிதி பிரதீபா மஹாநாமஹேவா குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையிலும் 2020ஆம் ஆண்டளவில் வயோதிபர்களின் எண்ணிக்கை 50 வீதத்தைவிட அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக அவர் கூறியுள்ளார்.

எனினும் வயோதிபர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டங்கள் 2000ஆம் ஆண்டில் இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதன் அடிப்படையில் சார்க் வலய நாடுகளுடன் இணைந்து வயோதிபர் உரிமைகள் குறித்த யோசனைகளை ஐக்கிய நாடுகள் சபையிடம் சமர்ப்பிக்க திட்டமிட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

எனவே இலங்கை சார்பான யோசனைகளை திரட்டுவதற்காக குறிப்பாக வடக்கு, கிழக்கு உட்பட நாடு முழுவதும் அடுத்த வாரம் முதல் சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் கலந்துரையாடல்களையும் கருத்தரங்குகளையும் நடத்துவதற்கான ஏற்பாடுகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது.

# மருத்துவமனையில் முறைகேடு; சட்டமா அதிபருக்கு அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் நடைபெற்ற முறைகேடுகள் மற்றும் வைத்தியர் ஜெயக்குமாரின் வீடுமீது கழிவு ஓயில் வீச்சுச் சம்பவங்கள் தொடர்பான பொலிஸ் விசாரணை அறிக்கை சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக யாழ். பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக்பெரேரா தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்ட அவர் இத்தகவலைத் தெரிவித்தார். யாழ். போதனாவைத்தியசாலை வளாகத்தில் இருந்து முறையற்ற விதத்தில் இரும்புக் கேடர்கள், மின்பிறப்பாக்கி என்பன வெளியே கொண்டு செல்லப்பட்டமையும் பின்னர் அவை மீளக்கொண்டு வரப்பட்டமையும் தொடர்பாக நடைபெற்ற முறைகேடு மற்றும் இந்த விடயங்களில் தகவல்களை பொலிஸாருக்கு மற்றும் ஊடகங்களுக்கு வெளிப்படுத்திய யாழ். போதனாவைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சை வைத்திய அதிகாரி வைத்தியர் ஜெயக்குமாரின் வீடு கழிவு ஓயில் வீச்சிற்கு இலக்கானமை குறித்து மூன்று பிரிவுகளாக இந்த விசாரணை அறிக்கை அமைந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். அத்துடன் வைத்தியர் ஜெயக்குமாரும் தமது வீடு கழிவு ஓயில்வீச்சுக்கு இலக்கானமை குறித்து முறைப்பாடு ஒன்றை வழங்கியிருப்பதாகவும் தெரிவித்த பிரதிப் பொலிஸ் மா அதிபர், சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்று இந்தச் சம்பவத்தின் சந்தேக நபர்களைக் கைது செய்வது குறித்து தீர்மானிக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டார். (பா)

# வடக்கு நோக்கிப் படையெடுக்கும் தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகள்

(யாழ்ப்பாணம்)

கடந்த சில நாட்களாக யாழ். நகரிற்கு வரும் தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகள் மற்றும் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதன் காரணமாக யாழ். நகரில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டிருப்பதாக யாழ். பொலிஸ் தகவல்கள் தெரிவித்துள்ளன.

நேற்று முன்தினம் போயா விடுமுறை அத்துடன் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை ஆகிய நாட்களும் அரசாங்க விடுமுறை நாட்களாக இருப்பதன் காரணமாக இந்த நீண்ட விடுமுறை நாட்களைக் கழிப்பதற்காக தென்பகுதி சுற்றுலாப் பயணிகள் அதிகமாக யாழ். நகரிற்கு வந்திருப்பதன் காரணமாகவே அவர்களது வாகனங்களினாலும் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இருந்தும், இந்தப் போக்குவரத்து நெருக்கடியை சமாளிப்பதற்கு மேலதிக பொலிஸார் சனநெரிசல் கூடிய இடங்களுக்கு அனுப்பப்பட்டு போக்குவரத்தைச் சீர்செய்து வருவதாக யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை காங்கேசன்துறை வீதியும் புனரமைப்புச் செய்யப்படுவதன் காரணமாக அவ்வீதியூடாக நயினாதீவு செல்லும் தென்பகுதி சுற்றுலாப் பயணிகளின் வாகனங்களும் கொட்டடி வீதியூடாகவே பண்ணைக்கு பயணிக்கின்றன.

அத்துடன் தீவுப்பகுதிக்கான வாகனங்களும் இந்த வீதி ஊடாகவே பயணிக்கின்றன. இதனாலும் குறுகிய அந்த வீதியில் வாகன நெருக்கடி ஏற்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# அணுமின் நிலையத்தால் ஆபத்தா? சமரசப் பேச்சுக்கு தயாராகும் அரசு

(கொழும்பு)

தமிழ்நாடு கூடங்குளம் அணுமின் நிலையத்தினால், இலங்கைக்கு ஏற்படும் பாதிப்புத் தொடர்பில் இந்திய அரசாங்கத்துடன் கலந்துரையாட அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இது தொடர்பில் கருணாதிலக அமுனுகம தெரிவித்ததாவது, பேச்சுவார்த்தை ஒன்றினை இந்திய மத்திய அரசாங்கத்துடன் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இந்தச் சந்திப்பில் இலங்கை, இந்திய அணு மின் நிலையங்கள் தொடர்பான நிபுணர்களும் பங்குகொள்வர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னர் இலங்கை சுற்றுச்சூழல் நிபுணர்களினால் வெளியிடப்பட்ட கருத்துக்களுக்கு அமைய, தென்னிந்திய அணு மின் நிலையம் இலங்கையில் இருந்து 240 கிலோமீற்றர் தூரத்திலேயே உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மிகக் கிட்டிய தூரத்தில் இந்த நிலையம் அமைவது இலங்கைக்கு பாதிப்பைத் தரலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கூடங்குளம் அணு மின் நிலையத்தின் முதலாம் மற்றும் இரண்டாம் கட்ட நடவடிக்கைகள் குறித்து விசாரணைகளை மேற்கொண்ட சென்னை உயர்நீதிமன்றம், அதனால் எந்தவிதமான பாரிய பாதிப்புக்களும் இந்தியாவிற்கு ஏற்படப் போவதில்லை எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ் மக்களைத் தொடர்ச்சியாக ஏமாற்றும்

# கூட்டமைப்பின் புலுடா அரசியல்

**■ சங்கர சிவன்**

மக்களுக்கு அரசியல் தலைமை வழங்குபவர்கள் தங்களை அந்த நிலைக்கு உயர்த்தி வைத்த மக்களுக்கு எப்போதும் விசுவாசமாக இருக்கவேண்டும். விசேடமாக, சிறுபான்மை சமூகமொன்றுக்குத் தலைமை தாங்குபவர்கள் அந்தச் சமூகத்தின் விமோசனம் தொடர்பாக மக்கள் கொண்டிருக்கும் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதிலேயே கண்ணுங் கருத்துமாக இருப்பதுதான் உண்மையான தலைமைப் பண்பு.

வெவ்வேறு பெயர்களில் ஒரே அணியினரே அறுபத்தைந்து வருட காலமாக தமிழ் மக்களுக்கு அரசியல் தலைமை வழங்கி வருகின்றார்கள். தமிழ் மக்களின் இன உரிமை தொடர்பான எதிர்பார்ப்புகளில் சிறிதளவாவது இந்த நீண்ட காலப் பகுதியில் நிறைவேறாதிருப்பதற்கு இந்தத் தலைமையே பெருமளவில் பொறுப்பேற்கவேண்டும். சுதந்திர இலங்கை இனப்பிரச்சினையுடனேயே தனது பயணத்தை ஆரம்பித்தது. முதலாவது நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழரின் ஒரே கட்சியாகப் போட்டியிட்ட தமிழ்க் காங்கிரஸ் கட்சி ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்தில் இணைவதா என்ற கேள்வி எழுந்த போது இணைவதற்கு எஸ்.ஜே.வி. செல்வநாயகம் விதித்த நிபந்தனைகளுள் சமஷ்டி அரசியலமைப்பொன்றைத் தயாரிப்பதற்காக அரசியலமைப்பு நிர்ணய சபையொன்றை நிறுவ வேண்டும் என்பதும் ஒன்று. அந்தக் காலத்திலேயே இனப் பிரச்சினை இருந்ததாலேயே இந்த நிபந்தனை முன்வைக்கப்பட்டது. சுதந்திர இலங்கையின் முதலாவது அரசாங்கம் இந்திய வம்சாவளியினரின் பிரசாவுரிமையையும் வாக்குரிமையையும் பறித்தது. இலங்கைத் தமிழருக்கு இனப் பிரச்சினை. இந்திய வம்சாவளியினருக்கு நாடற்றோர் என்ற பிரச்சினை. இரண்டு பிரச்சினைகளுக்கும் சம வயது எனலாம். இன்று இந்திய வம்சாவளியினருக்குப் பிரசாவுரிமையும் கிடைத்திருக்கின்றது, வாக்குரிமையும் கிடைத்திருக்கின்றது. இது அந்த மக்களின் தலைமை ஈட்டிய சாதனை. இலங்கைத் தமிழரின் பிரச்சினை தீரவில்லை. அது மோசமான பரிமாணத்தை அடைந்திருக்கின்றது. தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகளும் அழிவுகளும் ஏராளம். இது இந்த மக்களின் தலைமை ஈட்டிய சாதனை!



இனப்பிரச்சினைக்குத் தீர்வைத் தான் பெற்றுக் கொடுக்கவில்லை. தமிழ் மக்களின் வாழ்வில் வளத்தையாவது ஏற்படுத்தினார்களாவென்றால் அதுவும் இல்லை. தமிழ் மக்களின் பொருளாதாரப் பிரச்சினைகளை இத்தலைவர்கள் கவனத்தில் எடுக்கவில்லை. மக்களின் சமூக முரண்பாடுகளைத் தீர்த்து வைப்பதற்கு ஒருபோதும் முயற்சிக்கவில்லை. பிரதேச அபிவிருத்தியிலும் கவனம்செலுத்தவில்லை.

ஆனால், தங்களை மாத்திரம் அபிவிருத்தி செய்து கொண்டார்கள். இன்றையதலைவர்கள் அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்த காலத்தில் இருந்ததைவிடப் பல மடங்கு கூடுதலான வளத்தை இப்போது அடைந்திருக்கின்றார்கள்.

இன ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் தமிழ் மக்களின் விமோசனத்துக்கான செயற்பாடுகளை முன்னெடுக்காததை மன்னித்தாலும் தங்களில் நம்பிக்கை வைத்திருக்கும் மக்களை ஏமாற்றுவதை மன்னிக்க முடியாது. வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்பைத் துரிதப்படுத்துவதற்காகத் தங்களுக்கு வாக்களிக்கும்படி தலைவர்கள் முதல் வேட்பாளர்கள் வரை பிரசாரம் செய்கின்றார்கள். இது தமிழ் மக்களுக்குச் சொல்வது. ஆங்கில ஊடகங்களுக்கு வேறு கதை.

ஏசியா ட்ரிபியூன் என்ற இணையத் தளத்துக்கு ஜூன் 29ஆம் திகதி சம்பந்தன் ஒரு பேட்டி அளித்தார். அதிகாரப் பகிர்வு தொடர்பான அந்தப் பேட்டியில் "பிரதேச அரசாங்கம் என்று எதைக் கருதுகின்றீர்கள்" என்று கேட்கப்பட்ட கேள்விக்குச் சம்பந்தன் அளித்த பதிலைப் பாருங்கள்.

"இது ஒரு மாகாணமாக இருக்கலாம். இது மூன்று மாகாணங்களாகவும் இருக்கலாம். இது ஐந்து மாகாணங்களாகவும் இருக்கலாம். எதுவாகவும் இருக்கலாம்."

> **இலங்கைத் தமிழருக்கு இனப்பிரச்சினை. இந்திய வம்சாவளியினருக்கு நாடற்றோர் என்ற பிரச்சினை. இரண்டு பிரச்சினைகளுக்கும் சம வயது எனலாம். இன்று இந்திய வம்சாவளியினருக்குப் பிரசாவுரிமையும் கிடைத்திருக்கின்றது, வாக்குரிமையும் கிடைத்திருக்கின்றது. இது அந்த மக்களின் தலைமை ஈட்டிய சாதனை. இலங்கைத் தமிழரின் பிரச்சினை தீரவில்லை. அது மோசமான பரிமாணத்தை அடைந்திருக்கின்றது. தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகளும் அழிவுகளும் ஏராளம். இது இந்த மக்களின் தலைமை ஈட்டிய சாதனை!**

பிரதேச அரசாங்கம் ஒரு மாகாணமாகவும் இருக்கலாம் என்றும் எதுவாகவும் இருக்கலாம் என்றும் ஆங்கில இணையத்துக்குக் கூறுகின்றார். வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைய வேண்டும் என்று தமிழ் மக்களுக்குக் கூறுகின்றார். வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைந்த அலகையே பிராந்திய அரசாங்கமாக நாங்கள் ஏற்போம் என்று ஆங்கில இணையத்துக்கு ஏன் கூறவில்லை? இது தமிழ் மக்களை ஏமாற்றும் செயல் அல்லாமல் வேறு என்ன?

இவர்களின் ஒற்றுமைக் கோஷமும் இது போன்றதே. தமிழ் மக்கள் அனைவரும் ஒற்றுமையாகக் கூட்டமைப்புக்கு வாக்களிக்க வேண்டும் என்று கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் பிரசாரம் செய்கின்றார்கள். ஆனால், இவர்களுக்குள் ஒற்றுமை இல்லை. தமிழரசுக் கட்சியின் மேலாதிக்கத்துக்கு எதிராகக் கூட்டமைப்பின் மற்றைய கட்சிகள் கொதித்தெழுகின்றன. தமிழரசுக் கட்சியின் முடிவைப் பகிரங்கமாக எதிர்க்கவிருந்தபோதிலும் ஆதரவாளர்களும் புலம்பெயர் சமூகமும் கேட்டுக்கொண்டதன்பேரில் அவ்வாறு செய்யவில்லை என்றும் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் முடிந்ததும் வித்தியாசமான நிலைப்பாட்டை எடுக்கவிருப்பதாகவும் ஏசியா ட்ரியூன் இணையத்துக்கு சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறியது கூட்டமைப்புக்குள் ஒன்றுமையின்மை நிலவுவதையே காட்டுகின்றது.

வெவ்வேறு கட்சிகளுக்கிடையில் மாத்திரமன்றி ஒரே கட்சிக்குள்ளேயே ஒற்றுமை இல்லை. தமிழரசுக் கட்சியின் தலைவருக்கும் செயலாளருக்குமிடையே முரண்பாடு. தலைவர் சிங்கக்கொடி ஏந்தியதற்குத் தமிழ் மக்களிடம் செயலாளர் மன்னிப்புக் கேட்டார். இவர் மன்னிப்புக் கேட்டதை அவர் கண்டித்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று பெயர் வைத்துக் கொண்டபோதிலும் தங்களுக்குள் ஒற்றுமைப்பட முடியாத இவர்கள் தமிழ் மக்கள் ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்று கோரிக்கை விடுப்பது வேடிக்கையாக இருக்கின்றது.

> **கிழக்கு மாகாண சபைத் தேர்தல் பிரசாரத்தில் என்னென்ன சொல்கின்றார்களோ அவற்றையெல்லாம் வடமாகாண சபைத் தேர்தல் பிரசாரத்திலும் சொல்வார்கள். பின்னர் நாடாளுமன்றத் தேர்தலிலும் அவற்றையே சொல்வார்கள்.**

தலைவர்கள் தங்களுக்குள் ஒற்றுமைப்படாதிருப்பது அவர்களின் சொந்த விடயமென்றால் அதைப் பற்றி யாரும் அக்கறைகாட்ட வேண்டியதில்லை. ஆனால், இது தமிழ் மக்களின் எதிர்காலத்தை நேரடியாகப் பாதிக்கின்றது. கூட்டமைப்புக்குள் ஒன்றுபட்ட கருத்துநிலை இல்லாததாலேயே இனப்பிரச்சினையின் தீர்வுக்கான கொள்கையொன்றை வகுத்து முன்வைக்க முடியவில்லை. கட்சிக்குள் நிலவும் முரண்பாட்டைப் பொருட்படுத்தாமல் பெரும்பான்மை முடிவோடு தீர்வுத் திட்டமொன்றை முன்வைத்தால் கூட்டமைப்பு உடைந்துவிடும் என்ற அச்சம். அதனால், உலகில் எந்த விடுதலை இயக்கமும் செய்யாததைச் செய்கின்றார்கள். இனப்பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வொன்றை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சொல்கின்றார்கள். அரசாங்கம் எந்தத் தீர்வை நடைமுறைப்படுத்தினாலும் ஏற்பார்களா?


ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வை நாடுகின்றோம் என கூறுவது தீர்வுத் திட்டமல்ல. ஐக்கிய இலங்கையில் மாவட்ட சபை, மாகாண சபை, பிராந்திய சபை, சமஷ்டி எனப் பல தீர்வு வடிவங்கள் உள்ளன. அரசாங்கம் இவற்றுள் எதை நடைமுறைப்படுத்தினாலும் கூட்டமைப்பு ஏற்றுக் கொள்ளுமா? தீர்வுத்திட்டமொன்றைத் தயாரித்து இதுதான் நாங்கள் கூறும் தீர்வு எனப் பிரகடனப் படுத்தி அந்த அடிப்படையில் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி இணக்கத்துக்கு வரலாம். அதைவிட்டு, அரசாங்கம் தீர்வை நடைமுறைப் படுத்த வேண்டும் என்று அரசாங்கத்துக்கு 'திறந்த காசோலை' வழங்குவது தீர்வுக்கான பொறுப்பை அரசாங்கத்துக்குக் கையளிப்பதாகிவிடும். முன்னைய தலைமைகளான தமிழரசுக் கட்சியும், தமிழர் விடுதலைக் கூட்டணியும் எந்தக் கொள்கையும் இல்லாமல் தமிழ் மக்களை வழிநடத்த வரவில்லை.

கொள்கையொன்றை முன்வைப்பதற்கு இயலாத நிலையில், சர்வதேசம் தீர்வைப் பெற்றுத் தரும் எனக் கூறித் தப்பிப்பதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சிக்கின்றது. இது அழும் குழந்தைக்குச் சந்திரனைக் காட்டி உணவூட்டுவது போன்ற ஏமாற்று வித்தை. சர்வதேசம் பெற்றுத் தரப்போவது எந்தத் தீர்வை என்று கூட்டமைப்புத் தலைவர்களால் சொல்ல முடியுமா? தாங்களே சர்வதேச சமூகத்தைச் செயற்பட வைப்பதாகப் பெருமை பேசுபவர்கள் எந்தத் தீர்வைச் சர்வதேச சமூகம் பெற்றுத் தரும் என்பதையும் சொல்ல வேண்டும்.

தங்கள் இயலாமையை மூடி மறைப்பதற்கே கூட்டமைப்பு சர்வதேச சமூகத்தைத் துணைக்கு அழைக்கின்றது. தமிழ் மக்களைத் தொடர்ச்சியாக ஏமாற்றிக் கொண்டிருக்கும் புலுடா அரசியலைப் புரிந்து கொள்வதற்குத் தமிழ் மக்களுக்கு இன்னும் எவ்வளவு காலம் தேவையோ! கிழக்கு மாகாண சபைத் தேர்தல் பிரசாரத்தில் என்னென்ன சொல்கின்றார்களோ அவற்றையெல்லாம் வடமாகாண சபைத் தேர்தல் பிரசாரத்திலும் சொல்வார்கள். பின்னர் நாடாளுமன்றத் தேர்தலிலும் அவற்றையே சொல்வார்கள். ●

# இந்தியாவைத் திருப்திப்படுத்த இலங்கை அரசு முயற்சிக்கிறதா?

## விக்கிலீக்ஸ் வெளியிடும் தகவல்



யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியமர்த்தும் விடயத்தில் இந்தியாவைத் திருப்திப்படுத்தும் வகையில் இலங்கை அரசு செயற்பட்டு வருவதாக இந்திய வெளிவிவகாரச் செயலாளர் சிவசங்கர் மேனன் கருத்து வெளியிட்டதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

புதுடில்லிக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகளினால் அநநாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட குறிப்பில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இடம்பெயர் மக்களை பார்வையிடுவதற்கு அனுமதியளிக்குமாறு சர்வதேச சமூகம் விடுத்து வரும் கோரிக்கையை இலங்கை ஏற்றுக் கொண்டதா என இந்தியாவிற்கான அமெரிக்கத்தூதுவர், சிவசங்கர் மேனனிடம் கேள்வி எழுப்பியிருந்தார்.

இடம்பெயர் மக்கள் விவகாரத்தில் தற்போதைக்கு இந்தியாவை திருப்திப்படுத்தும் வகையில் இலங்கை அரசாங்கம் செயற்பட்டு வருவதாக சிவசங்கர் மேனன் தெரிவித்திருந்தார்.

எனினும், இடம்பெயர் மக்களின் நலன்புரி மற்றும் நீண்டகால குறுகியகால அரசியல் தீர்வுத் திட்ட அமுலாக்கம் போன்றன தொடர்பில் தற்போதைக்கு எதனையும் குறிப்பிட முடியாது என அவர் குறிப்பிட்டிருந்தார். 2009 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 2 ஆம் திகதி இந்தக் குறிப்பு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

தமிழ் இடம்பெயர் மக்கள் நிலைமை மற்றும் அரசியல் தீர்வுத் திட்டம்குறித்த இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டை அறிந்து கொள்ள இந்தியா ஆர்வம் காட்டிவருவதாகக் குறிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# பணிப்பாளர் குழு இராஜினாமா

(கொழும்பு)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் பணிப்பாளர் குழு இராஜினாமா செய்துள்ளது. இந்தப் பணிப்பாளர் குழுவில் 11 பேர் அங்கத்துவம் வகிக்கின்றனர்.

பணிப்பாளர் குழுவின் பதவி விலகல் குறித்து இளைஞர் விவகார மற்றும் திறன்விருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெருமவிடம் நியூஸ் பெஸ்ட் வினவியபோது, தொழிற்பயிற்சி அதிகார சபை தொடர்பில் உள்ளக ரீதியான அமைச்சு மட்ட விசாரணைகள் நடைபெறுவதாக அவர் குறிப்பிட்டார்.

விசாரணைகளை சுயாதீனமாக முன்னெடுப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் டலஸ் அழகப் பெரும கூறினார்.

எனினும், பணிப்பாளர் குழுவை அடுத்த வாரமளவில் மீண்டும் நியமிக்க எண்ணியுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# பல்கலை கல்விசார் ஊழியர்களின் தொழிற்சங்க போர் தொடரும் அறிகுறி

## சமரசப் பேச்சுக்கள் முறிவு



(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளர்கள் ஒன்றியத்திறகும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் எந்த முடிவுகளையும் எட்டாத நிலையில் நிறைவுக்கு வந்துள்ளன.

பல்கலைக்கழகங்களின் விரிவுரையாளர்கள் ஒன்றியத்தினால் அமைச்சரவையின் பரிசீலனைக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணம் நேற்றுமுன்தினம் சந்திப்பின்போது விரிவாக ஆராயப்பட்டதாக ஒன்றியத்தின் தலைவர் நிர்மல் ரஞ்சித் தேவசிறி தெரவித்தார்.

பேச்சு வார்த்தைகளில் முடிவுகள் எதுவும் எடுக்கப்படாத நிலையில் தம்மால் ஆரம்பிக்கப்பட்டுள்ள பணி நிறுத்தப் போராட்டம் தொடரும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எங்களது தொழிற்சங்க நடவடிக்கைகள் குறித்தும் எமது எதிர்பார்ப்புக்கள் குறித்தும் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலைமையிலான குழுவுடன் பேச்சுவார்தைகளை நடத்தினோம்.

குறிப்பாக அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்காக எம்மால் தயாரிக்கப்பட்ட விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது. அதில் குறிப்பிடப்பட்ட கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என எமது தொழிற்சங்க உறுப்பினரின் நிலைப்பாட்டை நாம் அவருக்கு எடுத்துக் கூறினோம். இன்று நிறைவடைந்த பேச்சுவாரதைகளை மேலும் தொடரும் வகையிலேயே றிறைவுற்றது.

அரசாங்கத்தினால் சமர்ப்பிககப்பட்ட எட்டு அம்ச கோரிக்கைகள் குறித்து மேலும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேணடியுள்ளது. இது தவிர எமது தொழிற்சங்க நடவடிக்கைகளை நிறைவு செய்வது அரசாங்கத்தின் கையிலேயே உள்ளது.

# அகதிகளை திருப்பி அழைக்கும் நடவடிக்கை துரிதமாகும்

(கொழும்பு)

தமிழக முகாம்களில் தங்கியுள்ள இலங்கை அகதிகளை மீண்டும் இலங்கைக்கு அழைக்கும் நடவடிக்கைகள் எதிர்வரும் 2013 ஆம் ஆண்டளவில் துரிதப்படுத்தப்படும் என்று அமைச்சர் குணரட்ன வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

தற்போது தமிழகத்தில் உள்ள 112 அகதி முகாம்களில் 68 ஆயிரத்துக்கும் அதிகமான இலங்கையர்கள் தங்கி இருக்கின்றனர்.

அத்துடன் முகாம்களுக்கு வெளியில் 32 ஆயிரம் பேர்வரையில் வசிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இநத நிலையில் அவர்களை மீணடும் இலங்கைக்கு அழைத்து குடியேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுளளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதற்கு இந்திய அரசாங்கத்தினதும், ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் பேரவையின் உதவியும் பெற்றுக் கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கூட்டமைப்புடன் இணைந்து கூட்டாட்சியா?

## தேர்தலின் பின்னரே இறுதி முடிவு

### முஸ்லிம் காங்கிரஸ் திட்டவட்டம்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து கிழககில் கூட்டாட்சியை ஏற்படுத்துவது தொடர்பாக தேர்தலின் பின்னர் தான் முடிவு எடுக்க முடியும் என்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கிழக்கு தேர்தலின் பின்னர் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும், தமிழ் தேசிய கூட்டமைப்பும் இணைந்து கிழக்கில் ஆட்சி அமைக்கும் தீர்மானத்தில் இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் உள்நாட்டு ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள அமைச்சரும், முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கும்போது தமிழ் தேசிய கூட்டமைப்பும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் தனித்து போட்டியிடுகின்றது. இதனால் இரண்டு கட்சிகளுக்குமே அறுதிப் பெரும்பான்மை கிடைக்காது.

இந்த நிலையில் தேர்தலுக்கு பின்னரே இரு கட்சிகளும் கூட்டிணைவது குறித்து தீரமானிக்கப்படும் என்று அவர் தெரிவிதுள்ளார்.

எவ்வாறாயினும் முஸ்லிம் காங்கிரஸுடன் இது தொடர்பில் எந்த உடன்படிக்கையும் ஏற்படுத்திக் கொள்ளப்படவில்லை என்று கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுவரையில் கூட்டிணைவு குறித்தோ அல்லது தேர்தல்களுக்காக ஒன்றாக செயற்படுவது தொடர்பிலேயோ எந்த உடன்படிக்கையும் ஏற்படுத்திக் கொள்ளப்படவில்லை.

இந்த நிலையில் தேர்தலின் பின்னர் இது குறித்து தீர்மானிக்கப்படும் என்றும் சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவித்துள்ளார்.

# விவசாயிகளின் ஆட்சியே வேண்டும்; ஜே.வி.பி. கனவு காண்கிறது



(கொழும்பு)


செல்வந்த குடும்பங்கள் நாட்டை ஆட்சி செய்யும் முறைமையில் மாற்றம் தேவை யென ஜே.வி.பி கட்சி குறிப்பிட்டுள்ளது.

விவசாயிகளும், தொழிலாளர்களும் நாட்டை ஆட்சி செய்யக்கூடிய வகையிலான ஓர் சூழ் நிலை உருவாக்கப்பட வேண்டுமென ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இன்று இந்த நாட்டின் அனைத்து மக்களும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். அனைத்து சக்திகளும் வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. விவசாயிகள் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நாட்டை கடந்த 65 ஆண்டுகளாக செல்வந்த குடும்பங்களே ஆட்சி செய்துள்ளன. இந்த ஆட்சிக் காலங்களில் நாட்டுக்கு நன்மை ஏற்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். கொழும்பு நூலக கேட போர் கூடத்தில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

# திடீரென பற்றி எரிந்த பேருந்து



(கொழும்பு)

பதுளையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்து ஒன்று திடீரென தீ பிடித்து எரிந்து சாம்பலாகியுள்ளது. அப்புத்தளை - ஆயிஸ்பீல்ல பகுதியில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.20 அளவில் விபத்து இடம்பெற்றுள்ள நிலையில் ஹோமாகம டிப்போவுக்குச் சொந்தமான பேருந்தே எரிந்து சாம்பலாகியுள்ளது. இயந்திரக் கோளாறு காரணமாக இவ் விபத்து ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

# மருத்துவர் மீது தாக்குதல்; மூன்று பேருக்கு விளக்கமறியல்

(அநுராதபுரம்)


அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் வைத்தியரொருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட மூன்று சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் அநுராதபுரம் நீதவானும் மேலதிக மாவட்ட நீதிபதியுமான ருவன்திக்கா மாரபன முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய நபர்களை விரைவில் கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு நீதவான் இதன்போது அநுராதபுரம் பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்களை எதிர்வரும் 11 ஆம் திகதி அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்துமாறு நீதவான் பொலிஸாருக்கு குறிப்பிட்டார்.

அநுராதபுரம் தகய்யாகம முச்சந்தியில் நேற்றுமுன்தினம் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் வைத்தியரொருவர் காயமடைந்ததுடன் அவர் தற்போது அநுராதபுரதம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.



தாக்குதலில் வைத்தியர் பயணித்த வாகனத்திற்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# கலை, கலாசார விழுமியங்களை வளர்த்தெடுக்க உழைக்கவேண்டும்

(ஊர்காவற்துறை)

விளையாட்டுக் கழகங்கள் சமூகப் பணியாற்றக் கூடியவாறும், அழிவடைந்து வருகின்ற கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை வளர்த்தெடுக்கக்கூடியவாறும் செயற்பட வேண்டும் என ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தீவக பிரதேசங்களின் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலெலன்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

ஊர்காவற்துறை றேஞ்சஸ் விளையாட்டுக் கழகமும், சனசமூக நிலையமும் இணைந்து நடாத்திய உதைபந்தாட்டம், கரபந்தாட்ட சுற்றுப் போட்டிகளின் இறுதியாட்ட நிகழ்வும், பரிசளிப்பு விழாவும் கடந்த 29 ஆம் திகதி ஊர்காவற்துறை திறந்த வெளியரங்கில் நடைபெற்றபோது, நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், விளையாட்டுக் கழகங்கள் தமது செயற்பாடுகளை மேம்படுத்தி, வீரர்களது மெய்வன்மைத் திறமைகளை வெளிப்படுத்துவதுடன், பிரதேசங்களிலுள்ள ஒவ்வோர் விளையாட்டுக் கழகமும் குறித்த பிரதேசங்களில் சமூகப் நலச்செயற்பாடுகளை முன்னெடுத்து, அழிவடைந்து வருகின்ற கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை வளர்த்தெடுக்கக்கூடியவாறு செயற்பட வேண்டும்.

இப் பிரதேச இளையோர் தமது முழுமுயற்சியின் மூலம் வளமற்ற பிரதேசங்கள் எனக் குறிப்பிடப்படுகின்ற தீவக பிரதேசங்களின் அபிவிருத்திக்கு பக்கபலமாகச் செயற்பட்டு தீவகத்தை வளம்மிக்க தேசமாக மாற்றியமைக்க முடியும். நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்துறை ஆகிய மூன்று பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள விளையாட்டுக் கழகங்களை உள்ளடக்கியதாக லீக் போட்டிகளை நடாத்துவதற்கான செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தொடர்ந்து வெற்றியீட்டிய வீரர்களிற்கான பரிசில்களையும், வெற்றியீட்டிய அணிகளிற்கான வெற்றிக்கிண்ணங்களையும் நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் மற்றும் நிகழ்வில் கலந்து கொண்ட அதிதிகள் வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பியின் ஊர்காவற்றுறை பிரதேச அமைப்பாளரும், ஊர்காவற்றுறை பிரதேசசபை தவிசாளருமான ம.ஜெயகாந்தன் (காந்தன்), யாழ்.புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் ஜேம்ஸ் சிங்கராயர், பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் ராஜேஸ் கண்ணா மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# உணவு வழங்கும் விபரம் காட்சிப்படுத்த வேண்டும்

(நெடுங்கேணி)

பாடசாலைகளில் உலக உணவுத் திட்டத்தின் மூலம் தரம் 1 தொடக்கம் தரம் 9 வரையான மாணவர்களுக்கான உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றது. இதில் மதிய உணவு, மரக்கறிக்கான பணம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக துணுக்காய் கல்வி வலய முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் கு.விஜயபாலா தெரிவித்துள்ளார்.

அண்மையில் அதிபர்களுக்கான ஏற்பாடு செய்யப்பட்ட விசேட கூட்டத்திலேயே அவர் இவவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

50 மாணவர்கள் கொண்ட ஒரு பாடசாலையில் ஒரு மாணவனுக்கு 5 ரூபாவும், 51 தொடக்கம் 100 பேர் கொண்ட பாடசாலையில் ஒரு மாணவனுக்கு 3.50 சதமும், 101 தொடக்கம் 200 பேர் கொண்ட பாடசாலையில் ஒரு மாணவனுக்கு 3 ரூபாவும் 201 இற்கு மேற்பட்ட மாணவர்களை கொண்ட பாடசாலையில் ஒரு மாணவனுக்கு 2.50 சதமும் வழங்கப்பட்டுள்ளது.

ஒரு வாரத்தில் இரு தடவைக்கு மேல் ஒரே மரக்கறி வகைகளை சமைக்கக்கூடாது எனவும், வழங்கப்படும் உணவு தொடர்பான விபரம் வகுப்பில் மாணவர்களுக்குக் காட்சிப்படுத்தப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

அது தவறும் பட்சத்தில் குறிப்பிட்ட பாடசாலை அதிபருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (12)

# வடமாகாண கல்வி அமைச்சால் ஆசிரியர் இடமாற்றத் திகதி நீடிப்பு

(நெடுங்கேணி)

வடமாகாண கல்வி அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்திற்கு ஏற்ப எதிர்வரும் 7 ஆம் திகதிவரை ஆசிரிய இடமாற்றத் திகதி நீடிக்கப்பட்டுள்ளதாகவும் விண்ணப்பிக்கத் தவறிய துணுக்காய் கல்வி வலயத்தில் கடமை புரியும் அதிபர், ஆசிரியர்கள் உடனடியாக இடமாற்ற விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து கல்வி வலயத்தில் ஒப்படைக்குமாறு துணுக்காய் கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி மாலினி வெனிற்றன் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் செய்தியாளர்களின் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதுவரை 100 இற்கும் மேற்பட்ட அதிபர், ஆசிரியர்கள் விண்ணப்பித்துள்ளனர். அவை கோவைப்படுத்தப்பட்டு இடமாற்ற சபையின் ஒன்றுகூடலின்போது பரிசீலனைக்குத் தயாராக உள்ளதாகவும், ஏற்கனவே இடமாற்ற விண்ணப்பங்களை வழங்கியவர்கள் திரும்பவும் வழங்கத் தேவையில்லை எனவும் சில விஷமிகளால் பரப்பப்பட்டுள்ளவற்றில் உண்மை இல்லை எனவும், இது தொடர்பாக ஏதாவது சந்தேகங்கள் இருப்பின் 0243244865 அல்லது 0243244145 என்ற தொலைபேசி இலக்கங்களில் தொடர்புகொள்ளுமாறு கேட்டுள்ளார். (12)

# முரசின் இன்றைய பலன்

**(02.09.2012 - ஞாயிற்றுக்கிழமை)**

நந்தன வருஷம் ஆவணி மாதம் 17 ஆம் திகதி.
நட்சத்திரம் பூரட்டாதி மு.ப 7.46 வரை. திதி துதியை முன்னிரவு 8.36 வரை.
சித்தாமிர்தம். இராகுகாலம் 4.35 - 6.05 வரை. சுபநேரம் 9.05 - 10,35 வரை.
எமகண்டம் 12.03 - 1.33, குளிகன் காலம் 3.03 -4.33.

**சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| மேடம் | தொட்ட காரியங்கள் வெற்றி. கடுமையாக வேலை செய்வீர்கள். கோரிக்கைகள் நிறைவேறும். எதிர்பாராத ஆதாயங்கள் கிடைக்கும். பரபரப்பாக செயற்படுவீர்கள். |
| ரிஷபம் | இலாபம். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். குழந்தைகளால் தொல்லைகள் வரலாம். கடன் கொடுப்பீர்கள். பணவரவு இருக்கும். உறவினர் ஆதரவால் முயற்சிகள் கைகூடும். |
| மிதுனம் | போட்டிகள் விலகும். தொல்லைகள் குறையும். நினைத்ததை சாதிப்பீர்கள். பாராட்டுகளும் கிடைக்கும். பழைய நண்பரிடமிருந்து திடீர் உதவி. உறவினர்களின் அன்புமழை. |
| கடகம் | பணவரவு. நண்பர்களால் உதவி. வாய்ப்புகள். மேலதிகாரிகளிடம் பாராட்டு பெறுவீர்கள். ஊழியர்களுக்கு உங்களால் உற்சாகம். சில வேலைகளை செய்ய மறந்து விடலாம். |
| சிம்மம் | தடுமாற்றங்கள், குழப்பங்கள் இருக்கும். ஆனாலும் உங்களுக்கு ஆக்கபூர்வ நாள். அரசாங்க அனுகூலம் உண்டு. மன உளைச்சல், சங்கடங்கள் தீரும். கோவில் செல்வீர்கள். |
| கன்னி | முடிவுகள் எடுக்க முடியாமல் தடுமாறுவீர்கள். குடும்பத்தினரிடம் கோபம் ஏற்படும். சிலரிடம் உதவி கேட்பீர்கள். மறதியால் கஷ்டப்படுவீர்கள். வீண்செலவுகள் ஏற்படலாம். |
| துலாம் | கௌரவத்திற்காக செலவு செய்வீர்கள். நண்பர்களுடன் போட்டி இருக்கும். குழந்தைகளால் எரிச்சல். அண்டை அயலாருடன் சுமுகம். வேலைகளை தள்ளி வைப்பீர்கள். |
| விருச்சிகம் | இல்லை எண்ணாமல் உதவுவீர்கள். பெண்களால் மகிழ்ச்சி. புதிய நண்பர்களின் அறிமுகம். தொழில் ரீதியாக ஒப்பந்தங்கள். உயர்ச்சிக்கான செய்திகள். நன்மையான நாள். |
| தனுசு | விவேகமுடன் செயற்படுவீர்கள். மற்றவர்களால் கலக்கம் ஏற்படும். சாதுரியத்தால் வெல்வீர்கள். வெளியூர்களில் இருந்து முக்கிய செய்திவரும். தொழிலில் உயர்வு. |
| மகரம் | உடனுக்குடன் வேலைகள் முடியும். சந்தோஷம், மகிழ்ச்சி அதிகரிக்கும். உங்களைப் பற்றி பெருமையாகப் பேசுவர். நண்பர்களுடன் நெருக்கம். ஆரோக்கியம். சுபமான நாள். |
| கும்பம் | அலைச்சல். வியாபாரிகள், வாழ்க்கையாளர்களிடம் அனுசரணையாக நடந்து கொள்வது நல்லது. திடீர் மாற்றங்கள் நிகழும். வேலைகளில் இழுத்தடிப்பு. செலவுகள் ஏற்படும். |
| மீனம் | கடின முயற்சிக்குப் பலன் கிடைக்கும். விமர்சனங்கள் வரும். நடக்காத ஒன்றுக்கு ஆவல் கொள்வீர்கள். புதிய பொறுப்புகள் வரும். பிறர் பேச்சைக் கேட்பீர்கள். ஏற்றம் கிடைக்கும். |

# வீடு புகுந்து காடைத்தனம்; சந்தேக நபர் கைது

(யாழ்ப்பாணம்)

குழு ஒன்றை ஏவி யாழ். பிரம்படிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்தவர்களை தாக்கிய சந்தேக நபர் ஒருவர் யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விசாரணைக் குடபடுத்தப்பட்டிருப்பதாகத் தெரிய வருகின்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 7.00 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் சுமார் 15 பேர் கொண்ட குழுவினர் குறித்த பகுதியில் இருந்த வீடு ஒன்றிற்குள் நுழைந்து அங்கிருந்தவர்களை கண்மூடித் தனமாக தாக்கியதாகவும் இதன் போது இரண்டு பேர் தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைததியசாலையில் சேர்க்கப் பட்டிருந்தனர்.

ஏற்கனவே குறித்த பகுதியில் இருதரப்பினரிடம் இருந்து வந்த சிறிய பிணக்கு ஒன்றின் காரணமாகவே இத்தாக்குதல் சம்பவம் நடைபெற்றிருந்தது எனவும் தெரிய வருகின்றது.

இதனைத் தொடர்ந்து இந்தத் தாக்குதலின் சூத்திரதாரி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகின்றது. (பா)


## தண்ணீர் மோட்டார் திருட்டு

(வரணி)

யாழ் வரணி வடக்கு சைவப் பிரகாச வித்தியாசாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு நீர் இறைக்கும் மோட்டார் திருடர்களால் களவாடப்பட்டுள்ளது.

கடந்த மாதம் இந்த மோட்டார் புதிதாக ரூபா 17 ஆயிரம் ரூபாவிற்கு கொள்வனவு செய்யப் படடு புதிய (பைப்) குழாய் மூலம் மாணவர்களுக்கு குடிநீர் விநியோகம் செய்வதற்கு பொருததப்பட்ட நிலையிலே திருடர்களால் களவாடப்பட்டுள்ளது.

இத்திருட்டுச் சம்பவம் பற்றிப் பாடசாலை அதிபர் வை. விஜயகுமாரன் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (150)



கோண்டாவில் மகா கணபதி காளி அம்பாள் ஆலய தேர்த் திருவிழா நேற்று முன்தினம் நடைபெற்றபோது தேர் பக்தர் புடைசூழ வீதி உலா வருவதைக் காணலாம். (112)

## சீனாவிற்கு முதல் தங்கம்



(லண்டன்)


லண்டனில் நடைபெற்று வரும் ஊனமுற்றோருக்கான (பாரா) ஒலிம்பிக் போட்டியில் முதல் தங்கப்பதக்கத்தை சீனா வென்றது.

துப்பாக்கிச்சுடுதல் பிரிவில் சீன வீராங்கனை ஹாங் கியூபிங் தங்கம் வென்றார். 24வயதாகும் இவர் ஆர் 2, 10 மீற்றர் ஏர் ரைபிள் பிரிவில் 104.9 புள்ளிகள் பெற்று சாதனை படைத்தார்.

இதே பிரிவில் ஜெர்மனியின் மெனுலா வெள்ளிப்பதக்கமும், அவுஸ்ரேலியாவின் நடாலியா ஸ்மித் வெண்கலப் பதக்கமும் வென்றனர்.

மகளிர் சைக்கிள் பந்தயத்தில் பிரிட்டனின் சாரா ஸ்டோரி தங்கம் வென்றார். இதற்கு முந்தைய பாரா ஒலிம்பிக்போட்டிகளில் சாரா, நீச்சல் போட்டியில் பங்கேற்று 5 தங்கப்பதக்கங்களை வென்றுள்ளார். கடந்த ஆண்டு பெய்ஜிங் ஒலிம்பிக் போட்டியில் இருந்து சைக்கிள் பந்தயத்தில் அவர் பங்கேற்கத் தொடங்கியுள்ளார்.

## போராடித் தோல்வி



(நியூயோர்க்)

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் கிராண்ட் ஸ்லாம் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு 2ஆவது சுற்றில், நட்சத்திர வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸ் (அமெரிக்கா) போராடித் தோற்றார். ஜேர்மனியின் ஏஞ்சலிக் கெர்பருடன் மோதிய வீனஸ் 2,6 என்ற கணக்கில் முதல் செட்டை இழந்து பின்தங்கினார். அடுத்த செட்டில் சுதாகரித்துக் கொண்டு விளையாடிய அவர் 7,5 என்ற கணக்கில் செட்டை கைப்பற்றி சமநிலை ஏற்படுத்தினார். இதையடுத்து, வெற்றி யாருக்கு என்பதை தீர்மானிக்கும் கடைசி செட் ஆட்டத்தில் அனல் பறந்தது. இருவீராங்கனைகளும் தங்கள் சர்வீசில் புள்ளிகளைக் குவித்து கடுமையாகப் போராடினர். இறுதியில்,கெர்பர் 6–2, 5–7, 7–5என்ற செட் கணக்கில் வென்று 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார். இதே வேளை, மகளிர் ஒற்றையர்பிரிவு 3ஆவது சுற்று ஆட்டத்தில் ரஷ்யாவின் ஷரபோவா, அமெரிக்காவின் பர்டெட்டுடன் மோதினார். இந்த ஆட்டத்தில் ஷரபோவா 6–1, 6–1 என்ற நேர் செட் கணக்கில் வென்று 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

## கிண்ணம் வென்றது ஊவா நெக்ஸ்ட்




இலங்கை பிரிமியர் லீக் ருவென்ரி –20 கிரிக்கெட் தொடரின் இறுதிப்போட்டியில் ஊவா நெக்ஸ்ட் டக்வோர்த் லூயிஸ் முறையில் 19 ஓட்டங்களால் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது. இலங்கை பிறீமியர் லீக் தொடரின் இறுதிப் போட்டி கொழும்பு ஆர். பிரேமசதாச மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் ஊவா நெக்ஸ்ட் மற்றும் நெகனஹிர நாகாஸ் அணிகள் மோதின.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய நாகாஸ் அணி 15 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 134 ஓட்டங்களை பெற்றபோது மழை–யால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. இதில் மத்தியூஸ் 27 பந்துகளில் 4 சிக்சர்கள் 8 பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காமல் 73 ஓட்டங்களை பெற்றார். பந்து வீச்சில் மெக்டொனால்ட் இரு விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

இதனையடுத்து 15 ஓவர்களுக்கு 137 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி ஊவா அணி துடுப்பெடுத்தாடிக்கொண்டிருக்கும் போது மீண்டும் மழைகுறுக்கிட்டது. இதன்போது ஊவா அணி 5.1 பந்துகளில் 1 விக்கெட்டை மாத்திரம் இழந்து 63 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதனையடுத்து டக்வொர்த் லூயிஸ் முறைப்படி 5.1 ஓவர்களில் ஊவா 45 ஓட்டங்களைப்பெற வேண்டும் என அறிவிக்கப்பட்டபோதும் ஊவா அணி ஏற்கனவே 63 ஓட்டங்களை பெற்றிருந்தமையால் ஊவா அணிக்கு கிண்ணம் உரித்தானது. இதில் அதிரடியாக துடுப்பெடுத்தாடி அணியின் வெற்றிக்கு வழிவகுத்த டில்சான் முனவீர 5 சிக்சர்கள் 2 பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காமல் 44 ஓட்டங்களைப்பெற்றார். இப்போட்டியின் ஆட்டநாயகனாக டில்சான் முனவீர தெரிவு செய்யப்பட்டதோடு தொடரின் ஆட்டநாயகனாக சமிந்த எரங்க தெரிவு செய்யப்பட்டார்.

## ரென்னிசிலிருந்து ரோடிக் ஓய்வு

(நியூயோர்க்)

அமெரிக்காவின் முன்னணி வீரர் ஆண்டி ரோடிக், அமெரிக்க ஓப்பனுடன் ரென்னிசில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். முன்னாள் முதல்நிலை வீரரான ரோட்டிக் இதுவரை ஒரே ஒரு கிராண்ட்ஸ்லாம் பட்டம் மட்டுமே வென்றுள்ளார். 2003ஆம் ஆண்டு அவர் அமெரிக்க ஓப்பனை கைப்பற்றினார். அமெரிக்க வீரர் ஒருவர் கடைசியாக கைப்பற்றிய கிராண்ட்ஸ்லாம் மகுடமும் இது தான்.




இது குறித்து அவர் குறிப்பிடுகையில், இது தான் டென்னிசை விட்டு விலக சரியான நேரமாகக் கருதுகிறேன். இன்னொரு ஆண்டு விளையாட நான் போதுமான உடல்தகுதியுடன் இருப்பேனா அல்லது அதே உத்வேகத்துடன் இருப்பேனா என்பது எனக்குத் தெரியாது. எனது ரென்னிஸ் வாழ்க்கையை முடிக்க அமெரிக்க ஓப்பனே சரியான போட்டியாக இருக்கும் என்று நான் எப்போதும் நினைப்பது உண்டு. அதன்படியே விலகுகிறேன் என்றார்.

இதேவேளை, ஆண்டி ரோட்டிக்கின் ஓய்வு முடிவு குறித்து பெடரர் அதிர்ச்சியடைவதாகத் தெரிவித்தார். இதுகுறித்து அவர் தெரிவிக்கையில்,

உண்மையை சொல்ல வேண்டும் என்றால் ரோட்டிக்கின் முடிவு எனக்கு கொஞ்சம் அதிர்ச்சி அளிக்கிறது. அவர் இன்னும் ஓராண்டு விளையாடியிருக்கலாம் என்று நினைத்தேன். 2009ஆம் ஆண்டு விம்பிள்டன் பட்டத்தை அவர் வென்றிருக்க முடியும். அந்த பட்டத்திற்கு அவர் தகுதியானவர். என்னைப் பொறுத்தவரை அவர் ஒரு விம்பிள்டன் சம்பியன்தான். டென்னிஸ் விளையாட்டின் சிறந்த தூதர் என்றார்.

## நியூஸ்ராரின் பிறிமியர் லீக் இன்று முதல் ஆரம்பம்

நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்தும் நியூஸ்ரார் பிறிமியர் லீக் வெற்றிக் கிண்ண ருவென்ரி –20 கிரிக்கெட் தொடர் இன்று முதல் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

16 அணிகள் பங்குகொள்ளும் இப்போ[illegible] தொடரின் இன்றைய போட்டிகளில் சென்ன[illegible] அணியை எதிர்த்து கிறாஸ்கோப்பார்ஸ் அணியும், திருநெல்வேலி சி.சி. அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை ஒல்ட் கோல்ஸ் அணியும் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நான்கு பிரிவுகளாக அணிகள் பிரிக்கப்பட்டு லீக் அடிப்படையில் முதல் சுற்று ஆட்டங்கள் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (07)



## வென்றது இங்கிலாந்து




தென்னாபிரிக்க அணிக்கெதிரான மூன்றாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி நான்கு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. இங்கிலாந்து, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட தொடரின் மூன்றாவது போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.


நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய தென்னாபிரிக்க அணி 46.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 211 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அம்லா 43, டுமினி 32 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அண்டர்சன் நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பதிலுக்கு 212 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இங்கிலாந்து அணி 48 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ட்ரொட் 71, மோர்கன் 73 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பீற்றர்சன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இவ்வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் 1–1 என்ற கணக்கில் இரு அணிகளும் சமநிலை வகிக்கின்றன. போட்டியின் ஆட்டநாயகனாக மோர்கன் தெரிவானார்.

## ஆஸியை பழி தீர்த்தது பாகிஸ்தான்

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான இரண்டாவது ஒரு நாள் போட்டியில் பாகிஸ்தான் அணி ஏழு விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்றது. ஐக்கிய அரபு இராச்சியத்திற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்ரேலிய அணிக்கும், பாகிஸ்தான் அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் இரண்டாவது போட்டி அபுதாபியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய அவுஸ்ரேலிய அணி 50 ஓவர்களின் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 248 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மைக்கல் ஹசி 61, ஜோர்ஜ் பெய்லி 39, மைக்கல் கிளார்க் 37, கிளென் மக்ஸ்வெல் 28 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் சயீட் அஜ்மல் 4, ஜுனைட் கான் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். 249 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 43.4 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இதில் நசீர் ஜம்ஷெத் 98 பந்துகளில் 97 ஓட்டங்களைப் பெற்று மூன்று ஓட்டங்களால் சதத்தை தவறவிட்டார். மற்றும் அசார் அலி 59, மிஸ்பா உல் ஹக் 35 ஓட்டங்களைப் பெற்றனர். போட்டியின் நாயகனாக பாகிஸ்தான் அணியின் நசீர் ஜம்ஷெத் தெரிவானார்.

## "போல்"டில் அரைச்சதம்




(பெங்களூர்)

டெஸ்ட் கிரிக்கெட்டில் போல்ட் ஆனதில் அரைச் சதத்தை சச்சின் டெண்டுல்கர் நேற்றுக் கடந்தார். நியூசிலாந்துடனான இரண்டாவது டெஸ்டின் முதலாவது இனிங்ஸில் போல்ட் ஆனார். இதன் மூலம் 50ஆவது முறையாக கிளீன் போல்ட் ஆனமை குறிப்பிடத்தக்கது.



## ஹோலி, ரெய்னா, டோனி சிறப்பாட்டம் மீண்டது இந்தியா

(பெங்களூர்)

ஹோலி, டோனி, ரெய்னா ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் நியூசிலாந்து அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி மீண்டுள்ளது. இந்திய, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவதும், இறுதியுமான ஆட்டம் பெங்களூரில் நடைபெற்று வருகின்றது.

இதில் முதல் இனிங்ஸிற்காக ஆடிய நியூசிலாந்து அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 365 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டெய்லர் 113, மைக்கி 71 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஓஜா ஐந்து, சகீர்கான் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய இந்திய அணி ஆரம்பத்தில் தடுமாறியது. இந்திய அணி முதல் நான்கு விக்கெட்டுக்களை 80 ஓட்டங்களுக்குள் பறிகொடுத்து தடுமாறியது. இந்நிலையில் ஜோடி சேர்ந்த ஹோலி, ரெய்னா இணை மிகச் சிறப்பாக ஆடி 99 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்து கொண்டபோது ரெய்னா ஆட்டமிழந்தார். தொடர்ந்து ஐந்து விக்கெட்டுக்காக இணைந்த ஹோலி, டோனி இணை 104 ஓட்டங்களைப் பெற்றது. இறுதியில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை இந்திய அணி ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 283 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் ஆட்டமிழக்காது முறையே ஹோலி 93, டோனி 46 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர். ரெய்னா 55, சேவாக் 43 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் சௌத்தி மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.

# முருகமூர்த்தி வெற்றிமாதா மென்பந்து கிண்ணம் வென்றது அரசடி


(யாழ்ப்பாணம்)

முருகமூர்த்தி வெற்றிமாதா விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை அரசடி அணி கைப்பற்றிக் கொண்டது.

முன்னணி மென்பந்து கிரிக்கெட் அணிகள் பங்குகொண்ட அணிக்கு ஆறு பேர் கொண்ட ஐந்து ஓவர் ஆட்டம் முருகமூர்த்தி வெற்றிமாதா விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டது. இதன் இறுதிப் போட்டி அண்மையில் வெற்றிமாதா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது. இதில் கொக்குவில் கிங்ஸ் அணியும், அரசடி அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய கொக்குவில் கிங்ஸ் அணி ஆறு ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 42 ஓட்டங்களைப் பெற்றது. இதில் விஜிதரன் சிறப்பான முறையில் ஆடி 30 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் கஜிந்தன் ஒன்பது ஓட்டங்களைப் பெற்றார். மற்றைய அனைத்து வீரர்களும் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் சுபாஸ்கர், சுதன், கிருபா தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 43 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அரசடி அணி 5.1 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இதில் திலீபன் 18, சுபாஸ்கர் 10 ஓட்டங்களைப் பெற்று அணியின் வெற்றிக்குத் துணைபுரிந்தனர். பந்து வீச்சில் கண்ணா, பவிதரன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இதன் மூலம் அரசடி அணி முருகமூர்த்தி வெற்றிமாதா வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக கிருபாவும், தொடர் நாயகனாக விஜிதரனும் தெரிவு செய்யப்பட்டனர். இப்போட்டி நிகழ்வில் ஏராளமான இரசிகர்கள் கலந்துகொண்டு போட்டியைக் கண்டுகளித்தமை குறிப்பிடத்தக்கது. (53)



கொக்குவில் மேற்கு சனசமூக நிலைய சுப்பிரமணியம் மாலதி ஆரம்ப சுகாதார பராமரிப்பு முன்பள்ளியின் விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இதில் சிறார்கள் ஓடுவதற்குத் தயாரான நிலையில் நிற்பதைக் காணலாம்.

## அளவெட்டி மத்தியின் மாகாண மென்பந்து

(அளவெட்டி)

அளவெட்டி மத்தி விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியில் மாபெரும் கிரிக்கெட் தொடர் ஒன்றை நடாத்தவுள்ளது.

இதற்காக அனைத்து கழகங்களையும் எதிர்வரும் புதன்கிழமைக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளது.

பதிவுகளை மேற்கொள்ள விரும்பும் அணிகள் 0772846736, 0773450657 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இப்போட்டித் தொடரில் வெற்றியீட்டும் அணிக்கு பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படும் எனவும் அவர்கள் தெரிவித்தனர். (93)

## விரைவில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இரண்டாம் சுற்று ஆட்டங்கள் விரைவில் நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

இப்போட்டித் தொடரின் இரண்டாவது சுற்று ஆட்டத்திற்கு யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஆறு பாடசாலைகள் தகுதிபெற்றுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (எஸ்.பி.)

# வவுனியா பிறிமியர் லீக் ருவென்ரி-20 யங்ஸ்ரார், செவ்வானம் அணிகள் வெற்றி

(வவுனியா)

வவுனியா பிறிமியர் லீக் ருவென்ரி - 20 கிரிக்கெட் தொடரில் லீக் ஆட்டங்களில் யங்ஸ்ரார் மற்றும் செவ்வானம் அணிகள் வெற்றிபெற்றுள்ளன.

செவ்வானம் விளையாட்டுக்கழகத்தினால் வவுனியா மாவட்டத்தில் முதன் முறையாக நடத்தப்பட்டு வரும் வவுனியா பிறிமியர் லீக் ருவென்ரி -20 கிரிக்கெட் தொடரில் வவுனியாவிலுள்ள முன்னணி அணிகள் பல பங்கு கொண்டு ஆடிவருகின்றன.

இதில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரண்டு போட்டிகள் நடைபெற்றது.

முதலாவது போட்டியில் வி.பி.ஏ. அணியும், யங்ஸ்ரார் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய வி.பி.ஏ. அணி 18 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 60 ஓட்டங்களைப் பெற்றது. இதில் குமணேஷ் 17, சந்தோஷ் 16 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் தினேஸ் நான்கு, ரஞ்சன், துஷா தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 61 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யங்ஸ்ரார் அணி 8.2 ஓவர்கள நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இதில் தரிசி 27, ஜெசி 15 ஓட்டங்களைப் பெற்று அணியின் வெற்றிக்குத் துணை புரிந்தனர். பந்து வீச்சில் சங்கர், சுதன் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

தொடர்ந்து நடைபெற்ற மற்றுமொரு லீக் ஆட்டத்தில் செவ்வானம் அணியும், குட்ஸ்ரார் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய செவ்வானம் அணி ஜெயபாலின் அதிரடியான ஆட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் செவ்வானம் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜெயபால் 32, கலை 21, சிவிசலிஸ் 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரகு மூன்று, அம்பி இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 133 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய குட்ஸ்ரார் அணி 20 ஓவர்கள் நிறைவில் 99 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. இதில் ரேகன் 28, டினோஜன் 20 ஓட்டங்களைப் பெற்றனர். மற்றைய அனைத்து வீரர்களும் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் ரேபேட் மூன்று, சிவிசலிஸ் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். செவ்வானம் அணியின் வெற்றிக்கு சகலதுறை ஆட்டத்தின் மூலம் பங்காற்றிய சிவிசலிஸ் போட்டியின் ஆட்டநாயகனாகத்தெரிவானார். (93)

## அரையிறுதியில் சென்றலைட்ஸ்

(யாழ்ப்பாணம்)

சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் டொனால்ட் வெற்றிக்கிண்ண ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு சென்றலைட்ஸ் அணி தகுதிபெற்றுள்ளது.

ஜொலிஸ்ரார் அணிக்கும், சென்றலைட்ஸ் அணிக்குமிடையிலான காலிறுதிப் போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய சென்றலைட்ஸ் அணி 50 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 269 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிரசாத் 57, ஜேம்ஸ் ஜோன்சன் 50, துசாந் 28, எட்வேட் எடின் 24, வதுசணன் 23, அழகன் 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் முரளி, ஜனார்த்தனன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 270 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஜொலிஸ்ரார் அணி 44.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 217 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் நிரஞ்சன் 74, ஜனார்த்தனன் 41 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் வதுசணன், கோகுலன் தலா மூன்று, சாள்ஸ் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். (எஸ்.பி.)

## நீர்வேலி சர்வசக்தி முன்பள்ளி விளையாட்டு

(நீர்வேலி)

நீர்வேலி-பன்னாலை சர்வசக்தி முன்பள்ளியின் விளையாட்டு விழா இன்றைய தினம் பிற்பகல் 1.30 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் சிறப்புற இடம்பெறவுள்ளது.

முன்பள்ளித் தலைவர் தலைமையில் இடம் பெறவுள்ள இப்போட்டி நிகழ்விற்கு வலி. கிழக்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரும், ஈ.பி.டி.பி.யின் கோப்பாய் பிரதேச அமைப்பாளருமான இ. ஐங்கரன் பிரதம விருந்தினராகவும், நீர்வேலி கிராம அலுவலர் எஸ். தயாபரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இப்போட்டி நிகழ்வில் சிறார்களுக்கான ஓட்டம், பழம் பொறுக்குதல், சங்கீதக் கதிரை, வினோத உடை, தண்ணீர் நிரப்புதல் போன்ற பல்வேறு விளையாட்டுக்கள் இடம்பெறும் எனவும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இப்போட்டி நிறைவில் போட்டியில் பங்குபற்றும் அனைத்து சிறார்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படும் எனவும், ஊர் பெரியோர், பெற்றோர், விளையாட்டு ஆர்வலர்கள் என அனைவரையும் பங்குகொண்டு சிறார்களை உற்சாகப்படுத்துமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (135)



நவாலி மதிஒளி சனசமூக நிலையமும் மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும் இணைந்து நடத்திய பிரசாத் ஞாபகார்த்த மதிஒளி முன்பள்ளியின் விளையாட்டு விழா அண்மையில் சிறப்புற இடம்பெற்றது. இதில் போட்டி நிகழ்வின்போது விருந்தினர்களை வரவேற்கும் முன்பள்ளிச் சிறார்களைக் காணலாம். (104)

# ஞாபக மறதியை ஒழிக்க...

பலரையும் பாதிக்கும் பிரச்சினை ஞாபகமறதி. சரியான காரணத்தைக் கண்டறிந்து சரி செய்தால் மறதியில் இருந்து விடுபடலாம் என்கின்றனர் உளவியல் நிபுணர்கள். மறதி என்பது ஒரு நோய் அல்ல. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. அதில் ஒன்று நேரத்தைத் திட்டமிடாமை. காலையில் தாமதமாக எழுவதன் மூலம் அனைத்து வேலைகளையும் பதற்றத்துடன் செய்வதால் மனம் நிம்மதியற்றுப் போகிறது. இந்த சூழலில் சாதாரண விஷயங்கள் கூட எளிதில் மறந்து விடுகின்றன. நேரத்தை திட்டமிடுவதன் மூலம் பதற்றத்தில் இருந்து விடுபட முடியும். மனம் அமைதியாக இருக்கும் போது முக்கியமான விஷயங்களை திரும்பத் திரும்ப நினைவுக்குக் கொண்டு வந்து காலை நேரத்தை இனிமையாக மாற்றலாம். அப்படியே மறந்தாலும் ஒரு நிமிடம் நிதானித்து நினைவுக்குக் கொண்டு வர முடியும். மறதிக்கு இன்னொரு முக்கிய காரணம் கவனச்சிதறல், இதனால் முக்கிய விஷயங்கள் நினைவில் பதியாமல் போகின்றன. ஒரே சமயத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட வேலைகளைச் செய்வது மற்றும் வேறு விஷயங்களில் கவனம் செலுத்துவது போன்ற பழக்கங்களை உடனடியாகக் கைவிட வேண்டும்.

இவர்கள் ஒரு சமயத்தில் ஒரே ஒரு வேலையில் முழுக் கவனம் வைப்பதன் மூலம் மறதியைத் தடுக்க முடியும். மறக்கும் பழக்கம் அடிக்கடி ஏற்பட்டால் மருத்துவரை அணுகி சிகிச்சை பெற வேண்டியது அவசியம்.

நினைவாற்றல் பிரச்சினை மூன்று வகைப்படும். முதலாவது குறுகிய கால நினைவாற்றல். பயன்படுத்திய தொலைபேசி எண்ணை உடனடியாக மறந்து விடுதல் இந்த வகை, அடுத்த வகை அண்மைக் கால நினைவாற்றல். இதில் சில மணி நேரங்களுக்கு முன்னர் நடந்ததை நினைவுக்குக் கொண்டு வருவதில் சிரமம் ஏற்படும். சிறு வயதில் நடந்த விஷயங்களை மறந்து விடுவது நீண்ட கால நினைவாற்றல் குறைபாடு ஆகும்.

ஞாபக மறதிக்கு பல காரணங்கள் உள்ளன. மருந்துகளால் ஏற்படும் பக்கவிளைவு மற்றும் தலையில் அடிபடுவதால் நினைவாற்றலை இழக்கும் நிலை ஏற்படுகிறது. குடிப்பழக்கம், வலிப்பு, பார்வைக் குறைபாடு போன்ற பிரச்சினை உள்ளவர்களுக்கும் நினைவாற்றல் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. கர்ப்பிணிகளுக்கு குறுகிய கால, அண்மைக் கால நினைவாற்றலில் பாதிப்பு ஏற்படலாம்.

நினைவாற்றல் பிரச்சினையை பொதுவாக "அல்சைமர் நோய்" என்று அழைக்கிறோம். முதலில் அண்மைக்கால நினைவுகளை படிப்படியாக இழக்கின்றனர். புதிய தகவல்களை கற்பது மற்றும் நினைவில் வைத்து கொள்வதிலும் பிரச்சினை ஏற்படும். ஒன்றையே திரும்பத் திரும்பக் கூறுவது, பொருட்களை இடமாற்றி வைத்துவிட்டுத் தேடுவது போன்ற குழப்பங்கள் காணப்படும்.

தனி மனித ஆளுமை பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் சமூக பழக்கங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைப்பதில் தாமதம் ஏற்படும். இதுபோன்ற காரணங்களால் பதற்றம், கடுப்பு, மனச்சோர்வு மற்றும் குழப்பம், அமைதியின்மை ஆகிய பிரச்சினைகள் உண்டாகி நிம்மதியற்ற வாழ்க்கைக்கு வழிவகுக்கும். இது போன்ற ஆரம்ப அறிகுறிகள் தெரியும் போதே சிகிச்சை எடுக்க வேண்டியது அவசியம்.

ஒரு குழந்தை இலட்சக்கணக்கான மூளைக் கலங்களுடன் பிறக்கிறது. மனிதனுக்கு வயதாகும் போது படிப்படியாக மூளைக் கலங்களில் சில அழிகின்றன. புதிதாக எதுவும் உருவாவதில்லை. வயதாகும் போது மூளை செயற்பாட்டுக்குத் தேவையான இரசாயனப் பொருட்கள் உடலில் சரியாக உற்பத்தி செய்யப்படுவதில்லை. இதனால்தான் வயதாகும் போது நினைவாற்றல் பிரச்சினை உருவாகிறது.

சிறு வயதில் இருந்தே பதற்றமான வாழ்க்கைச் சூழலை மாற்றி நேரத்தை திட்டமிட குழந்தைகளைப் பழக்க வேண்டும். இதன் மூலம் தேவையற்ற பதற்றத்தைத் தவிர்க்கலாம். சத்தான உணவு, உடற்பயிற்சி ஆகியவை மனநிலையை உற்சாகமாக வைத்துக் கொள்ள உதவும். இதன் மூலம் நினைவாற்றல் பிரச்சினையைத் தவிர்க்கலாம். நேரத்தையும் வேலையையும் திட்டமிடுவதன் மூலம் மறதிக்கான வாய்ப்பைக் குறைக்கலாம்.

அடுத்ததாக நினைவாற்றலை அதிகரிக்க பயிற்சி அளிக்கலாம். புதிர் விளையாட்டு, வார்த்தை விளையாட்டு ஆகியவற்றில் ஈடுபடலாம். எப்போதும் பரபரப்பாக இருப்பதை விடுத்து மனதை அமைதியாக வைத்திருப்பது அவசியம்.

அந்த நேரங்களில் மறக்கும் விஷயங்களை திரும்பத் திரும்ப நினைவுக்கு கொண்டு வருவதன் மூலம் முக்கியமான விஷயங்களை மனதில் பதிய வைக்கலாம்.

செய்ய வேண்டிய வேலை மற்றும் மறக்கும் விஷயம் குறித்து காகிதத்தில் எழுதி வைத்து நினைவுக்குக் கொண்டுவரலாம். முக்கியமாக, மறதிக்காக கவலைப்படக் கூடாது. இதனாலும் பிரச்சினை அதிகரிக்க வாய்ப்புள்ளது.

# ஸ்ரீதேவி விஜயம்

- யுவகிருஷ்ணா -





ஆர்.பாலகிருஷ்ணன் என்கிற சுத்தபத்தமான பெயரைச் சொன்னால் யாருக்கும் தெரியாது. பால்கி என்றால் போதும். விளம்பர ஏஜென்ஸிகளின் வட்டாரத்தில் அவ்வளவு பிரபலம். லிண்டாஸ் விளம்பர நிறுவனத்தின் தலைவர். "கறை நல்லது" என்கிற கருத்துக்கு சொந்தக்காரர் என்றால் இவரை எல்லோருக்கும் தெரியும்.

இளையராஜாவின் வெறிபிடித்த ரசிகர். இளையராஜாவின் இசையால்தான் இவருக்கு சினிமா என்கிற துறையே பிடித்தது. சினிமாவில் எழுபதுகளை கட்டி ஆண்டவர்கள் அனைவரும் பால்கிக்கு ஆண்டவர்கள். அவ்வகையில்தான் அமிதாப். திடீரென்று ஒருநாள் இரவில் பால்கி இயக்குனர் ஆனார். அவரது ஆண்டவர்களில் ஒருவரான அமிதாப் பச்சன் ஹீரோ. படம் "சீனி கம்". இரண்டு ஆண்டுகள் கழித்து இன்னொரு படம் எடுத்தார். இதிலும் அமிதாப்தான் ஹீரோ. படம் "பா". இரண்டு படத்துக்குமே இளையராஜாதான் இசை.

அடுத்தது என்ன என்கிற கேள்வி எழுந்தபோது ஒரு படம் தயாரிக்கப் போகிறேன், நான் இயக்கப் போவதில்லை என்றார். சில நாட்கள் கழித்து தான் தயாரிக்கும் படத்தை இயக்கப் போகிறவர் கவுரி ஷிண்டே என்று அறிவித்தார். கவுரி யாருமில்லை பால்கியின் திருமதிதான்.

கவுரி படமெடுப்பது பெரிய சாதனையோ, உலகையே திரும்பிப் பார்க்க வைக்கும் நிகழ்வோ இல்லை. அவரது படத்தில் ஸ்ரீதேவி கதாநாயகியாக நடிக்கப் போகிறார் என்பதுதான் குறிப்பிடத்தக்க நிகழ்வாக இதை மாற்றியிருக்கிறது. நம் விருதுநகரைச் சேர்ந்த ஸ்ரீதேவி தமிழ், தெலுங்கு, ஹிந்தி, மலையாளம், கன்னடம் என்று இந்திய மொழிகளை ஒரு கலக்கு கலக்கினார், இந்தியாவின் முதல் பெண் சூப்பர் ஸ்டார் என்பதெல்லாம் ஏற்கனவே தெரிந்த விஷயம்தான். 96இல் அனில்கபூரின் அண்ணனை திருமணம் செய்து கொண்டார். 97இல் திரைப்படங்களில் நடிப்பதற்கு முழுக்கு போட்டார். கிட்டத்தட்ட பதினாறு வருடங்கள் கழித்து நடிக்க வருகிறார் என்பதால்தான் கவுரியின் திரையுலகப் பிரவேசம் முக்கியத்துவம் பெறுகிறது.

படத்தின் பெயர் இங்கிலீஷ் விங்கிலீஷ். அமெரிக்காவுக்கு ஒரு குடும்பம் குடிபெயர்கிறது. குடும்பத் தலைவியான ஸ்ரீதேவிக்கு இங்கிலீஷ் தெரியாது. குடும்பத்தில் குழந்தைகள், கணவர் எல்லோரும் இதற்காக அவரை கிண்டலடிப்பது வழக்கம். அமெரிக்க குடியுரிமை அதிகாரிகூட "தப்பும் தவறுமாக ஆங்கிலம் பேசி, எங்கள் நாட்டில் என்ன செய்யப் போகிறாய்?" என்று கேட்கிறார். ஸ்ரீதேவி எப்படி இங்கிலீஷ் கற்றுக் கொள்கிறார் என்பதுதான் மீதி கதை. முழுக்க முழுக்க நகைச்சுவையை இழைத்து, என்.ஆர்.ஐ குடும்பங்கள் காட்டும் பகட்டினைப் பற்றிய பகடி-தான் இங்கிலீஷ் விங்கிலீஷ்.

கடந்த ஆகஸ்ட் 13 அன்று இப்படத்தின் ட்ரைலர் மும்பையில் வெளியிடப்பட்டது. அன்றுதான் ஸ்ரீதேவியின் 50ஆவது பிறந்தநாளும் கூட. ஒரே வாரத்தில் யூட்யூப் தளத்தில் பத்து இலட்சத்துக்கும் மேற்பட்டோர் ட்ரைலரை பார்த்து ரசித்திருக்கிறார்கள். படம் கண்டிப்பாக ஹிட், குறிப்பாக வெளிநாடுகளில் வசூல் அள்ளோ அள்ளென்று அள்ளும் என்று பேசிக்கொள்கிறார்கள். ஸ்ரீதேவிக்காகவும், பால்கிக்காகவும் சிறப்புத் தோற்றத்தில் நடிக்க அமிதாப் ஒப்புக் கொண்டாராம்.

படம் தமிழ் மற்றும் தெலுங்கிலும் மொழிமாற்றம் செய்யப்பட்டு வரும் என்று தெரிகிறது. தமிழ், தெலுங்கு ரசிகர்கள் தங்கள் மொழியில் கிட்டத்தட்ட இருபது ஆண்டுகளுக்குப் பிறகு ஸ்ரீதேவியை ரசிக்கப் போகிறார்கள். குறிப்பாக இப்படத்தின் தமிழ் பதிப்பு (அனேகமாக தீபாவளிக்கு கூட இருக்கலாம்) வெளியாகும்போது பரபரப்பு பற்றிக்கொள்ளப் போகிறது. ஏனெனில் ஹிந்தியில் அமிதாப் நடிக்கும் ரோலில் தமிழில் தோன்றப் போகிறவர் அல்டிமேட் ஸ்டார் அஜித்குமார். இதற்காக தயாரிப்பாளர் அளிக்க முன்வந்த சம்பளப் பணம் வேண்டாமென்று மறுத்திருக்கிறார் தல. மேலும் போக்குவரத்து, உடை, உதவியாளர் பேட்டா, என்று அவருக்கான இதரச் செலவுகள் அனைத்தையும் தன்னுடைய சொந்த செலவிலேயே செய்து கொண்டிருக்கிறார். மூத்த கலைஞரான ஸ்ரீதேவிக்கு செய்யும் மரியாதையாக இதை "தல" எடுத்துக் கொண்டாராம்.


படத்தின் ட்ரைலரில்: அமெரிக்க குடியுரிமை அதிகாரியிடம் ஸ்ரீதேவி சொல்கிறார். "எனக்கு ஆங்கிலம் சரியாக வராது"


அதிகாரி கேட்கிறார் "ஆங்கிலம் தெரியாமல் எங்கள் நாட்டில் எப்படி இருப்பாய்?"

அதிகாரியோடு பணியாற்றும் இந்தியர் ஒருவர் உடனே சொல்கிறார். "ஹிந்தி தெரியாமலேயே நீ எங்கள் நாட்டுக்கு வரலாம்"

இந்த காட்சி ட்ரைலரில் ஓடும்போது வட இந்திய திரையரங்குகளில் கைதட்டல் எகிறுகிறதாம்.

# நெரூடா கவிதை





அந்தப் பல மனிதர்களில் நான் யார், நாம் யார்,
நான் ஒருவரில் நிலைகொள்ள முடியாது
அவை யாவும் இழக்கப்படுகின்றன எனக்கு
அணி உடையின் மறைவில்
அவர்களனைவரும் கிளம்பியாகிவிட்டது வேற்று நகருக்கு.
என்னையொரு அறிவார்ந்த மனிதனாய் வெளிப்படுத்தி
சகலமும் வந்து படிந்துவிட்டதுபோல் தோன்றுகையில்
என்னுடலில் நான் மறைத்து வைத்திருக்கும் முட்டாள்
என் பேச்சினைக் கைப்பற்றி என் வாயை ஆக்கிரமிக்கிறான்.
ஒரு பேரழகு வீடு தீயில் வெடிக்கையில்
நான் அழைக்கும் தீயணைப்போனுக்கு மாற்றாய்
அந்த இடத்தில் ஒரு தீ வைப்பவன்
புயல்போல் வந்து சேர்கிறான்
மேலும் அவன்தான் நான்
என்னால் செய்யக் கூடியதொன்றுமில்லை.
நான் என்னைப் பிரித்தெடுக்க என்ன செய்ய வேண்டும்?
எங்ஙனம் நான் என்னை ஒன்றுபடுத்தவியலும்?

# களப்பிரர் காலத்துத் தமிழ்!

கன்னடத்தைத் தாய்மொழியாகக் கொண்ட களப்பிரர் ஆட்சிக் காலத்தில் தமிழ்மொழிக்கு அவர்கள் ஆக்கம் அளித்ததாகத் தெரியவில்லை. ஆனால் களப்பிரர் ஆட்சிக் காலத்தில் தமிழர், தமிழ் மொழியைப் புதிய முறையில் வளர்த்தார்கள். பௌத்த, சமண, சைவ, வைணவ சமயத்துத் தமிழ்ப் புலவர்கள் அனைவரும் தமிழை வளர்த்தார்கள். களப்பிரர் காலத்தை வரலாற்று ஆசிரியர்கள் இருண்ட காலம் என்று குறிப்பிட்டாலும் அக்காலத்தில்தான் தமிழன்னை புதுக்கோலம் பூண்டு பொலிவுற்றாள்!

சங்க காலத்தில் பிராமி எழுத்துகள் பழக்கத்தில் இருந்தன. ஆனால் களப்பிரர் காலத்தில் வட்டெழுத்து முறை வழக்கில் வந்தது. சீவக சிந்தாமணி, பெருங்கதை போன்ற காப்பியங்கள் களப்பிரர் காலத்தில்தான் தோன்றின.

சங்ககாலத்தில் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்ற நான்கு வகைப் பாக்கள் மட்டுமே இருந்தன. அவற்றுடன் களப்பிரர் காலத்தில் தாழிசை, துறை, விருத்தம் என மூன்று பாவினங்களையும் அமைத்து பன்னிரு வகையான செய்யுள்களை உண்டாக்கினர். அபிநயம், காக்கை பாடினியம் போன்ற புதிய யாப்பிலக்கண நூல்கள் தோன்றியதும் இந்தக் காலத்தில்தான்.

பதினோராம் திருமுறையில் காரைக்கால் அம்மையார், நக்கீர தேவ நாயனார், கபில தேவ நாயனார், பரண தேவ நாயனார், கல்லாட தேவ நாயனார் எனும் ஐந்து ஆசிரியர்கள் எழுதிய பதினெட்டு நூல்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அவை களப்பிரர் காலத்தில் எழுதப்பட்டவை.


பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் திருக்குறள், களவழிநாற்பது, முதுமொழிக் காஞ்சி, நாலடியார் எனும் நான்கு நூல்களைத் தவிர மீதமுள்ள 14 நூல்களும் களப்பிரர் காலத்தில் தோன்றியவையே.

இறையனார் அகப்பொருள் எனும் களவியல் நூல் களப்பிரர் காலத்தில்தான் எழுதப்பட்டது.

**('களப்பிரர் ஆட்சியில் தமிழகம்' என்ற நூலில் ஆராய்ச்சிப் பேரறிஞர் மயிலை சீனி.வேங்கடசாமி)**

# மனித உரிமை மீறல் – மறுசிந்தனை தேவை

**- தே. லட்சுமணன் கட்டுரையிலிருந்து.**



மராட்டிய மாநிலத்தில் உள்ள 15 சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டுள்ள இஸ்லாமியர்கள் படும் இம்சைகளை அறிகிறபோது மனம் பதைக்கிறது. நாம் பயங்கரவாதத்தை எதிர்ப்பவர்கள், அது பெரும்பான்மை பயங்கரவாதம் என்றாலும், சிறுபான்மை பயங்கரவாதம் என்றாலும் இரண்டையும் எதிர்க்கிறோம். ஆனால் இதை அணுகும் முறையில் ஒருதலைப்பட்சமாக அரசு அணுகக் கூடாது. அதிகாரிகள் தவறக் கூடாது. காவல்துறை மீறக் கூடாது என்பதுதான்.

மகாராஷ்டிராவில் உள்ள 15 சிறைச்சாலைகளில் மொத்தம் 3000 இஸ்லாமியர்கள் உள்ளார்கள். அவர்களில் 70 சதவீதம் பேர் விசாரணைக் கைதிகள், 30 சத வீதம் பேர் தண்டிக்கப்பட்டவர்கள். இஸ்லாமிய கைதிகளில் 52.8 சதவீதம் பேர் கொலை செய்தவர்கள், கொலைக்கு முயற்சித்தவர்கள், பாலியல் பலாத்காரத்தில் ஈடுபட்டவர்கள், ஆள் கடத்தியவர்கள், பிறரைத் தாக்கியவர்கள் என்றுதான் வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன. குண்டு வைத்தவர்கள், பயங்கரவாதத்தில் ஈடுபட்டவர்கள் என்று இல்லை.

விசாரணைக் கைதிகளில் 47.4 சத வீதம் பேர் மீதுதான் குற்றப்பத்திரிகை பதிவு செய்யப்பட்டுள்ளது. 3.8 சதவீதம் பேர் தீர்ப்பு வழங்கப்படும் நிலைக்கு நெருங்கியுள்ளார்கள். ஆகவே வழக்குகள் ஆமை வேகத்தில் நகர்கின்றன.

இஸ்லாமியர்களுக்கு சொந்தமாக நிலம் உள்ள சதவீதத்தைவிட, கல்வி அறிவுபெற்ற சதவீதத்தைவிட, வேலை பெற்றுள்ள சதவீதத்தைவிட இதற்கு நேர்மாறாக சிறையில் உள்ள இஸ்லாமியர்களின் சதவீத எண்ணிக்கை அதிகமாக உள்ளது மிக மிக கொடிய நிலை.

1998ஆம் ஆண்டில் கோவையில் நடந்த குண்டுவெடிப்பு வழக்கில் கைது செய்யப்பட்ட அப்துல் நாசர் மதானி 9 ஆண்டுகள் சிறையில் கிடந்தார். வயது முதிர்ந்தவர், நோயாளி. நீரிழிவு பாதிப்பில் ஒருகால் துண்டிக்கப்பட்டவர். கடைசியில் அவர் மீதுள்ள குற்றம் நிரூபணமாகாத காரணத்தால் விடுதலை செய்யப்பட்டார். 9 ஆண்டுகள் சிறையில் அடைத்து வைத்தவர்கள் பொறுப்பேற்பார்களா? இந்தியாவில் இதுபோல் நிருபணமாகாமல் எத்தனையோ இஸ்லாமியர்கள் மாதக் கணக்கில், ஆண்டுக் கணக்கில் சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள். ஆனால் வினோதம் என்னவென்றால் 9 ஆண்டுகள் சிறையிலிருந்து விடுதலையான மதானி, மீண்டும் பெங்களூரு குண்டு வெடிப்பு வழக்கில் சம்பந்தப்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். சச்சார் கமிஷன் சொன்ன ஒரு சரியான மதிப்பீட்டை இங்கு குறிப்பிடுவது சாலவும் பொருந்தும்.

"சிறுபான்மையினருக்கு தாங்கள் ஒடுக்கப்படுவதாகவே ஓர் எண்ணம் உள்ளது. அந்த எண்ணம் மாற்றப்பட ஏற்பாடு இல்லையெனில் அவர்கள் தேசிய நீரோட்டத்தில் இணைவது சிரமமே!"

# விஸ்வநாதன் வேலை வேண்டும்!




தற்செயலாக நடக்கும் சில விஷயங்கள்தான் சில நேரங்களில் பெரிய வெற்றியை, கொண்டு வருகிறது. எவ்வளவோ திட்டமிட்டுச் செய்யும் சில செயல்கள், சில நேரங்களில் தவறாகிப் போய் விடுவதும் உண்டு.

இப்படி ஒரு தற்செயல் சம்பவம், இயக்குநர் ஸ்ரீதர் வாழ்வில் நிகழ்ந்து, ஒரு பாடல் சூப்பர் ஹிட் ஆன நிகழ்ச்சி பற்றி கட்டுரை ஒன்றில் அவர் குறிப்பிட்டு இருக்கிறார்.

அது: "காதலிக்க நேரமில்லை" படத்திற்காக பாடல் காட்சி கலந்தாலோசனைக்காக, கண்ணதாசன் வந்திருந்தார். கதாநாயகன், கதாநாயகியின் தந்தையைப் பார்த்து, கேலியாக ஒரு பாடல் பாடுவது மாதிரி காட்சி. அந்தக் காட்சிக்கு ஒரு பாடல் எழுதித் தரும்படி கண்ணதாசனிடம் சொன்னேன்.

அருகில் இருந்த இசையமைப்பாளர் எம்.எஸ்.விஸ்வநாதனிடம் அவர், "விஸ்வநாதா! வேலை வேணும் உடனே டியூன் போடு!" என்றார். உடனே, விஸ்வநாதனும், வேடிக்கையாக, "விஸ்வநாதன்! வேலை வேணும், விஸ்வநாதன் வேலை வேணும்!" என்று பாடியபடியே மெட்டுப் போட்டார்.

கண்ணதாசன், "இதையே பல்லவியாக வைத்துக் கொள்ளலாமே! அது சரி படத்தில் கதாநாயகியின் தந்தையினுடைய பெயர் என்ன?" என்று என்னிடம் கேட்டார். அப்போதுதான் எனக்கே தெரிந்தது. அந்த நேரம் வரை, நான் கதாநாயகியின் தந்தை பாத்திரத்திற்கு பெயரையே வைக்கவில்லை என்பது!

உடனே, கண்ணதாசனிடம், "விஸ்வநாதன் என்றே அந்தப் பாத்திரத்திற்குப் பெயர் வைத்து விடுகிறேன். நீங்கள், "விஸ்வநாதன் வேலை வேணும்!" என்றே பல்லவி எழுதி விடுங்கள்..." என்றேன். அப்படியே எழுதினார். அந்தப் பாடல் சூப்பர் ஹிட் ஆனது!

# கூழைப் பாடிய புலவர்கள்

**- சிகரம் -**

ஒவ்வொரு நாடுகளிலும் வாழும் மக்கள் தங்களுடைய நாட்டிற்குரிய ஒவ்வொரு தத்துவமான பண்பாட்டுடன் கூடிய வாழ்க்கை முறையினை வாழ்ந்து வருகின்றனர். தமிழர்களாகிய எமது வாழ்க்கை முறையிலும் பல பண்பாட்டு விழுமியங்கள் கடைப்பிடிக்கப் படுகின்றன. அதில் ஒன்றுதான் ஆடலும், பாடலும்.

குழந்தை பிறக்கும் போது ஆரம்பிக்கும் தாலாட்டுப் பாடல், ஆரம்பப் பள்ளிக்குச் செல்லும் போது பாடல், பாடசாலை விளையாட்டின் போது பாடல், தொழிலுக்குச் செல்லும் போது பாடல், விளையாட்டுப் பாடல், பொழுது போக்குப் பாடல் எனப் பாடப்படும் பாடல்கள் இறுதியில் ஒப்பாரிப் பாடலுடன் நிறைவடைகின்றன. நாம் வாழும் காலத்தில் உண்ணும் உணவுகளைக் கூட பாடல் மூலம் அடையாளப்படுத்தியுள்ளனர் புலவர்கள்.

தமிழர் ஆண்டின் நான்காவது மாதமாக வரும் ஆடி மாதப் பிறப்பன்று கூழ் காய்ச்சி அந்த மாதத்தினை வரவேற்பது தெரிந்த விடயமே. இந்தக் கூழைப் பற்றிப் புலவர் ஒருவர் தன்னுடைய பாடல் மூலம் சொல்லிச் சென்றுள்ளார்.

**"வண்ணப் பலாவிலை ஓடிப் பொறுக்கியே**
**வந்து மடித்ததைக் கோலிக் கொண்டு**
**அன்னை அகப்பையில் அள்ளி அள்ளி வார்க்க**
**ஆடிப் புதுக்கூழ் குடிப்போமே"**

என்று பாடினார் நவாலியூர் சோமசுந்தரப் புலவர். ஒடியல் கூழ் பற்றிச் சொல்லிச் சென்றுள்ளார் கல்லடி வேலுப்பிள்ளை என்ற புலவர். யாழ்ப்பாணத்தின் வெவ்வேறு ஊர்களில் பிறந்த இந்த இரண்டு புலவர்களுமே இரண்டு கூழினைப் பற்றி பாட்டின் மூலம் சொல்லிச் சென்றுள்ளனர்.

யாழ்ப்பாணத்தின் நவாலி எனும் ஊரில் பிறந்தவர் நவாலியூர் சோமசுந்தரப் புலவர். கொல்லன் கலட்டி என்ற ஊரில் பிறந்தவர் வேலுப்பிள்ளை புலவர். இவரது வீட்டிற்கு அருகில் கல் ஒன்று இருந்ததாகவும் இதனால் ஊர் மக்களால் இவர் கல்லடி வேலன் என அழைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

கல்லடி வேலுப்பிள்ளைக்கு சுப்பையா என்ற பெயருடைய அருமை நண்பர். இவர், இரத்தினபுரியிலுள்ள நிவிற்றிக்கொல்லை என்னுமிடத்திலுள்ள மருத்துவமனையில் வைத்தியராகப் பணிபுரிந்து வந்தார்.

புலவருக்கு தனது நண்பனைப் பார்க்க ஆசை எழுந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு நாள் புலவர் நிவிற்றிக் கொல்லைக்கு புறப்பட்டுச் சென்றார். புலவர் சென்ற வேளை, நண்பகல் வெயில் நெருப்பாக எரித்தது. புலவர் பசி தாகத்தோடு நண்பனின் வீட்டை அடைந்தார்.

புலவரை எதிர்பாராது கண்ட நண்பரும் மனைவியும், அவரை வரவேற்று உபசரித்து, புலவரின் சுகநலங்களை விசாரித்தனர். வைத்தியரின் மனைவியார் புலவர் களைப்பாக இருந்ததை உணர்ந்தார். எனவே புலவருடைய களைப்பைப் போக்க எண்ணி, உடம்பு அலுப்புக்கு உவப்பானது ஒடியற்கூழே என எண்ணியதுடன், ஒடியற் கூழில் புலவருக்கு மிகப் பிரியம் உண்டு என்பதும் அவருக்குத் தெரியும். எனவே வைத்தியரின் மனைவி கூழ் காய்ச்சி கணவருக்கும், அவரது நண்பருக்கும் பரிமாறினார்.

புலவரும் நண்பரும் கூழ் குடிக்க அமர்ந்தனர். பலா இலையை மடித்துக் கோலினர், கூழை அள்ளி ஊதி ஊதிக் குடித்தனர். அந்தக் கூழ் மிகவும் சுவையாக இருந்தது. "என்ன அருமையான கூழ்" என்று வியந்தார் புலவர். புலவரின் பசியும், களைப்பும் நீங்கியது. உடனே ஆசுகவி ஒடியற் கூழைப்பற்றிப் பாடினார்.



**"அல்லையுற்று இரத்தினபுரி அண்டி**
**அப்பாலே நிவிற்றிக்கொல்லை**
**அடைந்த அலுப்புக் கொண்டதற்கு**
**கல்லடியான் வண்டாரும் மாலை அணி**
**மற்புயற் சுப்பையனுடன்**
**கொண்டாடினான் ஒடியற் கூழ்"**

என்பதே அந்தப் பாடல்.

ஆசுகவி கல்லடி வேலனின் மேற்கண்ட பாடல், "கொண்டாடினான் ஒடியற்கூழ்" என்ற பெயரில் இலங்கைப் பாடநூலாக்கத்தில் ஆண்டு 4 வகுப்பு பாடமாக வெளிவந்திருந்த போதிலும் இந்தப் பாடலின் இறுதி வரி அந்தப் புத்தகத்தில் வெளிவரவில்லை. கூழ் மீது ஆசை கொண்டவர்களுக்கும், கூழ் பற்றிய மிகுதிப் பாடலை அறிய விரும்பியவர்களுக்கும் இது ஒரு ஏமாற்றமே.

"விடுமுறை நாள் ஒன்றில் ஏற்கனவே சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவித்தபடி கூழ் காய்ச்சும் படலம் நிகழ்வது யாழ்ப்பாணத்து வழக்கம். எல்லோருமாகக் கூடி இருந்து குடிப்பது தான் அதில் இருக்கின்ற விஷேடம். சுவையும் உறவும் நட்பும் ஒன்று கலக்கும் இடம் அது. அக்கம் பக்கம், நண்பர் கூட்டம் எல்லோருமாகக் குந்தியிருந்து பலாவிலையில் கோலிக் குடிப்பது மகா விசேஷம்." இவ்வாறு எழுத்தாளர் செங்கையாழியான் எழுதியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இப்போதும் இதெல்லாம் நடக்கிறதா அல்லது போருக்கு



முன்பான உறவுகளோடு இவை எல்லாம் வழக்கொழிந்து போய் விட்டதா?



# கணினி உலா

A.J.Nimalrajan


## கண்களை பாதுகாத்திடுவோம்

மிகப் பளபளப்பான கணினியின் திரையை தொடர்ந்து அதிகநேரம் பார்த்துக் கொண்டே பணிபுரியும் பலர் நம்மில் உள்ளனர். அவர்கள் அனைவரும் பின்வரும் கண்ணிற்கான பயிற்சியைச் செய்தால் கண்களை பாதுகாப்பாக வைத்திடமுடியும்

1. ஒவ்வொரு 20 நிமிடம் முடிந்தவுடன் நம்முடைய தலையை கணினித்திரையை விட்டு நகர்த்தி திருப்பி 20 அடி தூரத்திலிருக்கும் ஏதேனுமொரு பொருளை நம்முடைய கண்களால் காண்க. இந்த செயல் தொடர்ச்சியாக கணினித்திரையை பார்த்த கண்களின் சோர்வினை நீக்கி புத்துணர்ச்சியை ஏற்படுத்துகின்றது.

2. பின்னர் நம்முடைய கண்களை 20 முறை மூடிமூடித் திறக்கவும்.

3. மேலும் தொடர்ச்சியாக 20 நிமிடநேரம் ஒரே இடத்தில் உட்கார்ந்து பணிபுரிந்து வந்தால் உடன் கணினியை விட்டெழுந்துசென்று 20 அடி தூரம் நடந்து சென்றுவருக. இதனால் சுறுசுறுப்பாக இரத்த ஓட்டம் உடல்முழுவதும் பாய்ந்தோடும்.




எச்சரிக்கை: தொடர்ந்து ஒரே இடத்தில் அமர்ந்து கணினியில் பணிபுரிவர்கள் இந்த மூன்று பயிற்சிகளையும் பின்பற்றவில்லையெனில் நம்முடைய கண்கள் பின்வருமாறு அமையும்.

## குழந்தைகளைக் கவனிக்க



குழந்தைகளைக் கவனிக்க யாருமே இல்லாத பட்சத்தில் குழந்தை அழுதால் அறியத்தருவதற்கு ஒரு மென்பொருள் உள்ளது. இதன் பெயர் CRY GUARD.

இந்த மென்பொருளை ஒரு கைபேசியில் நிறுவிக் கொண்டு மற்றொரு கைபேசியின் நம்பரைக் கொடுக்க வேண்டும். மென்பொருள் நிறுவிய கைபேசியை குழந்தையின் அருகில் வைத்து விடுங்கள். மற்றொரு கைபேசி உங்களிடம் இருக்க வேண்டும்.



உங்களது குழந்தை அழுதாலோ அல்லது சிறு அசைவுகள் ஏற்பட்டாலோ உங்களுடைய கைபேசிக்கு அழைப்பு வரும்.


## குப்பைச் செய்திகளை வடிகட்டும் வழிமுறை

ஸ்பேம் எனப்படும் நம்பகமற்ற செய்திகள் அல்லது குப்பைச் செய்திகள் மின்னஞ்சல் வாயிலாக நமக்கு ஏராளமான அளவில் வருவதற்கு வாய்ப்புள்ளன.




இவைகளை வடிகட்டி தனிமடிப்பகத்திற்கு இயல்பு நிலையில் சென்றிடுமாறு அனைத்து மின்னஞ்சல் சேவையிலும் அமைக்கப் பட்டுள்ளது. ஆனால் யாகூவை போன்று ஜிமெயிலில் அவ்வாறான மின்னஞ்சல் வந்திருப்பதை காண இயலாது. நாமே முயன்று அதனை திரையில் காணுமாறு அமைத்திட முடியும். அதற்காக,

நம்முடைய ஜிமெயில் திரையை திறந்து அதன் இடதுபுறம் உள்ள கட்டளைப்பட்டையில் moreஎன்பதை தெரிவுசெய்து சொடுக்குக. பின்னர் விரியும் பட்டியில் spam என்பதை தெரிவுசெய்து சொடுக்குக. அதன் பின்னர் விரியும் திரையின் மேல் பகுதியில் இந்த spam மின்னஞ்சல்கள் இருக்கும் தொடுப்பு விவரம்தோன்றும். அதனைத் தெரிவு செய்து சொடுக்குவதன் மூலம் நமக்கு வந்து சேர்ந்த குப்பை மின்னஞ்சல்களைக் காணலாம்.




## மெமரி வசதியுடன் வரும் மவுஸ்

போர்ட்ரோனிக்ஸ் நிறுவனம் சமீபத்தில் இந்தியாவில் ஒரு புதிய வயர்லஸ் மவுஸை அறிமுகம் செய்திருக்கிறது. இந்த மவுசிற்கு இமூஸ் என்ற பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. இந்த மவுஸின் விலை ரூ.19200 ஆகும். இந்த மவுஸை இயக்குவதற்கு மிகவும் இலகுவாக இருக்கும் அதே நேரத்தில் மிகவும் வசதியாகவும் இருக்கும்.




இந்த மவுஸின் முக்கிய சிறப்பு என்னவென்றால் இதில் சேமிப்பு வசதியும் உள்ளது. அதற்காக ஒரு யுஎஸ்பி துவாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அடுத்ததாக இந்த மவுஸ் வீடியோ கேம் பிரியர்க்ள் மற்றும் டிசைனர்களுக்காக உருவாக்கப்பட்டிருக்கிறது.

இதன் வலது மற்றும் இடது க்ளிக் பட்டன்கள் மிக வேகமாக இயங்கக்கூடியவை.

மிகவும் கையடக்கமானது. அதனால் இதை மிகவும் எளிதாக எடுத்துச் செல்ல முடியும். இந்த மவுஸ் கறுப்பு மற்றும் செம்மஞ்சள், கறுப்பு மற்றும் ஊதா மற்றும் வெள்ளை மற்றும் பிங் ஆகிய வண்ணக் கலவைகளில் வருகிறது. அதனால் பார்ப்பதற்கு இமூஸ் மவுஸ் அற்புதமாக இருக்கும்.

மேலும் இதில் ஒரு இன் பில்ட் சூப்பர் மினி நானோ யு.எஸ்.பி. ரிசீவர், மேட் யுவி பெயிண்டிங் மற்றும் எ.பி. எஸ் மெட்டீரியல், 2.4 ஜிஹெர்ட்ஸ் அன்டி இன்டர் பெரனஸ் எ.எப்.எச். போன்ற வசதிகளும் உள்ளன.



## இணையத்தை உருவாக்கியவர்கள் யார்?

இணையத்தை உருவாக்கியவர்கள் யார்? எந்த நோக்கில் உருவாக்கப்பட்டது?

இப்பொழுது இது யாருக்குச் சொந்தம்? போன்றவை உங்களுக்குத் தெரியுமா?

1957 களில் சோவியத் அரசு தனது ஸ்புட்னிக் என்னும் செயற்கைகோளை விண்ணில் ஏவி, வெவ்வேறு இடங்களுக்கு உடனுக்குடன் தொடர்புகொள்வதற்கான செயற்கைக்கோள் சார்ந்த ஒரு தொலைத்தொடர்புவலை அமைப்பை ஏற்படுத்தியது.

இதனைக்கண்டு அதிர்ந்த அமெரிக்க அரசின் பாதுகாப்புத் துறை, ARPA அதாவது Advanced Research Projects Agency என்ற ஒரு புதிய அமைப்பை உருவாக்கி, அதனிடம் கணினி சார்ந்த தகவல் தொடர்பு வலையமைப்பு ஒன்றை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக்கொண்டது.

கணினியை ஒரு கணக்குப்போடும் இயந்திரமாகவே பாவித்துவந்த அக்காலத்தில் அதனை ஒரு அதிவிரைவுத் தகவல் பரிமாற்ற சாதனமாக்கும் தனது நீண்ட நெடிய ஆராய்ச்சியில் இறங்கியது ARPA அமைப்பு. வெவ்வேறு இடங்களில் உள்ள கணினிகளை ஒன்றாக இணைப்பதற்கான கேட்பாடுகள் வடிவமைக்கப்பட்டன, தொலைதூரக கணினிகளை தொலைபேசிக்கம்பிகள் வழியாக இணைப்பதற்கான வழிமுறைகளும் ஆராயப்பட்டன. நீண்ட ஆராய்ச்சியின் விளைவாக 1968 ஜுன மாதம் ARPA தனது ஆராய்ச்சியின் முடிவான ARPANET என்னும் கணினி வலையமைப்பினை அரசின் பார்வைக்குக் கொண்டுவந்தது.

இவ் ARPANET வலையமைப்பின் சிறப்பம்சங்கள் யாதெனில், இது வெவ்வேறு இடங்களில உள்ள கணினிகளை வெவ்வேறு வழிகளில் ஒன்றாக இணைக்கிறது. அதனால் ஒரு பகுதியில், இணைப்பில் ஏதேனும் கோளாறுகள் ஏற்பட்டாலோ அல்லது போர்க்காலங்களில் ஒருபகுதி வலையமைப்பே துண்டிக்கப்பட்டாலோ பிற பகுதி எந்தவித பாதிப்பும் இன்றி தகவல் தொடர்புக்குப் பயன்படும் ஏதேனும் ஒரு வழியை நம்பிக்கொண்டிருக்க வேண்டியது இல்லை.

(நம்முடைய இணையமும் அவ்வாறே! உலகின் ஒரு பகுதியே அழிந்து விட்டாலும் மற்றொரு பகுதி எந்த வித பாதிப்பும் அடையாமல் தன்னுடைய கடமையை ஆற்றிக் கொண்டிருக்கும். இதற்குக் காரணம் இணையத்தில் பயன்படுத்தும் TCP/IP போன்ற கோட்பாட்டு மென்பொருள்களும், Router போன்ற சாதனங்களும் தகவல் பொட்டலங்களை அனுப்பும் போது பாதைகள் பாதிப்படையாமல் இருக்கின்றனவா என்று பார்த்துவிட்டே அனுப்புகின்றன. எனவே அப்பொட்டலங்கள் பாதிக்கப்பட்ட உலகப் பகுதிக்குள் சென்று காலங்கடத்தும் வாய்ப்பே இல்லை)

அடுத்ததாக இவ்வமைப்பு வெவ்வேறு வகையைச்சார்ந்த, வேறுபட்ட அமைப்பில் உருவாக்கப் பட்ட அதாவது நாம் பயன்படுத்தும், IBM வகைத் தனிக்கணினிகள்.APPLE MAC வகைக் கணினிகள், MAINFRAME; அதிவிரைவுக்கணிகள் (SUPER COMPUTER) மற்றும் MINI கணினிகள் போன்ற கணினிகளையும் ஒன்றாக இணைத்து அவற்றிற்கு இடையிலும் தகவல்களைச் செலுத்தும் வல்லமை உடையதாக அமைக்கப்பட்டது.

அதுமட்டுமல்லாது இது வேறுபட்ட Operating System பயன்படுத்தப்படும் கணினிகளயும் வெற்றிகரமாக இணைக்கும்படியும் உருவாக்கப்பட்டது.

இத்தகைய ARPANET முதலில் அமெரிக்க இராணுவத்தில் பயன்படுத்தப்பட்டாலும், பின்பு ஆராய்ச்சிக்கான தகவல்களைப் பரிமாறிக்கொள்ளும் பொருட்டு அமெரிக்க பல்கலைக் கழகங்களுக்கு இடையே ஒரு வலையமைப்பை ஏற்படுத்தி அதைத் தம்மோடு ஒன்றாக இணைத்துக் கொண்டது. பின்னர் இது வியாபார நோக்கில் அமெரிக்க நிறுவனங்களை தம்மோடு இணைத்துப் பின்... உலகமெல்லாம் ப்ரவி இணையம் என்னும் பெயரில் வழங்கப்படலாயிற்று.

இப்பொழுது இவ்விணையம் யாருக்குச் சொந்தம்?

குறிப்பிட்ட யாருக்கும் சொந்தமல்ல, அந்தந்த நாடுகளின் இணையத் தொடர்பை அந்தந்த நாடுகளே கவனித்துக்கொள்கின்றன. மற்ற நாடுகளுடனான அந்நாட்டின் தொடர்பை அவ்விரு நாடுகளும் ஒழுங்குபடுத்திக் கொண்டுள்ளன. இருந்தாலும் வலைத் தளங்களின் பெயர், தகவல் பரிமாறும் கணினிகளின் IP முகவரி போன்றவை தனிச் சீர்மை (unique) பெற்றவையாதலால் அவை உலகளவில் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. அதற்காக The Internet Corporation for Assigned Names and Numbers மற்றும் Internet Assigned Numbers Authority போன்ற உலகளாவிய ஒழுங்குபடுத்தும் அமைப்புகள் செயறபட்டு அவற்றை நெறிப்படுத்துகின்றன.

# துப்புரவுப் பணி மும்முரம்; மந்த நிலையில் நிவாரணம்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பகுதிகளான சூசையப்பர் கோவிலடி, வேணாவில் மற்றும் கைவேலி போன்ற பகுதிகளில் வாழும் மக்கள், தங்கள் வளவுகளைத் துப்புரவு செய்யும் பணியில் மும்முரமாக ஈடுபட்டு வருவதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

செட்டிகுளம் நலன்புரி நிலையத்திலிருந்து எடுத்துவரப்பட்ட தடிகள், தகரங்களினாலும், தொண்டு நிறுவனங்கள் வழங்கிய பொருட்களினாலும், தங்கள் வளவுகளில் சிறியதொரு வீட்டை அமைத்துக்கொண்டு மிகுதியான பகுதிகளில் வளர்ந்து நிற்கும் நாயுண்ணிச் செடிகள் மற்றும் பற்றைகள் போன்றவற்றை அழித்து நெருப்பு வைக்கும் முயற்றியில் குடும்ப அங்கத்தவர் அனைவரும் ஒன்று சேர்ந்து செயற்பட்டு வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

இதேவேளை இவர்களுக்கான குடிநீர் மற்றும் மலசலகூடவசதிகள் பற்றாக்குறையாக இருப்பதோடு, இதுவரை வழங்கப்பட்ட நிவாரணப் பொருட்கள் இவர்களுடைய வாழ்வாதரத்துக்குப் போதுமானவையல்ல என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (138)

## – மீள் குடியேறிய பகுதியில் –
# அப்புறப்படுத்தாத அகலிப்பு மண்; அவலப்படுகின்றார் குடியிருப்பாளர்

(புதுக்குடியிருப்பு)

வீதி அகலிப்புப் பணிகளின்போது அகழப்பட்ட மண், அருகில் உள்ள குடியிருப்பாளர்களின் வீடுகளில் போடப்பட்டிருப்பதனால், தற்போது மீள் குடியேறிய குடியிருப்பாளர்கள் மிகுந்த சிரமங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

இப்படியான ஒரு நிகழ்வு புதுக்குடியிருப்பு கைவேலி, முதலாம் வட்டாரம் திம்பிலிச்சந்திக்கு அருகாமையில் இடம்பெற்றுள்ளது.

வீதி அகலிப்புப் பணிகளின்போது மேற்குறிப்பிட்ட பகுதியில் பாலம் ஒன்று அமைக்கும் செயற்பாட்டில் அகழப்பட்ட மண், அருகில் உள்ள குடியிருப்பாளரின் வளவுக்குள் போடப்பட்டிருந்தது. அவ்வாறு போடப்பட்ட மண் திரும்ப எடுக்கப்பட்டதாயினும் அது பூரணமாக எடுக்கப்படவில்லை. இதனால், அவ்விடத்தில் மீள்குடியேறிய அவ்வளவின் குடியிருப்பாளர், அந்த மண்ணை அகற்ற முடியாத நிலையிலும், வேலிக்கு கம்பிக்கட்டைகள் போட முடியாததாகவும் இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

எனவே குறிப்பிட்ட இடத்தில் வீதி அகலிப்பு பணிகளிலும், பாலம் அமைக்கும் வேலைகளிலும் செயற்பட்ட உயர் அதிகாரிகள் இவ் விடயத்தில் கவனமெடுத்து, உடல் இயலாத நிலையில் காணப்படும் மேற்படி குடியிருப்பாளரின் வளவினுள் உள்ள மண்ணை அப்புறப்படுத்துவதற்கு ஆவனசெய்து தரவேண்டுமென குடியிருப்பாளரின் மனைவி கேட்டுக்கொள்கின்றார். (138)

# கள் விற்பனை நிலையத்தால் அயலவர்கள் பெரும் துன்பம்

வவுனியா வடக்கிலுள்ள நைனாமடு கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள கள்விற்பனை நிலையத்தால் அப்பகுதியில் வசிக்கும் மக்களுக்கு பாரிய அசௌகரியங்கள் ஏற்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

2011ஆம் ஆண்டு மெனிக் பாம் முகாமிலிருந்து மீள்குடியேற்றம் செய்யப்பட்ட இந்தக் கிராமத்தில் இதுவரை 115 குடும்பங்கள்வரை குடியேறியுள்ளன. இந்த நிலையில் இக்கிராமத்தில் காணியற்றவர்கள் என பதிவு செய்தவர்களுக்கான புதிய காணிகள் மதியாமடு நாக தம்பிரான் கோவில் பகுதியில் வழங்கப்பட்டன. இந்தப் பகுதியில் சுமார் 6 குடும்பங்கள் வரை இதுவரை மீள்குடியேறியுள்ளன.

இந்தப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கள் விற்பனை நிலையத்திற்கு நாளாந்தம் வரும் பாவனையாளர்களால் அயலிலுள்ள மக்களுக்கு மிகுந்த அசௌகரியம் ஏற்பட்டு வருவதாக அந்தக் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே மக்களின் குடியிருப்புக்கு அப்பால் இந்தக் கள் விற்பனை நிலையத்தை கொண்டு சென்று மக்களின் வாழ்வுக்கு வழி சமைக்க சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினர் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் எனவும் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். (28, 77)

# தையல் பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கல்

முல்லைத்தீவு-வள்ளிபுனம் பிரதேசத்தில் தையல் பயிற்சியை நிறைவு செய்த முதற்கட்ட மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்றது.

வள்ளிபுனம் பொதுநோக்கு மண்டபத்தில் இக்கிராமத்திலுள்ள பெண்களுக்கு தையல் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இப்பயிற்சியில் முதற்கட்டமாக நிறைவு செய்த 35 பெண்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

கிராம அபிவிருத்திச் சங்க செயலாளர் ஐ. மாதவராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் சி. ஜெயகாந்தன், ஐ.ஓ.எம். நிறுவனப் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (கே)



கிளிநொச்சி புகையிரத நிலைய நிர்மாணப்பணிகள் ஆரம்பம் யாழ். தேவி எப்போது வரும்?

# பதிவிறக்கப் பெட்டகம்

இலக்கண சுத்தத்தோட
எழுதணும் கவிதை என்றார்
கையிலே வாங்கிப் பார்த்துக்
கழிநெடில் விருத்தம் என்றார்
ஒருவரி உரசிப் பார்த்தார்
கருவிளங் காய் ஈதென்றார்
மற்றொரு வரியைச் சுட்டி
மாற்றிந்தச் சீரை என்றார்
அக்கக்காய்க் கழற்றிப் போட்டார்
அருந்தமிழ்ப் பெயர்கள் சொன்னார்
கடைசியில் திரும்பிப் பார்த்தேன்
கவிதையைக் காணோம் அங்கே.

– ராஜன்

எழுத்தாளனுக்கும்
வாசகனுக்கும்
நடுவில்
வார்த்தைகள்
நிற்கின்றன
அவைகளைத்
துடைத்தெறிய வேண்டும்
வேண்டும்.

– நகுலன்

பிரசுரத்திற்குப்
பின்பே தெரியும்
என் கவிதையின்
எல்லா
அர்த்தங்களும்
குறிப்பாய் எனக்கு.

– ஆர்.உமாபதி

யாப்புடைத்த கவிதை
அணையுடைத்த காவேரி
யாப்பற்ற கவிதை
இயற்கை யெழில் இருக்க
செயற்கையணி எதற்கென்று
உடையுடன் ஒப்பனையும்
நீக்கிவிட்ட கன்னி.
கார்குழ லாகமெல்லாம்
கவர்ந்தெழில் கனிய வீங்கி
ஈர்க்கிடை போகலாக
வெதிரெதில் பணைத்து வீங்கும்
வார் குல மறுத்த
கொம்பை வரிமுலை
ஐயா இது!

– சி.மணி

திட்டமிட்டு வீட்டைக்
கட்டினான் படைப்பாளி
கட்டின வீட்டுக்குக்
குற்றம் சொன்னான்
விமர்சகன்
கோபுரமென்றும்
குடிசையென்றும்
குழம்பித் தவித்தான்
வாசகன்.

– முஸ்தபா

குற்றிகர முற்றிகரச் சந்திகளை
சீர் சீர் ஆய்ப் பிரித்து
தளை தளையாய் அடித்து
ஒரு ஒற்றை வைத்து
சுற்றிச் சுற்றி வந்து
எங்கும் மை நிரப்பி
எழுத்துக்களை உருவாக்கி
பொருளைச் சேர்த்து
வார்த்தைகள் ஆய்ச் செய்து
ஒவ்வொரு வாக்கியத்திற்கும்
கமா மற்றும் முற்றுப்புள்ளி வைத்து
ஏதாவது சொல்லியாக வேண்டும்
நமக்கேன் வம்பு

– ஆத்மாநாம்

பழம ஆடை
அணி அலங்கார
ஒப்பனைகளுடன்
அரங்கேறிய உங்கள்
அடையாளம் தெரியவில்லை
எனக்கு
மேடையின் பின்னே
ஒப்பனை அறையின்
எளிய வாயிலில்
காத்திருக்கிறேன்
முகம் பார்க்க.

– புவியரசு

கணக்குப் போட்டுப்
பிழைத்து வரும் சமூகம்
கவிதை செய்வதைத் தொழிலென்று
ஒத்துக்கொள்வதாக இல்லை.

– விக்ரமாதித்யன்

பாதி வழியில்
ஓடுகிற பஸ்ஸிற்குள்
ஏறி
இடம்தேடிப் பறந்தலையும்
வண்ணத்துப் பூச்சி
நான் இறங்கிய பின்னும்
கூடவந்து மனதுக்குள்
உட்காரும்
ஒரு கவிதையின் மேல்.

– கல்யாண்ஜி

உன் கவிதை
கவிதை போலவே
இல்லை என்கிறார்கள்.
எனக்குப் புரியவில்லை
என் கவிதை எதற்காக
கவிதை போலிருக்க வேண்டும்?

– பா.வெங்கடேசன்

இந்தக் கவிதை
எப்படி முடியும்
எங்கு முடியும்
என்று தெரியாது
திட்டமிட்டு முடியாது
என்றெனக்குத் தெரியும்
இது முடியும் போது
இருக்கும் (இருந்தால்) நான்
ஆரம்பத்தில் இருந்தவன் தானா

– ஆத்மாநாம்

வண்ணத்துப் பூச்சியை
வதைக்காதவன்
குருவியைச்
சுடாதவன்
நிலவை
இரசிப்பவன்
ஆற்று நீரை
அசிங்கப்படுத்தாதவன்
பூவைக் கிள்ளாதவன்
இவர்களும்
கவிஞர்கள்தாம்.

– ஜெக.ராஜா

ஒரு மரத்தைப் போன்ற
அழகான கவிதையைப் பார்க்க
முடியாது என்று நினைக்கிறேன்.
பசித்த வாயை பூமியின்
இனிய மார்பில் பதித்திருக்கும் மரம்.
தினம் முழுதும் கடவுளை நோக்கி
இலைநிறை கைகளை உயர்த்திப்
பிரார்த்திக்கும் மரம்.
கோடையில் கூந்தலில் பறவைக்
கூடுகள் அணிந்து
குளிரில் மார்பில் பனிக்கட்டி படிந்து
மழையுடன் நெருக்கமாய் வாழும் மரம்.
கவிதைகள் செய்வது என் போன்ற முட்டாள்கள்
கடவுள் ஒருவர்தான் மரம் செயத் தெரிந்தவர்.

– ஜோய்ஸ் கில்மர்

பழம,
உருவக,
குறியீட்டு இடையீடில்லாத
நிர்வாணக் கவித்துவம்
வேண்டி நீ எப்போது
தியானிக்கப் போகிறாய்?

– கலாப்ரியா

# அவதூறுகளுக்கு மத்தியிலும் அபிவிருத்தியில் அர்ப்பணிப்புடன் செயற்படுபவர் அமைச்சர் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

1994ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் யாழ். மாவட்ட மக்களின் மேம்பாட்டில் அதிக அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றார். பலரின் அவதூறுமிக்க பரப்புரைகளுக்கு மத்தியிலும் தனிமனிதனாக நின்று செயற்படுபவர். அவரது அர்ப்பணிப்பு மிக்க தொடர் உழைப்பே இன்று யாழ். மாவட்டத்தை நிமிர வைத்துள்ளது என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

தென்மராட்சி- கெற்பேலியில் மின் இணைப்பை ஏற்படுத்தி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், இதுவரை சுமார் 300 மில்லியன் ரூபா செலவில் தீவகத்திற்கும் பல மில்லியன் ரூபா செலவில் தென்மராட்சிக்கும் இன்று மின் இணைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அத்தோடு கடந்த காலங்களில் மின் இணைப்பைப் பெறாத பகுதிகளும் இன்று மின்சாரத்தினைப் பெற்றுள்ளன.

அரசாங்கத்தின் அனைவருக்கும் மின்சாரம் என்ற திட்டத்திற்கமைவாக நாட்டின் அனைத்து மக்களும் மின்சாரத்தின் பயனைப் பெறவேண்டுமென்ற கொள்கையுடன் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதுபோன்று யுத்தத்திற்குப் பின் யாழ்.மாவட்டம் இன்று அபிவிருத்தியில் பாரிய முன்னேற்றம் கண்டுள்ளது. மக்களது



வாழ்வியல் பொருளாதாரம் உட்கட்டுமானம் போன்ற செயற்பாடுகள் இதன் பிரதிபலிப்பை சான்றுபடுத்துகின்றன. ஆனால் சிலர் இதை மறைக்கின்றனர், சிலர் உரிமை கோருகின்றனர், ஆனால் 1994ஆம் ஆண்டு கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் யாழ். மாவட்டத்தின் பிரதிநிதித்துவத்தை பெற்றநாள் தொடக்கம் அவரது தலைமையில் இம் மாவட்ட மக்களின் மேம்பாட்டுக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு மேம்பாடும் எட்டப்பட்டுள்ளது.

மனசாட்சியுடைய அனைவரும் இதை திறந்த மனதுடன் ஏற்றுக்கொள்வர். அத்தோடு பலரின் அவதூறு பிரசாரங்களுக்கு மத்தியிலும் தனிமனிதனாக நின்று யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு சேவையாற்றியவர். எத்தகைய அவதூறுகளுக்கும் அஞ்சி அவரதன் முயற்சியை கைவிட்டதில்லை.

அத்தோடு இன்று இப் பகுதியின் அபிவிருத்திக்கு விசேட நிதியினை அரசாங்கம் ஒதுக்கீடு செய்து திட்டங்களை செயற்படுத்தி வருகின்றது. அதற்கு பின்னணியாக அமைந்திருப்பதும் அவரது அரசியல் செயற்பாடுகளே.

எனவே மக்களின் மேம்பாடு கருதி நாம் முன்னெடுத்துவரும் இவ் இணக்கப்பாட்டுடனான அரசியல் மற்றும் மேம்பாட்டு செயற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுக்க நாம் தயாராக உள்ளோம். எம் மக்கள் அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றத்தை எட்டும்வரை எமது செயற்பாடுகள் தொடரும். அதற்காக முழு அர்ப்பணிப்புடனும் நாம் செயற்படத்தயாராகவுள்ளோம்.

இம் மாவட்டத்தின் மின் இணைப்பு செயற்பாட்டுக்கும் எம்மோடு இணைந்து பூரண ஆதரவை நல்கிவரும் மின்சக்தி எரிசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க அவர்களுக்கும் எமது மக்களின் சார்பில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன் என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார அவர்கள் மேலும் தெரிவித்துள்ளார்.

தென்மராட்சி மறவன்புலோ கிழக்கு பகுதியைச் சேர்ந்த சுமார் 185 குடும்பங்களுக்கான பிரதான மின் இணைப்பை மின்சக்தி எரிசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க அவர்களும், ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் அவர்களும், ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) அவர்களும் இணைந்து ஆரம்பித்து வைத்தனர். தொடர்ந்து கெற்பேலிப் பகுதிக்கான மின்வழங்கல் செயற்பாட்டை ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர்களான முருகேசு சந்திரகுமார், சில்வேஸ்திரி அலென்ரின் ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர்.

இந்நிகழ்வில் சாவகச்சேரி நகரசபை உறுப்பினரும் ஈ.பி.டி.பியின் தென்மராட்சி அமைப்பாளருமான சூசைமுத்து அலெக்ஸ்சாண்டர் (சாள்ஸ்), சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் ஞானலிங்கம், இமானுவேல் டயஸ், இலங்கை மின்சார சபையின் வடமாகாண பிரதி பொதுமுகாமையாளர் குணதிலக, வடக்கின் வசந்தம் மின்வழங்கல் திட்ட முகாமையாளர் குணசீலன், சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திருமதி சாந்தசீலன், ஈ.பி.டி.பியின் தென்மராட்சி இணைப்பாளர்களான வலன்ரைன், விஸ்வா, சாவகச்சேரி மின் அத்தியட்சகர் அன்ரன் ஆகியோரும் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

## கண்காணிக்க விசேட குழு

(கொழும்பு)

தேர்தல்கள் செயலகம் ஊடாக அநுராதபுரத்திற்கு நேற்று முன்தினம் பகல் விசேட குழுவொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரத்தில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை கண்காணிப்பதுவும் தேர்தல் சட்ட மீறல்களை குறைப்பதுவுமே விசேட குழு அனுப்பப்பட்டமைக்கான காரணம் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

## காலாவதியான கள்ளு நயினாதீவில் மீட்பு

(நயினாதீவு)

காலாவதியான போத்தல் கள்ளு பொதுசுகாதாரப்பரிசோதகர் தலைமையிலான குழுவினரால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

நயினாதீவில் உள்ள கள்ளு விற்பனை நிலையத்தில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த சமயமே சுமார் 1032 போத்தல் கள்ளு கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இது தொடர்பாக வழக்கு தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. (175)

## வணங்கியவர்கள் வைத்தியசாலையில்

(கொழும்பு)

குருநாகல் - வாரியபொல ஸ்ரீ சுமங்கல பிரிவெனேவில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த கபிலவஸ்துவை வணங்கச் சென்ற 80 பக்தர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தலைசுற்று, வாந்தி உள்ளிட்ட சிரமங்களால் இவர்கள் வைத்தியசாலையில் அனுமிக்கப்பட்டுள்ளனர். கபிலவஸ்த்துவை வணங்கச் சென்றவர்களின் கூட்டம் அதிகமானதால் நெரிசலில் சிக்கி இவர்களுக்கு இச்சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

# வடக்கில் கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்க செயற்றிட்டம்





(கிளிநொச்சி)

வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள அலுவலர்களின் வெளிக்கள பணிகளை நிறைவேற்றுவதற்கு போதிய வாகன வசதிகள் இன்றி மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகி இருப்பதால் பண்ணையாளர்களின் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றுவதில் தடங்கல்கள் நிலவிவந் துள்ளன. இந்நிலையில் தேவையான வாகன வசதிகளை மேம்படுத்தும் நோக்குடன் கௌரவ ஆளுநர் அவர்களின் வழிகாட்டலுக்கமைய உலக சுகாதார ஸ்தாபனம்(FAO) மற்றும் மத்திய கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் ஆகியவற்றுக்கு விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கமைய மத்திய கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தினால் இரண்டு பிக்கப் வகை வாகனங்களும் உலக உணவு ஸ்தாபனத்தினரால் கனடிய நிதி உதவித்திட்டத்திணூடாக 9 பெண் அலுவலர்களுக்கான மோட்டார் சைக்கிள்களும், 2 ஓட்டோ வாகனங்களும் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்திற்கு வழங்கும் நிகழ்வு பிரதம செயலர் திருமதி விஜயலட்சுமி அவர்களின் தலைமையில் கடந்த வியாழக்கிழமையன்று கிளிநொச்சி 155ஆம் கட்டையில் அமைந்துள்ள கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள பணிப்பாளரின் அலுவலகத்தில் நடைபெற்று அவை கையளிக்கப்பட்டுள்ளன.

பிரதம செயலர், மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் திரு.U.L.M.Haldeen கால் நடை உற்பத்தி சுகாதார திணைக்கள மாகாணப் பணிப்பாளர் டாக்டர்.சி.வசீகரன், விவசாய திணைக் கள மாகாண பணிப்பாளர் சிவகுமார், மற்றும் இரு திணைக்களங்களையும் சேர்ந்த மாவட்ட உதவிப்பணிப்பாளர்களும் கால்நடை வைத்தியர்களும் ஏனைய அலுவலர்களும் உலக உணவு ஸ்தாபன அதிகாரிகளும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் மாகாண விவசாய திணைக்களத்தினரின் பண்ணையாளர்களுக்கான பயிற்சித் தேவைக்கென உலக உணவு ஸ்தாபனத்தினரால் சிறிய பேருந்து வண்டி ஒன்றும் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் கரைச்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கத்தினரின் பால் கொள்வனவு மேம்பாட்டிற்கென FAO அனுசரணையுடன் வழங்கப்பட்ட முச்சக்கர வண்டி ஒன்றினை சங்க பொது முகாமையாளர் முகுந்தன் அவர்கள் கையேற்றுக்கொண்டார்.

# இலவசக் கல்வியை இல்லாதொழிக்கத் திட்டம்

(கொழும்பு)

இந்த நாட்டிற்கு இலவச கல்வியை நாங்கள் தான் வழங்கினோம். ஆனால் இந்த அரசாங்கம் இலவசக் கல்வியை இல்லாதொழிக்க திட்டமிட்டுச் செய்றபடுகிறது என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மூதூர் பொது மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், இன்று அரசாங்கத்தினால் ஒரு பரீட்சையைக் கூட முறையாக நடத்த முடியவில்லை. அண்மையில் நடத்திய புலமைப் பரிசில் பரீட்சைக்கான வினாப் பத்திரம் பரீட்சைக்கு முன்பே வெளியாகிவிட்டது. அதேபோல் நடைபெற்ற சாதாரணதர, உயர்தர பரீட்சைகளிலும் பிரச்சினைகள எழுந்துள்ளன. 'இஸட் புள்ளி' பிரச்சினை இன்னும் முடிந்தபாடில்லை.

அரசாங்கம் பல்கலைக் கழகங்களை இழுத்து மூடியுள்ளது. மாணவர்களும் விரிவுரையாளர்களும் வீதியில் இறங்கி உரிமைக்காக போராடுகின்றனர். கூடுதலான பணத்தை செலவு செய்ய வேண்டிய கல்விக்கு மிகக்குறைந்தளவு பணத்தையே அரசாங்கம் செலவிடுகிறது.

முறையான அபிவிருத்தித் திட்டங்கள் எதனையும் அரசாங்கம் முன்னெடுக்கவில்லை. சமுர்த்தி திட்டத்தையும் இல்லாமற் செய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது. இம்முறை வெற்றிலைக்கு வாக்களித்தால் சமுர்த்தித்திட்டமும் இல்லாமற் போய்விடும்.

இன்று மக்கள் சுதந்திரமாக வியாபாரத்தையோ மீன்பிடித் தொழிலையோ செய்ய முடியாதவர்களாக உள்ளனர். இப்பகுதியில் கைவிடப்பட்ட வயல் நிலங்களில் வீடுகள் அமைப்பதற்கு கூட தடை விதித்துள்ளனர்.

எனவே, முஸ்லிம்களின் சமய கலாசார உரிமைகளைப் பாதுகாப்பதற்கு, இலவச கல்வியை தொடர்ந்து காப்பதற்கு, தத்தமது தொழில்கள் விருத்தியடைவதற்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்குமாறு கேட்கின்றேன். ஆட்சியை மாற்றுவதற்கான முன்னெடுப்பாக இம்மாகாண சபைத் தேர்தல் அமையப் போகிறது என்பதையும் கூறிக்கொள்கின்றேன் என்றார். இக்கூட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க உள்ளிட்ட பலர் உரையாற்றினர்.

# க.பொ.த. (சாதாரணதர) மாதிரி வினாத்தாள்
# G.C.E. (O/L) Examination model Paper

**வரலாறு ( II)**

ஆசிரியர் : S.சண்முகநாதன்

(தொடர்ச்சி....)

## பகுதி II

**கவனிக்க:**

**பகுதி II இலிருந்து மூன்று வினாக்களுக்கும் பகுதி III இலிருந்து இரு வினாக்களுக்கும் விடை எழுதுக.**

**எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.**

2) கீழே A,B,C,D எனக் காட்டப்பட்டுள்ளவர்களின் பெயர்களை முறையே குறிப்பிடுக.




3) கீழே A,B,C,D எனக் குறிப்பிடப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

A - உலகப்போரின்போது எந்த நாட்டின் விமானம் ஹவாய்த்தீவில் தாக்குதல்களை நடாத்தியது?

B- வசப மன்னனின் ஆட்சி அதிகாரம் பற்றிக்கூறும் ஆவணம் யாது?

C - முஸ்லிம்களுக்குத் தனியான ஒரு இராட்சியம் அவசியமென முதன்முதலில் வலியுறுத்தியவர் யார்?


D - திரியாய (திருகோணமலை) என்ற இடத்தில் ஹிரிகடுசாய என்ற தாதுகோபத்தை அமைத்தவர்கள் யார்?

02)

1) அருகே தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தில் இலங்கையின் புராதன துறைமுகங்கள் A,B,C எனக் காட்டப்பட்டுள்ளன. அவற்றைப் பெயரிடுக.

2) பின்வரும் ஆற்றுப்பள்ளத்தாக்குகளை அண்டி அமைந்த ஆரியக்குடியிருப்புக்களை A,B,C,D என்னும் ஒழுங்கில் தருக.

A - கதம்ப நதி
B - கால்க நதி
C - கோண நதி
D - கருந்தி நதி




3) புராதன மன்னர்களின் புகழுக்கு அவர்களது நீர்ப்பாசனப் பணிகள் காரணமாயிருந்தன. இது தவிர அவர்கள் மேற்கொண்ட ஏனைய இரு பணிகளைக் குறிப்பிட்டு விளக்குக.

03) 1) ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட மூன்று நிகழ்வுகளை பின்வரும் ஆண்டுகளை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிடுக.

A - 1658 B - 1766 C - 1782

2) பின்வரும் வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்புபட்டவர்களை முறையே A,B,C,D எனப் பெயரிடுக.

A - இந்தியாவின் வீரபுருஷனான கிருஸ்ணனின் வாழ்க்கையுடன் தொடர்புபட்ட மன்னன்.

B - இலங்கையின் இலக்கியத்துக்கு வளமூட்டிய 'பூஜாவலிய' என்ற நூலை எழுதியவர்

C - அம்புலுகல இளவரசனால் தோற்கடிக்கப்பட்ட மலையரட்டையின் பிராந்தியத் தலைவன்

D - புத்தளம் பிரதேசத்தில் இடம்பெற்ற கறுவா வியாபாரம் குறித்து குறிப்பிட்டுள்ள தேசசஞ்சாரி

3) ஒல்லாந்தர் ஆட்சியின் செல்வாக்கினை இரண்டு காரணிகளைக் கொண்டு விளக்குக.

4) ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் கண்டி இராட்சியத்தை அவர்கள் கைப்பற்ற முடியாமல் போனமைக்கான காரணங்கள் மூன்றினைச் சுருக்கமாக விளக்குக.

04)

1) 13 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 15 ஆம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியில் இலங்கையின் பின்வரும் இடங்கள் எப்பெயர்களால் அழைக்கப்பட்டன என எழுதுக.

(அ) யாப்பகூவ (ஆ) கம்பளை (இ) தெதிகம

2) இக்காலப்பகுதியில் பொருளாதார அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் 4 எழுதுக.

3) மேற்படி காலத்தில் மக்களின் சமூக அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களை இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக.

4) கோட்டைக்காலப்பகுதி "இலக்கியப் பொற்காலம்" எனக் கூறப்படுவதற்கான காரணங்களை விபரிக்குக.

05)

1) பின்வரும் நிகழ்ச்சிகளுடன் தொடர்புபட்ட மூவரை A,B,C என்னும் ஒழுங்கில் குறிப்பிடுக.

A - மலையக ஆக்கிரமிப்பை மேற்கொண்டு அதில் தோல்வியைத் தழுவிய ஆங்கிலேய ஆளுநர்

B - கி.பி 1818 இல் ஏற்பட்ட பிரித்தானியருக்கு எதிரான போராட்ட காலத்தில் இந்நாட்டில் இருந்த பிரித்தானிய ஆளுநர்.

C- இராஜகாரிய முறையை மீளவும் ஏற்படுத்துவதற்கான செயற்பாடுகளை 1805 இற்குப் பின்னர் ஆரம்பித்தவர்.

2) கோல்புறூக் இராசகாரிய முறையை நீக்கும்படி சிபாரிசு செய்தமைக்குரிய காரணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

3) இலங்கையில் கறுவாச் செய்கை முக்கியமிழந்தமைக்குரிய காரணங்கள் இரண்டினை விளக்குக.

4) இலங்கையில் கோப்பிச் செய்கை வீழ்ச்சியடைந்தமைக்கான காரணங்கள் இரண்டினை விளக்குக.

06)

1) பின்வரும் கூற்றுக்களுடன் தொடர்புடைய சீர்திருத்தங்களின் பெயர் களைக் குறிப்பிடுக.

A - இராசகாரிய முறையை இல்லாதொழித்தமை
B - வரையறுக்கப்பட்ட வாக்குரிமையை அறிமுகப்படுத்தல்.
C - உத்தியோக சார்புடையோர் தொகையை முதன்முதலில் அதிகரித்தமை

2) டொனமூர் சீர்திருத்தத்தின் முக்கிய அம்சங்கள் 4 தருக.

3) டொனமூர் அமைச்சர் குழுவுக்கும் சோல்பரி அமைச்சரவைக்கும் இடையேயான வேறுபாடுகள் இரண்டினை விளக்குக.

4) சோல்பரித் திட்டத்தில் ஆள்பதி நாயகத்தின் வகிபங்கு இரண்டினை விளக்குக.

## பகுதி III

07)

1) தேசிய அரசுகள் உருவாவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் 3 தருக.

2) நாடுகாண் பயணங்களுடன் தொடர்புடைய நால்வர் A,B, C, D எனப் பெயரிடப்பட்டுள்ளனர். அவர்களின் பெயர்களை ஒழுங்கு முறையாக எழுதுக.




3) நாடுகாண் பயணங்களை ஊக்குவித்த காரணிகள் இரண்டினை விளக்குக.

4) கத்தோலிக்க திருச்சபைக்கு எதிராக புரட்டஸ்தாந்து சமயம் தோற்றம் பெற்றமைக்கான காரணங்கள் இரண்டினை விளக்குக.

08)

1) கீழே A,B,C ஆகியவற்றினால் காட்டப்படும் விடயங்கள் ஒவ் வொன்றுக்கும் உரிய விடையை அடைப்புக்குறிகளினுள்ளே இருந்து தெரிந்தெடுத்து முறையே எழுதுக.

A - ஜப்பானை இணைப்பதற்கும் அங்கு சமாதானத்தையும் உறுதிப் பாட்டையும் ஏற்படுத்துவதற்கும் அத்திவாரமிட்டவர்.

B - ஜப்பானின் மானிய முறைக் காலத்தில் சமூகத்தின் தாழ் மட்டத்தி லிருந்து டொகுகாவா ஷோகுன்கள் ஆட்சியின்கீழ் ஆட்சியாளர்களாக அமைந்த குழு.

C - தற்கால ஜப்பான் நாடாளுமன்றத்துக்கு வழங்கும் பெயர்

( நொபுனகா, சுன் - யாத் -சென், சாமுராய்கள், டைமியோர்கள், டயற், ஸ்ரேற் ஜெனறல்)

2) டொகுகாவா ஷோகுன்களின் கீழ் ஜப்பானில் விவசாயம் தொடர்பாக ஏற்பட்ட இருமாற்றங்களைக் குறிப்பிடுக.

3) மேஜிஜி ஆட்சிக் காலத்தில் ஜப்பான் ஒரு புதிய பொருளாதாரக் கோலத்துக்கு வழிப்படுத்தப்பட்ட விதத்தை இருவிடயங்களின் கீழ் விவரிக்க.

4) ஜப்பான் ஆசிய நாடுகளில் தனது அதிகாரத்தைப் பரவச் செய்த விதத்தை உதாரணங்கள் தந்து விளக்குக.

09)

1) ஆணையிடும் ஆட்சியை நடாத்திய மூவரின் பெயர்களைத் தருக.
2) முதலாம், இரண்டாம் உலகப் போருக்கான உடனடிக் காரணங்களைக் குறிப்பிடுக.
3) "வேர்செயில்ஸ்" உடன்படிக்கையின் இரு முக்கிய அம்சங்களை விளக்குக.
4) இரு உலக மகாயுத்தங்களினாலும் ஏற்பட்ட விளைவுகள் இரண்டினைத் தலைப்பிட்டு விளக்குக.

10)

1) முதலாம் உலகப்போரின்போது ஆரம்பத்தில் நட்பு நாடுகள் அணியில் இணைந்திருந்த ஐரோப்பிய நாடுகள் மூன்றினைக் குறிப்பிடுக.

2) முதலாம் உலகப்போரின்போது ஐக்கிய அமெரிக்கா ஆரம்பத்தில் யுத்தத்தில் ஈடுபடாமைக்குரிய காரணங்கள் எவை?

3) இப்போரில் சேர்மனி சார்ந்த நாடுகள் தோல்வியடைந்தமைக்கான காரணங்கள் இரண்டினை விளக்குக.

4) சர்வதேச சங்கம் தோல்வியடைந்தமைக்கான காரணங்கள் இரண்டினை விளக்குக.

# தெரிந்துகொள்ளுங்கள்

**2012 ஆம் ஆண்டு**

- 2012 ஆம் ஆண்டு 2012 .01.21 இல் ஜனாதிபதியால் மும்மொழி இலங்கைக்கான ஆண்டாகப் பிரகடனம் செய்யப்பட்டது.
- மும்மொழி இலங்கையொன்றுக்கான பத்தாண்டு வேலைத்திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**டைட்டானிக் நூறு ஆண்டுகள் நிறைவு**

- 1907 இல் 270 மீற்றர்கள் நீளமும், 28 மீற்றர்கள் அகலமும் 46329 தொன்கள் எடையும் கொண்ட பாரிய ஆடம்பரப் பயணிகள் கப்பலாக உருவாக்கப்பட்டது.
- 1912 இல் ஏப்ரல் 10 இல் இங்கிலாந்தில் உள்ள சவுதாம்ப்டனில் இருந்து சேர்பர்க் பிரான்ஸ் மற்றும் அயர்லாந்தில் உள்ள குயின்ஸ்டவுண் வழியாக நியூயோர்க்கை சென்றடைய திட்டமிடப்பட்டது.
- இக் கப்பலின் கப்டனாக எட்வேர்ட் ஜேசிமித் கடமையாற்றினார்.
- 1912 ஏப்ரல் 14 நள்ளிரவில் அட்லாண்டிக் கடலில் சென்று கொண்டிருந்தபோது பனிப்பாறையுடன் மோதி விபத்திற்குள்ளானது.
- 1912 ஏப்ரல் 15 இல் அதிகாலையில் கப்பலில் இருந்து 1514 பேர் பலியானதுடன் இதன் 100 ஆண்டுகள் நிறைவு தினம் 2012 இல் ஏப்ரல் 15 இல் அனுஷ்டிக்கப்பட்டது.

**உலக நீர் தினம்**

- ஒவ்வொரு வருடமும் மார்ச் 22 இல் அனுஷ்டிக்கப்படுகின்றது.
- இவ் ஆண்டின் தொனிப்பொருள் நீர் மற்றும் உணவுப் பாதுகாப்பு என்பதாகும்.
- 2025 ஆம் ஆண்டளவில் உலக சனத்தொகையில் 40% மானோர் சுத்தமான குடிநீரின்றி காணப்படுவர் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

**சாரணிய நூற்றாண்டு**

- சாரணர் இயக்கத்தின் தந்தை பேடன் பவல் பிரபு ஆவார்.
- 1907 இல் இங்கிலாந்தின் பிரவுன்ஸ் தீவில் பேடன் பவல் பிரபுவால் உலக சாரணர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1912 இல் பயிர்ச்செய்கையாளராக இருந்த பிரான்ஸில் ஜோர்ஜ் ஸ்டீவன் என்பவரால் இலங்கைக்கு சாரணியம் அறிமுகப் படுத்தப்பட்டது.
- முதலாவது சாரணத் துருப்பு மாத்தளை Christ church கல்லூரியில் உருவாக்கப்பட்டது.
- 2012 ஏப்ரலில் இலங்கை சாரணிய நூற்றாண்டு அனுஷ்டிக்கப்பட்டது.
- உலக சாரணர் தினம் பெப்ரவரி 22 இல் அனுஷ்டிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

**இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்**

- நாட்டின் தொடர்பாடல் துறையில் முன்னோடியான இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் 2012 ஏப்ரலில் 30 வருடங்கள் நிறைவை கொண்டாடியுள்ளது.
- இக் கூட்டுத்தாபனம்1982 இல் உருவாக்கப்பட்டது.

**பூமி மணித்தியாலம்**

- உலக வனவிலங்கு நிதியத்தினால் வருடாந்தம் அனுஷ்டிக்கப்படும் சர்வதேச தினமாகும்.
- இத்தினம் 2007 ஆம் ஆண்டு அவுஸ்ரேலிய சிட்னி நகரில் 2.2 மில்லியன் வீடு மற்றும் வணிக நிறுவனங்களில் ஒரு மணி நேரம் மின்சார ஒளியை நிறுத்தி காலநிலை மாற்றத்திற்கு எதிராக அனுஷ்டித்ததன் மூலம் தொடங்கப்பட்டது.
- இவ் வருடத்திற்கான தினம் 2012 மார்ச் 31 இல் அனுஷ்டிக்கப்பட்டது.

**சர்வதேச மகளிர் தினம்**

- வருடாந்தம் மார்ச் 8 இல் அனுஷ்டிக்கப்படுகின்றது.
- முதலாவது சர்வதேச மகளிர் தினம் அமெரிக்க சமவுடமை கட்சியால் அமெரிக்காவில் 1909 - 02-28 இல் அனுஷ்டிக்கப்பட்டது.
- முதலாவது சர்வதேச மகளிர் மகாநாடு 1910 இல் கொபன்கேஹனில் நடைபெற்றது.
- மார்ச் 19 இல் அனுஷ்டிக்கப்பட்ட இத்தினம் 1913 ஆம் ஆண்டு மார்ச் 8 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டது.
- இது சர்வதேச தினத்திற்கு 1975 இல் ஐக்கிய நாடுகள் சபையின் அங்கீகாரம் கிடைத்தது.
- 2012 ஆம் ஆண்டிற்கான தொனிப்பொருள் Connecting girls inspiring futures ஆகும்
- தற்போது உலகில் 49.6% ஆண்களும் 50.4% பெண்களும் உள்ளனர்.

**மேதினம்**


- உலகில் உள்ள அனைத்து ஊழியர்களும் தமது உரிமைகளை முன்னிறுத்தி மேற்கொள்ளும் போராட்டமாகும்.
- உலகில் முதலாவது தொழிலாளர் தினம் 1890 இல் ஐக்கிய அமெரிக்காவிலும் கியூபாவிலும் கொண்டாடப்பட்டது.
- இலங்கையின் முதலாவது தொழிலாளர்தினம் தொழிற்சங்க தந்தை A.E.குணசிங்கவால் 1934 இல் ஆரம்பிக்கப்பட்டது.
- இலங்கையின் தற்போதைய ஊழியர் படை மொத்த ஊழியர் - 8.3 மில்லியன்
  பெண்கள் - 2.9 (35.2%)
  ஆண்கள் - 5.4 மில்லியன் (64.8%)

**டெங்கு**

- வைரஸ் மூலம் உண்டாகும் ஒரு நோயாகும்.
- ஈ.டிஸ், ஈஜிப்ரி மற்றும் ஈடிஸ் அல்போபிக்ரஸ் எனப்படும் நுளம்புகள் கடிப்பதன் மூலம் இந்நோய் உண்டாகிறது.
- டெங்குக் காய்ச்சலைத் தடுக்க அதைப் பரப்பும் நுளம்புகள் உண்டாவதைத் தடுத்தல் வேண்டும். இந்நுளம்புகள் நீர் தேங்கி நிற்கும் பாத்திரங்களில் உண்டாவது குறிப்பிடத்தக்கது.
- இதற்கு எதிராக வக்சீன் இல்லை.
- இதற்கு குறித்த விஞ்ஞான சிகிச்சை இல்லை
- இதன் காரணமாக இறப்பவர்களின் எண்ணிக்கை புகையிலையை பயன்படுத்துவதன் விளைவாக இறப்பவர்களின் எண்ணிக்கையிலும் குறைவாகும்.
- இலங்கையில் தற்போது 12.336 டெங்கு நோயாளிகளும், 75 பேர் வரை மரணமடைந்தும் உள்ளனர்.

(தொடரும்.....)

# அணு உலையால் ஆபத்து இல்லை; நீதிமன்றம் பச்சைக்கொடி



(சென்னை)

கூடங்குளம் அணுமின் நிலையத்தை எப்படியாவது செயற்பட விடக்கூடாது என நினைத்தவர்களுக்கு பேரிடியாக சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இதன் மூலம் அணுமின்நிலையம் விரைவில் தனது உற்பத்தியை துவக்குவதுடன் தற்போது ஏற்பட்டு வரும் மின் பற்றாக்குறை விரைவில் தீரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பல ஆயிரம் கோடி செலவில் உருவாக்கப்பட்ட அணுமின்நிலையம் செயற்பட துவங்கும் நேரத்தில் இங்குள்ள தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மீனவ மக்களிடம் பீதியை கிளப்பி விட்டு அரசுக்கு எதிரான போராட்டத்தை தூண்டி விட்டன. கூடங்குளம், இடிந்தகரை உள்ளிட்ட பகுதிகளில் பதற்றம் தொற்றிக்கொண்டது. பொலிஸார் குவிக்கப்பட்டனர். இதனால் மத்திய, மாநில அரசு சார்பில் குழுக்கள் அமைக்கப்பட்டு மக்களிடம் விசாரிக்கப்பட்டு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டன. இந்த அறிக்கையின்படி அணு மின் நிலையத்தை துவக்கலாம், பாதுகாப்பு விஷயத்தில் அச்சப்படத்தேவையில்லை என தெளிவு படுத்தப்பட்டது.

இதனையடுத்து மாசுக்கட்டுப்பாட்டு வாரியமும் என்.ஓ.சி. என்ற சான்றை வழங்கி விட்டது. இப்போதாவது இந்த அணு உலையை தடுக்க வேண்டும் என்று கங்கணத்தோடு ஒரு பிரிவினர் சென்னை உயர்நீதிமன்றில் ஒரு மனுவைத் தாக்கல் செய்தனர். இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் போதிய பாதுகாப்பு அம்சங்கள் செய்யப்பட்டுள்ளதாக திருப்தி தெரிவித்தனர். அணு உலை பிரிவு- 1 மற்றும் பிரிவு - 2 செயற்படலாம். இதற்கு எதிரான அனைத்து மனுக்களும் தள்ளுபடி செய்யப்படுகிறது. இவ்வாறு நீதிபதிகள் அறிவித்துள்ளனர்.

# நிலக்கரி ஊழல் விவகாரம் சூடு, மன்மோகன்சிங்கிற்கு தலைவலி

நிலக்கரி சுரங்க முறைகேட்டை சுட்டிக்காட்டி எதிர்க்கட்சிகள் தொடர்ந்து 8ஆவது நாளாக நாடாளுமன்ற அவையை முடக்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ளன.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் தொடங்கி நடந்து வருகிறது.

இக்கூட்டத்தொடரில் பிரதமர் மன்மோகன் சிங் நிலக்கரி வாரியத்திற்கு அமைச்சராக இருந்த கால கட்டத்தில் ரூ.1.86 இலட்சம் கோடி இழப்பீடு ஏற்பட்டதாக மத்திய தணிக்கைக்குழு குற்றம் சாட்டியது.

இந்த விவகாரம் நாடாளுமன்றத்தில் எரிமலை போல் வெடித்துள்ளது.

இதனால் கடந்த 8 நாட்களாக எந்த அலுவலும் நடக்கவில்லை. பா.ஜ.கவினர் சபையை நடத்த விடாமல் அமளியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் மீதமுள்ள நாட்களில் நாடாளுமன்றத்தை சுமுகமாக நடத்திட காங்கிரஸ் தலைவர் சோனியா நேற்று முன்தினம் இரவு ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியை சந்தித்து ஆலோசனை நடத்தியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இருப்பினும் அவர்கள் பேசிய விவரம் குறித்த தகவல்கள் இல்லை. இந்நிலையில் வரும் 8ஆம் திகதியுடன் நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் நிறைவடைகிறது.

அதற்குள்ளாக முக்கிய மசோதாக்கள் நிறைவேற்றப்படுவதில் சிக்கல் எழுந்துள்ளது.

இந்தியச் செய்திகள்




# கைபேசி பாவனையால் நன்மைகளைவிட தீமைகளே அதிகம்



பொருள் இல்லார்க்கு இவ்வுலகமில்லை, அருள் இல்லார்க்கு அவ்வுலகமில்லை என்பர். இது போல் இன்றைய காலத்தில் போன் இல்லாதோருக்கு முன்னேற்ற வழி இல்லை என்று சொல்லக்கூடிய அளவிற்கு நம்முடைய வாழ்வில் வர்த்தக ரீதியில் மொபைல் போன் முழு அங்கமாகி விட்டது.

நம்மை ஆட்டுவிக்கும் மொபைல் போன் தரும் தீமைகள் குறித்து மத்திய அரசே எச்சரிக்கை செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது. இந்த அறிவிப்பில் மொபைல்போன் பயன்பாடு மற்றும் ரேடியேஷனில் இருந்து தப்பிக்க வழி கூறியிருக்கிறது. இதன் விவரம் வருமாறு;

முதலில் நீங்கள் மொபைல் பேசாமல் இருந்தால் அலுவலகத்தில் இருக்கும் போது தங்கள் உடலுடன் ஒட்டியபடி இல்லாமல் சற்று தள்ளி அதாவது மேஜை மீது வைப்பது நல்லது.

1. போன் பேசும்போது ஸ்பீக்கர் போன் ஆன் செய்தோ அல்லது ஹெட்செட் மூலமோ பேசிக் கொள்வது நல்லது. லான்ட்லைன் போனாக இருந்தாலும் இது பொருந்தும். 2. நீண்டநேர அழைப்பை தவிர்ப்பதுடன் இதற்கு பதில் எஸ்.எம்.எஸ். பகிர்ந்து கொள்ளவும். 3. நீங்கள் மூக்கு கண்ணாடி அணிபவராக இருந்தால் அதில் மெட்டல் பிரேம் இல்லாமல் பார்த்து கொள்ளவும். பேசும் போது இதனை தவிர்ப்பது நல்லது. 4. குளித்த நிலையில் ஈரத்தலையுடன் போன் பேசுவதை தவிர்க்கவும், காரணம் மெட்டல் மற்றும் தண்ணீர் இரண்டுக்கும் ரேடியேஷன் சக்தியை இழுக்கும் அதிகம் சக்தி கொண்டது. இதனைத் தவிர்ப்பதன் மூலம் கெடுதலில் இருந்து தப்பிக்கலாம். பேசாமல் இருக்கும்போது போன் உபகரணத்தை தனது உடலின்மீது படும்படியே அல்லது காற்சட்டைப் பாக்கெட்டிலே வைப்பதை தவிர்க்கலாம். காரணம் இந்த போன் ஒன்று அல்லது 2 நிமிடத்திற்கொருமுறை இது தனக்கான சமிக்ஞைகளை பெறுவதில் கூடுதல் சக்தியை வெளிப்படுத்தி கொண்டேயிருக்கும்.

# உலக பொருளாதார வளர்ச்சிக்கு வளரும் நாடுகளின் பங்கு அவசியம்



உலக பொருளாதார வளர்ச்சிக்கு வளர்ந்து வரும் நாடுகள் ஒத்துழைப்பு மிக அவசியமாக இருக்கிறது. இவை இணைந்து செயற்பட வேண்டும். அத்துடன் உலக அளவில் உணவு பாதுகாப்பு விஷயம் உன்னிப்பாக கவனித்து இது தொடர்பான சிறப்பு சட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று பிரதமர் மன்மோகன்சிங் அணிசேரா நாடுகள் பங்கேற்ற மாநாட்டில் பேசினார்.

நான்கு நாள் பயணமாக ஈரான் சென்றுள்ள பிரதமர் மன்மோகன்சிங், தலைநகர் தெஹ்ரானில் அணிசேரா மாநாட்டில் பங்கேற்று பேசியதாவது: கடந்து வந்த காலத்தில் சக்திகளை பரிமாறிக் கொண்டதன் விளவாக இன்றைய உலக ஆளுமை திறன் வளர்ந்துள்ளது. வளர்ந்து வரும் நாடுகளின் பங்களிப்பு உலக அளவில் மிக அவசியமானதாக உள்ளது. இந்நாடுகள் உலக வளர்ச்சிக்கு வழி வகுக்க முடியும். இதன் குரல் இப்போது ஓங்கி ஒலிக்கிறது.

சிரியாவில் உள்ள நிலை இந்தியாவுக்கு பெரும் கவலை அளிக்கிறது. உலக அளவில் ஜனநாயகத்தை நிலைநிறுத்த இந்தியா எப்போதும் உறுதுணையாக இருக்கும். மேற்கு ஆசியா, வட ஆபிரிக்கா வளர்ச்சி பாதையில் சென்று கொண்டிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. பொருளாதார வளர்ச்சி தொடர்பான விஷயத்தில் முழுக்கவனம் செலுத்திட வேண்டும். உணவு பாதுகாப்பு மிக அவசியமானது. பல நாடுகளில் இந்தப் பிரச்சினை கடுமையாக பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

உலக அளவில் மனித வளப் பயன்பாட்டை வளர்த்து இதில் கவனம் செலுத்த வேண்டும். பயங்கரவாதம் மற்றும் சைபர்கிரைம் ஒழிப்பு விஷயத்தில் அனைவரும் இணைந்து செயலாற்ற வேண்டும். அப்போதுதான் சவால்களை எதிர் கொள்ள முடியும். மாநாட்டின் போது பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரியை சந்தித்து இரு நாட்டு விவகாரம், குறிப்பாக சமீபத்திய கசாப் தொடர்பான வழக்கில் நீதிமன்றம் அளித்த தீர்ப்பு குறித்தும் பேசிக்கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..................................

முகவரி : ..................................

பிறந்த ஆண்டு : ..................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் “தினமுரசு” தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# வரதட்சிணை கேட்டால் இப்போது உச்ச தண்டனை

வரதட்சிணை கேட்டு கொடுமைப்படுத்துவோருக்கான தண்டனையை ஐந்தாண்டிலிருந்து, ஏழு ஆண்டாக உயர்த்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.


வரதட்சிணை கொடுமை ஒழிப்பு சட்டத்தில், சில திருத்தங்களைக் கொண்டுவர மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதன்படி, திருமணத்தின் போது அன்பளிப்பாக கொடுக்கப்படும் தங்க நகைகள் மற்றும் பிற பொருட்கள் குறித்த பட்டியல் தயாரிக்கப்பட்டு, இரு தரப்பினரும் கையெழுத்திட்டு, இதற்கென நியமிக்கப்படும் வரதட்சிணை ஒழிப்பு அதிகாரியிடம், ஒப்படைக்க வேண்டும்.இதைச் செய்யத் தவறும்பட்சத்தில், ஆறு மாதம் முதல் ஒரு ஆண்டு வரை சிறைத் தண்டனை வழங்கப்படும். அதே நேரத்தில், வரதட்சிணை கேட்டுக் கொடுமைப்படுத்தும் குற்றத்துக்கான சிறைத் தண்டனை ஐந்தாண்டிலிருந்து ஏழு ஆண்டாக உயர்த்தப்படும். ஆனால், வரதட்சிணை தருவோருக்கான தண்டனையை ஐந்தாண்டிலிருந்து ஒரு ஆண்டாக குறைப்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

பெண்ணின் பெற்றோரே அதிகம் பாதிக்கப்படுவோராக இருப்பதால், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. வரதட்சிணை ஒழிப்பு சட்டத்தின் கீழ் புகார் செய்யும் பெண், அதற்கான நிவாரணம் பெறவும், வழிவகை செய்யப்படும். இச்சட்டத்தின் கீழ் குற்றம் நடந்த இடம் மட்டுமல்லாது வேறு இடத்தில் இருந்தும் புகார் செய்யலாம். பாதிக்கப்பட்ட பெண், தன் சொந்த



அல்லது தற்காலிக வீட்டில் இருந்து புகார் செய்ய அனுமதிக்கப்படும் போது அப்பெண், தன் பெற்றோரின் வீட்டில் இருந்து கொண்டும், சுதந்திரமாக புகார் செய்யலாம். அப்பெண்ணின் பெற்றோர் மற்றும் உறவினர்களைப் பாதிக்கப்பட்ட நபர்கள் என வகைப்படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

# ஈரானுடன் மெத்தனப்போக்கு; அமெரிக்க ஜனாதிபதி மீது கண்டனம்



அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளராக மிட் ரோம்னி அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்ட நிலையில், உரை ஒன்றை நிகழ்த்தினார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் 6ஆம் திகதி நடைபெறுகிறது.

ஜனநாயகக் கட்சி சார்பில் ஜனாதிபதி ஒபாமா மீண்டும் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து குடியரசுக் கட்சி வேட்பாளராக மிட் ரோம்னி (வயது-65) களமிறங்குகிறார்.

ரோம்னியைத் தெரிவு செய்து அதிகாரப்பூர்வ வேட்பாளராக அறிவிக்க புளோரிடா மாகாணத்தில் உள்ள தாம்பாவில் குடியரசுக் கட்சியின் தேசிய மாநாடு நடந்தது.

பெரும்பான்மை உறுப்பினர்களால் வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்ட ரோம்னி பேசுகையில், எரிசக்தித் தேவையில் முற்றிலும் சுயசார்பு நாடாக அமெரிக்காவை மாற்றுவேன்.

நிதிப் பற்றாக்குறையைப் போக்கி 1.20 கோடி புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவேன்.

பிரச்சினையில் சிக்கித் தவிக்கும் அமெரிக்கப் பொருளாதாரத்தை வெற்றிகரமாக மீட்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது.

வெளியுறவு விவகாரங்களைப பொறுத்தவரை உலக நாடுகளுடன் அமெரிக்கா நம்பிக்கைக்குரிய கூட்டாளியாக இருப்பதை உறுதி செய்வோம். ஈரானின் அணு ஆயுத அச்சுறுத்தலை ஒபாமா தலைமையிலான அரசு தடுக்காமல் விட்டது. இது ஒவ்வொரு அமெரிக்கரையும் பாதுகாப்பற்ற நிலைக்கு தள்ளிவிட்டது.

சர்வதேச அளவில் ஈரானையும், சீனாவையும் ஒபாமா தலைமையிலான அமெரிக்க அரசு கடுமையாகக் கையாளத் தவறிவிட்டது.

உள்நாட்டிலும் ஒபாமாவின் கொள்கைகள், நடுத்தர மக்களுக்கும், வேலையற்ற மக்களுக்கும் உதவவில்லை. சிறுதொழிலுக்கான வரியை உயர்த்தியது வேலையின்மையை உருவாக்கிவிட்டது.

நிலக்கரி, எரிவாயு, எண்ணெய்த் துறையில் குளறுபடி செய்ததால் எரிபொருள் மற்றும் உற்பத்தித் துறை வேலைவாய்ப்புகள் சீனாவுக்கு மாறிவிட்டன என்று தெரிவித்தார்.

# மீண்டும் ஆட்சியைப் பிடிப்பேன்



மாலைதீவு ஜனாதிபதியாக மீண்டும் நான் பதவியேற்பேன் என முன்னாள் ஜனாதிபதி முகமது நசீத்(வயது-48) தெரிவித்துள்ளார்.

மாலைதீவு நாட்டில் கடந்த பெப்ரவரி மாதம் நீதிபதியை கைது செய்த விவகாரத்தில் ஆட்சியை இழந்தார் முன்னாள் ஜனாதிபதி முகமது நசீத்.

தற்போது துணை ஜனாதிபதியாக இருந்த முகமது வஹீத் ஜனாதிபதியாக உள்ளார். இந்நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது குறித்து அரசு சார்பில் நியமிக்கப்பட்ட விசாரணைக் கமிஷன் அறிக்கை கடந்த வியாழக்கிழமை வெளியாகியது.

இதில் மாலைதீவு நாட்டில் இராணுவம் ஆட்சியை கைப்பற்றவில்லை எனத் தெரியவந்துள்ளது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்த முகமது நசீத் ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இது குறித்து முன்னாள் ஜனாதிபதி முகமது நசீத் கூறுகையில், விசாரணைக் கமிஷன் அறிக்கையினை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் பொலிஸார் எனது ஆதரவாளர்கள் 29 பேரைக் கைது செய்து வழக்கு பதிவு செய்துள்ளனர். இதை ஏற்றுக்கொள்ள முடியாது.

அரசியலமைப்பு சட்டப்படி அடுத்த ஆண்டு(2013ஆம் ஆண்டு) ஜூலைக்குள் தேர்தல் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்தேர்தலில் எனது தலைமையிலான மாலைதீவு ஜனநாயக கட்சி(எம்.டி.பி) ஆட்சியைப் பிடித்து மீண்டும் ஜனாதிபதியாகப் பதவியேற்பேன் என்று தெரிவித்தார்.

உலகச் செய்திகள்

# அழிவடையும் இந்துக் கோவில்கள்; பழிதீர்க்கிறதா பாகிஸ்தான்?

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் உள்ள இந்துக் கோவில்களை சீரமைக்க அரசுக்கு உத்தரவிடக்கோரி மனு செய்யப்பட்டுள்ளது.

இந்திய- பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு ஏராளமான இந்துக் கோவில்கள் பாகிஸ்தானில் பராமரிக்கப்படாமல் உள்ளன. மாபியா கும்பல்கள் கோவில் நிலங்களை ஆக்ரமித்துள்ளன.

இந்தியாவில் இருந்த பாபர் மசூதி இடிப்பு சம்பவத்துக்குப் பிறகு பாகிஸ்தானில் பெரும்பாலான கோவில்கள் தரைமட்டமாக்கப்பட்டு விட்டன.



மீதமுள்ள கோவில்கள் சிதிலமடைந்து காணப்படுகின்றன. பஞ்சாப் மாகாணத்தில் உள்ள பாழடைந்த கோவில்களைச் சீரமைக்கவும், மாபியா கும்பல்களிடமிருந்து கோவில் நிலங்களை மீட்டு தரும் படியும் கோரி ஜாவீத் இக்பால் என்ற வழக்கறிஞர் லாகூர் உயர்நீதி மன்றத்தில் மனுச் செய்துள்ளார்.

# அமெரிக்காவை உலுக்கிய மர்ம மனிதன்

அமெரிக்காவின் நியூஜெர்சி மாகாணத்தில் உள்ள வணிக வளாகத்தில் நேற்று முன்தினம் காலையில் புகுந்த மர்ம மனிதன் திடீரென அங்கிருந்த பொதுமக்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

நியூஜெர்சி மாகாணத்தில் உள்ள வணிக வளாகத்தில் காலையில் புகுந்த மர்ம மனிதன் திடீரென பொதுமக்களை நோக்கி சுடத் தொடங்கினான். இதனால் மக்கள் அலறியடித்தபடி ஓட்டம் பிடித்தனர்.




மேலும் தோட்டாக்கள் தாக்கியதில் சூப்பர் மார்க்கெட்டின் ஜன்னல்கள் நொறுங்கின. இச்சம்பவம் பற்றி தகவல் அறிந்ததும் ஏராளமான பொலிஸார் சூப்பர் மார்க்கெட்டை சுற்றி நிறுத்தப்பட்டனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

இந்தச் சம்பவத்தில் துப்பாக்கியுடன் வந்த மர்ம நபர் உள்ளிட்ட 3 பேர் இறந்ததாக முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் பலர் இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

# விபத்தில் சிக்கியது விமானம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் நடந்த இரண்டு விமான விபத்துகளிலும் பயணிகள் எவ்வித சேதமுமின்றி அதிரஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளன.

பாகிஸ்தான் சர்வதேச விமான நிறுவனத்தின் பயணிகள் விமானமொன்று 48 பயணிகளுடன் லாகூரில் இருந்து இஸ்லாமாபாத்துக்கு புறப்படத் தயாராக இருந்தது.

அப்போது மழை பெய்து ஓடுபாதை ஈரமாக இருந்ததால், நிலைதடுமாறி சறுக்கியபடியே சென்ற விமானம் ஓடுபாதையை விட்டு விலகி தரையில் மோதி நின்றது.

இதனால் விமானம் சேதமடைந்தது. ஆனால் பயணிகள் அதிர்ஷ்டவசமாக காயம்இன்றித் தப்பினர்.

விபத்தினால் பாதிக்கப்பட்ட ஓடுபாதை உடனடியாக மூடப்பட்டது. இதனால் பல விமானங்கள் தாமதமாக புறப்பட்டு சென்றன. அவசர காலத்தில் பயன்படுத்தக்கூடிய மற்றொரு ஓடுபாதை வழியாக விமானங்கள் சென்றன.

மழை பெய்தது ஒரு காரணமாக இருந்தாலும், ஓடுபாதையின் முனையில் விமானத்தை நிறுத்த விமானி முயன்றதால் விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகமும் எழுந்துள்ளது. இதுபற்றி விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

இதே போன்று குவைத்தில் இருந்து லாகூர் நோக்கி வந்து கொண்டிருந்த பாகிஸ்தான் விமானம், தொழில்நுட்ப கோளாறு காரணமாக குவெட்டா விமான நிலையத்தில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது.



இந்த விமானத்தில் வந்த 196 பயணிகளும் பத்திரமாக இறக்கப்பட்டனர். விமானங்களைச் சரியாகப் பராமரிக்காததால் பல நேரங்களில் விமானங்கள் தாமதமாக புறப்படுவது, இரத்துச் செய்வது போன்ற பிரச்சினைகள் ஏற்படுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

# திருமண உறவு உடைவது ஏன்?

மனைவிக்கு உதவியாக பாத்திரம் கழுவாததாலும், அழுக்குத் துணிகளைத் துவைத்து தராததாலும் 30 சதவிகித விவாகரத்து ஏற்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

லண்டனைச் சேர்ந்த 'டெய்லி எக்ஸ்பிரஸ்' என்ற நாளிதழ் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில், தற்போதுள்ள அவசரமான சூழ்நிலையில் வேலைக்குச் சென்று விட்டு, வீடு திரும்பும் பெண்கள் மீண்டும் வீட்டு வேலைகளை தொடர சிரமப்படுகின்றனர்.

அந்த நேரத்தில் கணவனின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றனர். இது நிறைவேறாத பட்சத்தில் கருத்து வேறுபாடு ஏற்பட்டு விவாகரத்தில் முடிகிறது.

பாத்திரங்களைக் கழுவாமல் வைத்திருப்பது, அழுக்குத் துணிகளை அதற்குரிய கூடையில் போடாமல் கண்ட இடத்தில் போடுவது போன்ற பிரச்சினைகளால் ஒரு மாதத்தில் கணவன் - மனைவி இடையே குறைந்த பட்சம் மூன்று முறை சண்டை ஏற்படுகிறது.

இந்தச் சண்டை மாதக் கணக்கில் நீளும்போது மணமுறிவு ஏற்படுகிறது. இந்தச் சிறிய பிரச்சினைக்காக 30 சதவிகிதமானவர்கள் விவாகரத்து செய்கின்றனர்.

மேற்கண்ட விடயங்களை ஒப்பிடுகையில், பணப் பிரச்னையால் ஏற்படும் விவாகரத்துக்களின் எண்ணிக்கை குறைவு என்பதோடு நகர்புறங்களில்தான் 56 சதவிகித விவாகரத்துகள் இந்த விடயத்துக்காக நிகழ்கின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தொழில் நுட்ப திருட்டு; நீதிமன்ற வழக்கு தள்ளுபடி

அமெரிக்காவின் அப்பிள் நிறுவனத்தின் மொபைல் போன் மொடல்களில் உள்ள மென்பொருள் தொழில்நுட்பம் மற்றும் வடிவமைப்பை தென்கொரியாவின் சாம்சங் பயன்படுத்தியதாகவும், காப்புரிமை பெற்ற இந்தத் தொழில்நுட்பத்தை திருடியதற்கு 5000 கோடி ரூபாய் நஷ்டஈடு வழங்க உத்தரவிடக் கோரியும் பல்வேறு நாடுகளில் உள்ள நீதிமன்றங்களில் வழக்குத் தொடரப்பட்டது.

இந்நிலையில் ஐ.என்.சி ஸ்மார்ட் போன் மற்றும் டேப்லட் கம்ப்யூட்டர் போன்றவற்றில் வீடியோ மற்றும் இசை பதிவுகளை பரிமாறும் மென்பொருள் தொழில்நுட்பத்தைத் திருடியதாக, சாம்சங்குக்கு எதிராக டோக்கியோ நீதிமன்றத்தில் அப்பிள் சார்பில் தொடரப்பட்ட வழக்கில் நேற்று முன்தினம் தீர்ப்பளிக்கப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிபதி டமோட்சு ஷாஜி, சாம்சங் மற்றும் அப்பிள் நிறுவனங்களின் தயாரிப்புகளில் உள்ள தொழில்நுட்பங்கள் ஒரே மாதிரியானவையாக இல்லை. எனவே அப்பிள் நிறுவனத்தின் குற்றச்சாட்டு நிராகரிக்கப்படுகிறது எனக் கூறி மனுவை தள்ளுபடி செய்தார்.

# அனுமதி கிடைத்த போதிலும் மின்சாரம் கிடைக்கவில்லை

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் வடக்கின் வசந்தம் மின் இணைப்புக்கு மின் அத்தியட்சகரின் பிராந்திய அலுவலக அனுமதி கிடைத்த பலருக்கு இதுவரை மின் இணைப்பு செய்யப்படவில்லை என பொது மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பாக கிளிநொச்சி மின்சார சபை வட்டாரங்களை அணுகி கேட்ட போது தற்போது ஒரே ஒரு ஒப்பந்தகாரர் மட்டுமே இணைப்புக்களை மேற்கொள்வதாகவும் அவரால் மின் இணைப்பு வழங்குவதில் சில காலதாமதங்கள் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வடக்கின் வசந்தம் ஊடான மின் இணைப்புக்கு விண்ணப்பங்கள் வழங்கி சுமார் 10 மாதங்களின் பின்னரே இதற்கான அனுமதி வழங்கப்படுவதாக மின் பாவனையாளர்கள் கூறுகின்ற அதேவேளை மின் அனுமதி பெறப்பட்டு பின்னர் இணைப்பு செய்வதற்கும் பல மாதங்கள் காத்திருக்க வேண்டிய நிலை இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே இது தொடர்பில் பொறுப்பானவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர். (28)

# சைக்கிள் கூடையிலிருந்து மாயமாய் மறைந்த பணம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியிலுள்ள ஹற்றன் நஷனல் வங்கிக் கிளைக்கு முன்னால் பெண் ஒருவரின் ஒரு தொகைப் பணம் கைப்பையுடன் காணாமற்போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பாக தெரியவருவதாவது,

ஹலோரஸ்ட் கண்ணிவெடி அகற்றும் பிரிவில் பணியாற்றும் துஷ்யந்தி என்ற பெண் தனது மாதாந்த சம்பளக் கொடுப்பனவை குறிப்பிட்ட வங்கியில் பெற்று வங்கிக்கு முன்னால் தனது துவிச்சக்கரவண்டி கூடையில் பணத்துடன் கைப்பையை வைத்துவிட்டு மிக அருகிலுள்ள கடையொன்றில் பொருள் கொள்வனவு செய்துவிட்டு திரும்பி வருவதற்கிடையில் கூடையிலிருந்த கைப்பை களவாடப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் கடந்த மாதம் 30 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. (28)

# புலிகளை எதிர்கொள்வது எப்படி? அமெரிக்க உதவி பெற்ற ரணில்

விடுதலைப் புலிகளுடன் போர் நிறுத்த உடன்பாடு செய்து கொண்ட பின்னர், ரணில் விக்கிரமசிங்க அமெரிக்கப் புலனாய்வு அதிகாரிகளை இலங்கைக்கு அழைத்து வந்து புலிகளை எதிர்கொள்வது தொடர்பில் ஆலோசித்தார் என இராணுவ ஆய்வாளர்களில் ஒருவரான சமிந்திர பெர்னான்டோ தகவல் வெளியிட்டுள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றில் அவர் எழுதியுள்ள கட்டுரை ஒன்றிலேயே இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளார். ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோது, இராணுவத்தினருக்கு நிபுணத்துவ இராணுவக் கல்வியை வழங்குவதற்காக அமெரிக்காவை அழைக்க முடிவு செய்தார்.

இதனடிப்படையில் அமெரிக்காவின் சி.ஐ.ஏ. எனப்படும் மத்திய புலனாய்வுச் சேவை பிரதிநிதிகள் உள்ளூர் புலனாய்வு சமூகத்துக்கு ஆலோசனை வழங்குவதற்காக அழைக்கப்பட்டனர்.

உள்ளகப் புலனாய்வுப் பணியக மற்றும் இராணுவப் புலனாய்வுப் பணியக வாராந்தக் கூட்டங்களில் அமெரிக்கப் பிரதிநிதிகள் கலந்து கொள்ள இந்த சர்ச்சைக்குரிய முடிவு வழிவகுத்தது.

புலனாய்வுக் கூட்டங்களில் அமெரிக்கப் பிரதிநிதிகள் அமர்ந்திருப்பது குறித்து முன்னர் புலனாய்வுப் பணிப்பாளராக இருந்த ஓய்வுபெற்ற பிரதிப் பொலிஸ் மா அதிபர் மெரில் குணரத்ன கவலையை வெளிப்படுத்தியதால் ஐ.தே.க. அரசின் சீற்றத்தை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

விடுதலைப் புலிகளின் மரபு வழி இராணுவ பலத்தை எதிர்கொள்வதற்கு அப்போது இலங்கை அரசுக்கு அனைத்துலக சமூகத்தில் தங்கியிருப்பதை விட வேறு தெரிவு இருக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

# நகைகள் ஏலத்தில்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மக்கள் வங்கியில் 30.06.2012 வரை அடகு வைக்கப்பட்டு இதுவரை மீட்கப்படாத அடகு நகைகள் எதிர் வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் மாலை 4.30 மணிவரை மக்கள் வங்கிக் கிளிநொச்சி கிளை கட்டடத்தில் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படும் என மக்கள் வங்கி முகாமையாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (77)

# தொலைத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்

(கிளிநொச்சி)

சுந்தரலிங்கம் சாமினி R.D.O விடுதி குருமன்காடு வவுனியா (907641201V) இலக்கமுடைய அடையாள அட்டையுடன் கைப்பை 30-9735 இலக்க போக்குவரத்து வண்டியிலிருந்து இரணைமடு நோக்கி சென்று கொண்டிருந்தபோது கண்டெடுக்கப்பட்டதாக பஸ் நடத்துநர் தெரியப்படுத்தியிருந்தார்.

தொலைத்தவர்கள் 0777794887 இலக்க தொலைபேசியூடாக தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (77)



அச்சுவேலிப் பிரதேச வைத்தியசாலைக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட ஈ.பி.டி.பி.யின் கோப்பாய் பிரதேச அமைப்பாளரும், வலி. கிழக்குப் பிரதேச சபையின் எதிர்கட்சித் தலைவருமான இராமநாதன் ஐங்கரன் வைத்தியசாலை குறைபாடுகள் தொடர்பாகக் கேட்டறிந்து கொண்டார். இதன்போது ஈ.பி.டி.பி.யின் அச்சுவேலி அமைப்பாளர் எஸ்.பி.எம்.தர்மராசா, வலி. கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் க.சந்திரபோஸ் ஆகியோர் உடனிருந்தனர்.

# சம்பூர் அனல் மின் திட்டம் டிசம்பரில் ஆரம்பம்

(கொழும்பு)

இந்திய - இலங்கை கூட்டு முயற்சியில் சம்பூரில் அனல் மின் நிலையத்தை அமைப்பதற்கான திட்டம் எதிர்வரும் டிசம்பர் மாதம் ஆரம்பமாகக் கூடுமென மின்சார சபைத் தலைவர் விமலதர்ம அபேவிக்கரம தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் இருந்து வெளியாகும் ஊடகம் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்தத் திட்டத்துக்கான சாத்திய ஆய்வு அறிக்கை தயாராகியுள்ளது.

இரு நாட்டு அரசாங்கங்களும் செப்ரெம்பரில் மின் கொள்முதல் உள்ளிட்ட விடயங்களை உள்ளடக்கிய உடன்பாடுகளில் கையெழுத்திட வாய்ப்புகள் உள்ளன. அனல்மின் நிலையத்தை அமைக்கும் பணிகள் வரும் செப்ரம்பரில் ஆரம்பிக்கக் கூடும் என் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வாக்காளர் தொகை....

குருணாகல் மாவட்டத்தில் 12 இலட்சத்து 16 ஆயிரத்து 286 பேரும், புத்தளம் மாவட்டத்தில் 5 இலட்சத்து 17 ஆயிரத்து 557 பேரும், அநுராதபுரம் மாவட்டத்தில் 6 இலட்சத்து 6 ஆயிரத்து 508 பேரும், பொலனறுவை மாவட்டத்தில் 2 இலட்சத்து 94 ஆயிரத்து [illegible]5 பேரும்,

பதுளை மாவட்டத்தில் 5 இலட்சத்து 91 ஆயிரத்து 292 பேரும், மொனராகலை மாவட்டத்தில் 3 இலட்சத்து 19 ஆயிரத்து 557 பேரும், இரத்தினபுரி மாவட்டத்தில் 7 இலட்சத்து 69 ஆயிரத்து 814 பேரும், கேகாலை மாவட்டத்தில் 6 இலட்சத்து 31 ஆயிரத்து 981 பேரும் இவ்வாறு இறுதியாண்டில் பதிவு செய்யப்பட்டிருப்பதாகத் தேர்தல்கள் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நாட்டிலுள்ள 22 தேர்தல் மாவட்டங்களிலும் 18 தேர்தல் மாவட்டங்களில் மொத்தமாக 94 ஆயிரத்து 611 வாக்காளர்கள் மேலதிகமாக பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் 4 தேர்தல் மாவட்டங்களில் மொத்தமாக 48 ஆயிரத்து 837 வாக்காளர்கள் குறைவடைந்திருக்கிறார்கள்.

கொழும்பு மாவட்டத்தில் 29 ஆயிரத்து 821 வாக்காளர்களும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 2 ஆயிரத்து 449 வாக்காளர்களும், வன்னி மாவட்டத்தில் 15 ஆயிரத்து 40 வாக்காளர்களும், திருகோணமலை மாவட்டத்தில் ஆயிரத்து 527 வாக்காளர்களும் என இவ்வாறு குறைவடைந்துள்ளனர்.

அதேநேரம் கம்பஹா மாவட்டத்தில் 8 ஆயிரத்து 805 வாக்காளர்களும், களுத்துறை மாவட்டத்தில் 7 ஆயிரத்து 983 வாக்காளர்களும், கண்டி மாவட்டத்தில் 4 ஆயிரத்து 686 வாக்காளர்களும், மாத்தளை மாவட்டத்தில் 5 ஆயிரத்து 684 வாக்காளர்களும், நுவரெலியா மாவட்டத்தில் 5 ஆயிரத்து 583 வாக்காளர்களும், காலி மாவட்டத்தில் 5 ஆயிரத்து 677 வாக்காளர்களும், மாத்தறை மாவட்டத்தில் 2 ஆயிரத்து 90 வாக்காளர்களும், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 3 ஆயிரத்து 858 வாக்காளர்களும்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 349 வாக்காளர்களும், திகாமடுல்ல மாவட்டத்தில் 5 ஆயிரத்து 139 வாக்காளர்களும், குருணாகல் மாவட்டத்தில் 6 ஆயிரத்து 963 வாக்காளர்களும், புத்தளம் மாவட்டத்தில் 7 ஆயிரத்து 843 வாக்காளர்களும், அநுராதபுரம் மாவட்டத்தில் 8 ஆயிரத்து 234 வாக்காளர்களும்,

பொலனறுவை மாவட்டத்தில் 3 ஆயிரத்து 871 வாக்காளர்களும், பதுளை மாவட்டத்தில் 951 வாக்காளர்களும், மொனராகலை மாவட்டத்தில் 4 ஆயிரத்து 105 வாக்காளர்களும், இரத்தினபுரி மாவட்டத்தில் 8 ஆயிரத்து 478 வாக்காளர்களும்,

கேகாலை மாவட்டத்தில் 2 ஆயிரத்து 312 வாக்காளர்களும் மேலதிகமாகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றனர்.

கொழும்பு மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையாக 29 ஆயிரத்து 821 வாக்காளர்கள் குறைவடைந்துள்ள நிலையில் கம்பஹா மாவட்டத்தில் அதிகூடிய எண்ணிக்கையாக 8 ஆயிரத்து 805 வாக்காளர்கள் மேலதிகமாகப் பதிவாகியிருக்கின்றனர்.

## ஜனாதிபதி...

தெரிவித்ததாக இந்திய இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

மத்தியப் பிரதேசம் சாஞ்சியில் நடைபெறவுள்ள புத்த பல்கலைக்கழக திறப்பு விழா நிகழ்வில் கலந்துகொள்ளும் வகையிலேயே ஜனாதிபதியின் விஜயம் அமையவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இராணுவ...

சுமார் ஒன்றரை மணிநேரம் இடம்பெற்ற இச்சந்திப்பில் பாதுகாப்புப் படையினருக்கான கல்லூரியில் கட்டடமொன்றை நிர்மாணிப்பதற்கும் 1564 மில்லியன் ரூபாவை வழங்குவதாகவும் அவர் உறுதியளித்தார். இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றும் கையெழுத்திடப்பட்டது.

பாதுகாப்புச் செயலாளரின் வேண்டுகோளுக்கிணங்க, படையினரின் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்வதற்கான உதவிகளை வழங்கவும் சீனப் பாதுகாப்பு அமைச்சர் குவாங்லீ உறுதியளித்தார்.

யுத்தத்தின் பின்னரான காலத்தில் இலங்கை அரசாங்கம் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் பயங்கரவாதத்தை தோற்கடித்ததன் பின்னர் அடைந்துள்ள வெற்றிகள் குறித்து சீனத் தூதுக்குழுவினருக்கு பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ விளக்கமளித்தார்.

## 'வாத்து வாளி'...

கலைந்து குழந்தையைக் காணாத நிலையில் அனைத்து இடங்களிலும் தேடிப் பார்த்தபோதிலும் குழந்தை கிடைக்கவில்லை. பின்னர் கிணற்றடியில் சென்று பார்த்த வேளை தண்ணீர் நிரம்பிய வாத்து வாளியில் குழந்தை இறந்த நிலையில் காணப்பட்டது.

வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட பின்னர் நேற்றிரவு சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. (116)

## கூட்டமைப்பின்...

உரைக்கு மன்னார் நகர சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் மெரினஸ் பெரேரா கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றினார்.


நகர சபை உறுப்பினர் ஆகிய நான் ஒரு கத்தோலிக்கன் என்ற வகையிலும் இளைஞன் என்ற வகையிலும் நாடாளுமன்ற உறுப்பினரின் குறித்த உரைக்கு எனது வன்மையான கண்டனத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மதத்தலைவர்கள் ஆன்மீகத்தில் மட்டுமன்றி இன விடுதலைக்காகவும் சமூகத்திற்காகவும் போராடியவர்கள். போராடுபவர்கள். அவர்கள் தம்மை அதற்காகவே அர்ப்பணித்துள்ளனர். இப்படிப்பட்ட மதத்தலைவர்கள் சிலரை நாம் இன்று இழந்து நிற்கின்றோம். இப்படிப்பட்ட மதத்தலைவர்கள் தொடர்பில் உரையாற்றியமைக்கு நான் வன்மையாக கண்டனம் தெரிவிக்கிறேன்.

தமிழரசுக் கட்சியின் குறித்த நாடாளுமன்ற உறுப்பினர் கொச்சைத்தனமாக பேசியிருக்கின்றார்.

எனவே அவருடைய உரைக்கு தான் வன்மையான கண்டனத்தை முன்வைப்பதாக மன்னார் நகர சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் மெரினஸ் பெரேரா தெரிவித்தார். குறித்த கண்டனத் தீர்மானத்தை மன்னார் நகர சபையின் தலைவர், உப தலைவர், ஆளுந்தரப்பு, எதிர்த் தரப்பு உறுப்பினர்கள் ஏகமனதாக நிறைவேற்றினர்.

# இலவசக் கல்விக்கு ஆப்பு அரசு மீது ரணில் பாய்ச்சல்



(கொழும்பு)

இந்த நாட்டிற்கு இலவசக் கல்வியை ஐ.தே.க.தான் வழங்கியது. ஆனால் இந்த அரசாங்கம் இலவசக் கல்வியை இல்லாதொழிக்க திட்டமிட்டுச் செயற்படுகிறது என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மூதூர் பொது மைதானத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு கூறினார.

தொடர்ந்து உரையாற்றிய அவர்,

இன்று அரசாங்கத்தினால் ஒரு பரீட்சையைக் கூட முறையாக நடத்த முடியவில்லை. அண்மையில் நடத்திய புலமைப் பரிசில் பரீட்சைக்கான வினாப்பத்திரம் பரீட்சைக்கு முன்பே வெளியாகிவிட்டது. அதேபோல் நடைபெற்ற சாதாரணதர, உயர்தர பரீட்சைகளிலும் பிரச்சினைகள் எழுந்துள்ளன. "இஸட் ஸ்கோர்" பிரச்சினை இன்னும் முடிந்தபாடில்லை.

அரசாங்கம் பல்கலைக் கழகங்களை இழுத்து மூடியுள்ளது. மாணவர்களும் விரிவுரையாளர்களும் வீதியில் இறங்கி உரிமைக்காக போராடுகின்றனர். கூடுதலான பணத்தைச் செலவு செய்யவேண்டிய கல்விக்கு மிகக குறைந்தளவு பணத்தையே அரசாங்கம் செலவிடுகிறது.

முறையான அபிவிருத்தித் திட்டங்கள் எதனையும் அரசாங்கம் முன்னெடுக்கவில்லை. சமுர்த்தி திட்டத்தையும் இல்லாமற் செய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது.

இன்று மக்கள் சுதந்திரமாக வியாபாரத்தையோ மீன்பிடித் தொழிலையோ செய்ய முடியாதவர்களாக உள்ளனர். இப்பகுதியில் கைவிடப்பட்ட வயல் நிலங்களில் வீடுகள் அமைப்பதற்கு கூட தடை விதித்துள்ளனர் என மேலும் தெரிவித்தார்.

# இலங்கை இராணுவ அதிகாரிகளை திருப்பி அனுப்ப நடவடிக்கை

## அமைச்சர் வாசன் தெரிவிப்பு

தமிழகம் - வெலிங்டன் இராணுவ மையத்தில் பயிற்சி பெற்றுவரும் இலங்கை இராணுவ அதிகாரிகளைத் திப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென இந்தியக் கப்பல்துறை அமைச்சர் ஜி.கே.வாசன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்றைய தினம் நிருபர்களுக்குப் பேட்டியளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

தமிழ்நாட்டில் பயிற்சி பெறும் இலங்கை இராணுவ அதிகாரிகளை விரைவில் திருப்பி அனுப்ப உரிய நடவடிக்கை எடுக்கப்படும். எதிர்காலத்தில் இதுபோல் நடைபெறாமல் இருக்கவும் உரிய ஏற்பாடுகள் செய்யப்படும். மத்திய இராணுவ அமைச்சரவையில் சந்தித்து இது குறித்து விளக்கமாக எடுத்துக் கூறுவோம்.

இலங்கை இராணுவ அதிகாரிகளைத் திருப்பி அனுப்ப வேண்டும் என்பதில் தமிழக காங்கிரசும் உறுதியாக உள்ளது என அவர் மேலும் கூறினார்.

# புலமைப் பரிசில் பரீட்சை மோசடி தெரிந்தவர்கள் அறிவிக்கலாம்

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை இடம்பெற்ற தினத்தன்று வினாத்தாள் முன்கூட்டியே வெளியானதாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்து தகவல் அறிந்தவர்களின் உதவியை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கோரியுள்ளனர்.

இதன்படி, தகவல் அறிந்தோர் 011-2320141, 011-2320142, 011-2320143 போன்ற தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பை ஏற்படுத்தி தகவல் வழங்க முடிவதோடு 011-2326937 என்ற இலக்கத்திற்கு தொலைநகல் செய்ய முடியும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் கூறியுள்ளது.

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் [illegible] இடம் பெற்றுள்ளதாக ஊடகங்கள் வாயிலாகக் குற்றம் சுமத்திய [illegible] ஆசிரியர் சங்கச் செயலாளர் மஹிந்த ஜயசிங்கவை கடந்த [illegible] 28,29,30,31 மற்றும் இம்மாதம் 4 திகதிகளில் வாக்குமூலம் அ[illegible]க வருமாறு அழைப்பு விடுத்தும் இதுவரை அவர் சமூகமளிக்கவில்லை என குற்றப்புலனாய்வுப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் மோசடி இடம் பெற்றமை குறித்த விசாரணையை நிறைவுசெய்ய மஹிந்த ஜயசிங்கவின் வாக்குமூலம் அவசியமானதெனக் குற்றப்புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது. எனவே நீதிமன்ற ஆணைப்படி அவரை வாக்கு மூலம் அளிக்க அழைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவு கூறியுள்ளது.

# விதிமுறைகளை மீறிய வர்த்தகர்கள் செலுத்தினர் ஒன்பது இலட்சம்

(திருநெல்வேலி)

யாழ் மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதம் முதல் ஆகஸ்ட் மாதம வரை வியாபார விதிமுறைகளை மீறி வியாபாரம் செய்த வர்த்தகர்களிடமிருந்து 9 இலட்சத்து 16 ஆயிரம் ரூபா நீதிமன்றத்தினால் தண்டப்பணமாகப் பெற்றுக் கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

யாழ். மாவட்ட பாவனையாளர் அதிகார சபையின் உத்தியோகத்தர்களுடன் அதிகாரி என். சிவசீலன் தலைமையில் நடாத்தப்பட்ட திடீர் பரிசோதனை நடவடிக்கையின்போது கடந்த எட்டு மாதங்களில் 243 வர்த்தகர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு மேற்படி அபராதத் தொகை நீதிமன்றங்களினால் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி, யாழ்ப்பாணம், மல்லாகம், பருத்தித்துறை, ஊர்காவற்றுறை ஆகிய நியாயதிக்க எல்லைக்குட்பட்ட நீதிமன்றங்களில் இவ் வர்த்தகர்கள் மீதான வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இந் நீதிமன்றங்களில் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட 110 வழக்குகள் இம் மாதம் எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. பருத்தித்துறையில் தொடரப்பட்ட 19 வழக்குகள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 4 ஆம் திகதி விசாரிக்கப்படவுள்ளது. மேலும் சில வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குகள் தொடரப்படவுள்ளன.

விலைப்பட்டியலில் காட்சிப் படுத்தாமை நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் பார்க்கக் கூடுதலான விலைக்குப் பொருட்களை விற்பனை செய்தமை, காலாவதியான பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்தமை போன்ற குற்றச்சாட்டுக்கள் இவ் வர்த்தகர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன.

வியாபாரிகள் வியாபார விதிமுறைகளை மீறாத வகையில் தமது வர்த்தக நடவடிக்கைகளை அதிகார சபையின் யாழ். மாவட்ட அதிகாரி என்.சிவசீலன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பொருட்களின் விலை ஏற்றத்தின்போது விலைகளை மாற்றி அமைப்பது குற்றமாகும். பொருட்களில் குறிப்பிடப்பட்ட விலைக்கே அவை விற்கப்பட வேண்டும். மீறும் வர்த்தகர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அவர் மேலும தெரிவித்தார். (137)

## மின்கம்பத்துடன் மோதியது ஆட்டோ

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த ஆட்டோ நேற்று மாலை 5.15 மணியளவில் பாதையை விட்டு விலகி மின்கம்பத்துடன் மோதியது. இச் சம்பவத்தில் ஆட்டோவில் பயணித்த நால்வரும் சிறு காயங்களுக்குள்ளானதுடன் ஆட்டோவின் முற்பகுதி பாரிய சேதத்திற்கு உள்ளானது. (17)

# மன்னார் கூராய்கிராமத்திற்கு போக்குவரத்துச் சேவை ஆரம்பம்



மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட கூராய் கிராமத்திற்கான போக்குவரத்துச் சேவை ஒன்றை மன்னார் தனியார் போக்குவரத்துச் சங்கம் நேற்றுக் காலை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்துள்ளது.

இலுப்பைக்கடவை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதீப் விஜய சேகர; குறித்த கிராம மககள் எதிர்நோக்கும் போக்குவரத்துப் பிரச்சினைகள் தொடர்பாகவும் அதனை நிவர்த்தி செய்யும் வகையில் அவர் மேற்கொண்ட முயற்சியின் பலனாகவும் குறித்த சேவை நேற்றுக் காலை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக மன்னார் தனியார் பேருந்து சங்கத்தின் தலைவர் ரீ.ரமேஸ் தெரிவித்தார்

குறித்த சேவை கூராய் கிராமத்தில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன்போது இலுப்பைக் கடவை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதீப் விஜய சேகர, மன்னார் தனியார் பேருந்து சங்கத்தின் தலைவர் ரீ.ரமேஸ், கூராய் கிராம சேவகர் ஏ.லோகநாதன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

குறித்த தனியார் பேருந்து சீதுவிநாயகர்புரம், கூராய், ஆத்தி மோட்டை, புதுக்குளம், விடத்தல் தீவு, அடம்பன், ஆண்டாங்குளம் ஊடாக மன்னாரைச் சென்றடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாகக் குறித்த கிராம மக்கள் போக்கு வரத்துச் சேவைகள் எவையும் இன்றித் தொடர்ந்தும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வந்தனர்.

இந்த நிலையில் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு குறித்த் சேவை ஆராம்பிக்கப் பட்டதாக மன்னார் தனியார் பேருந்து சங்கத்தின் தலைவர் ரீ.ரமேஸ் மேலும் தெரிவித்தார்.

# தீவிரவாத இயக்கங்களுக்கு ஆயுதங்கள் கிடைப்பது எப்படி?

## விசாரணை வேண்டும் என்கிறார் சவேந்திரா

தீவிரவாத அமைப்புக்களுக்கு ஆயுதம் கிடைக்கப்பெற்ற வழிகள் குறித்து உடனடியாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான இலங்கை பிரதி வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் விடுதலைப் புலிகள் மிகச் சுலபமாக ஆயுதங்களைக் கொள்வனவு செய்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சிறிய மற்றும் இலகு ரக ஆயுத பாவனை தொடர்பான ஐக்கிய நாடுகள் கூட்டத் தொடரில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இக்கருத்துக்களை வெளியிட்டார்.

யுத்தம் இடம்பெற்ற காலத்திலும் அதன் பின்னரும் விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட ஆயுதங்களின் மூலம், சர்வதேசத்தில் ஆயுதங்கள் எவ்வாறு மலிந்து கிடக்கின்றன என்பது தெளிவாக புலனாவதாக சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். எனவே சட்ட விரோத ஆயுதப் பயன்பாட்டை தடுத்து நிறுத்த அனைத்து நாடுகளும் இணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தியுள்ளார்.

# தேவை

## வன்னிப் பிரதேச செய்தியாளர்கள்

**1. கிளிநொச்சி 2. அக்கராயன் 3. பூநகரி 4. முள்ளியவளை 5. முல்லைத்தீவு 6. மல்லாவி 7. துணுக்காய் 8. விசுவமடு 9. மாங்குளம், 10. கனகராயன்குளம், 11. புளியங்குளம் 12. நெடுங்கேணி, 13. வவுனியா 14. மன்னார், 15. மடு**

ஆகிய பிரதேசங்களிலிருந்து தினமுரசு பத்திரிகைக்குச் செய்தியாளர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

தெரிவுசெய்யப்படுவோருக்கு சிகரம் ஊடக இல்லத்தின் ஊடாக,

1. செய்தி சேகரிப்பு மற்றும் அறிக்கையிடல்
2. விற்பனை ஊக்குவிப்பு
3. விளம்பர சேகரிப்பு

ஆகிய துறைகளில் விசேட பயிற்சி வழங்கப்பட்டு, அதிகளவு வருமானம் பெற வழிகாட்டப்படுவதுடன், தேர்ச்சி பெறுபவர்கள் நிரந்தரப் பணியாளர்களாகவும் இணைத்துக்கொள்ளப்படுவர்.

⇨ முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.

⇨ க.பொ.த. சாதாரணதரம் வரையில் படித்த ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

ஆர்வமுள்ளவர்கள், சுருக்கமாகத் தயாரிக்கப்பட்ட சுயவிபரக் கோவையுடன், ஊடகத்துறையில் பணியாற்ற ஆர்வம் கொண்டமைக்கான காரணத்தை விளக்கும் சிறு ஆக்கத்தையும் இணைத்து பின்வரும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

**வன்னிப் பிரதேச செய்தியாளர்,**
**தினமுரசு,**
**373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 செப்ரெம்பர் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.